TG 241

# பரத நாட்டியம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி




அழகியற்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம் மகரகம

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரத நாட்டியம்
## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

# தரம் 09

அழகியல் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரத நாட்டியம்**
தரம் - 9 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

முதலாம் பதிப்பு - 2009

© தேசிய கல்வி நிறுவகம்

அழகியல் கல்வித்துறை
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

**வெளியீடு**
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
ப்ரின்ட்கெயார் பெகேஜிங் (பிரைவேட்) லிமிட்டட்டினால் அச்சிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பளைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்டும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் வுசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவலற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிக்ட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்ககூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதம் என உறுதியாக நம்புகின்றேன்.

**டபிள்யு.எம்.என்.ஜே. புஸ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
இசுருபாய
பத்தரமுல்ல
12.11.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப 2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும், அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில், அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்துகொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப் பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்ற, அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில் புதிய கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளல், இயலுமெனின் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காண முடிகின்றது. இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களுக்கு அமையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாற்றுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கின்போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக் கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர் சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற கஷ்டங்கள்/ இடையூறுகளை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக்கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் - கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவதும் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை, புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலோசகர் குழுவும் எழுத்தாளர் குழுவும்

| | | |
|---|---|---|
| **ஆலோசனை** | : | **பேராசிரியர் லால் பெரேரா**<br>பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்.<br><br>**திரு. விமல் சியம்பலாகொட**<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்<br>தேசிய கல்வி நிறுகவம். |
| **மேற்பார்வையும் வழிகாட்டலும்** | : | **திரு. சுதத் சமரசிங்ஹ**<br>பணிப்பாளர் - அழகியல் கல்வித்துறை |
| **ஒருங்கிணைப்பு** | : | **திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்**<br>உதவிச் செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம்.<br><br>**திரு.எஸ். வர்ணசிங்க**<br>செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம். |
| **எழுத்தாளர் குழு** | : | **திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்**<br>உதவிச் செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம்.<br><br>**கலாபூஷணம். திருமதி. லீலாம்பிகை செல்வராஜா**<br>ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் யாழ் - கல்வி வலயம் - 02<br><br>**திருமதி. ஷாமினி இராஜதுரை**<br>சிரேஷ்ட விரிஷுரையாளர்<br>ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரி, பத்தனை<br><br>**திருமதி. தயானந்தி விமலச்சந்திரன்**<br>ஆசிரிய ஆலோசகர் - மேல் மாகாணம் - கொழும்பு.<br><br>**திருமதி. பாரதி சிவயோகநாதன்**<br>கொ/ இராமகிருஷ்ண வித்தியாலயம் - கொழும்பு.<br><br>**திருமதி. வசந்தி நேரு**<br>ஆசிரியை - சிசிலியா பெண்கள் பாடசாலை - மட்டக்களப்பு<br><br>**திருமதி. மாதுமையாள் வரதராஜன்**<br>ஆசிரியை - கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை - கல்முனை<br><br>**திருமதி. சுபாஷினி சர்வேஸ்வரன்**<br>ஆசிரியை - புனித மரியாள் தமிழ் மகாவித்தியாலயம் - கொழும்பு 04. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **மீள் நோக்குக் குழு :** | **திருமதி. கமலேஸ்வரி தவராஜரட்ணம்**<br>உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கல்குடா<br><br>**திருமதி. ரி.கே.பத்திரன**<br>ஆசிரிய ஆலோசகர் - வலயக் கல்வி அலுவலகம் - கல்முனை<br><br>**செல்வி. உஷாந்தி துரைசிங்கம்**<br>விரிவுரையாளர்<br>சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் - கிழக்கு பல்கலைக்கழகம்<br><br>**திருமதி. ப.இரமணீகர சர்மா**<br>இணைக்கப்பட்ட விரிவுரையாளர்<br>தேசிய கல்வியியற் கல்லூரி<br>- தர்கா நகர்.<br><br>**திருமதி. தே. லோகநாதன்**<br>ஆசிரிய ஆலோசகர் - வலயக் கல்வி அலுவலகம் - அக்கரைப்பற்று |
| **மொழிப்பதிப்பு :** | **திரு. து. இராஜேந்திரம்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர் (இளைப்பாறிய)<br>திறந்த பல்கலைக்கழகம் |
| **கணினி கோர்ப்பும் வடிவமைப்பும் :** | **திருமதி. பா. சஜீதா இக்ராம்** |
| அட்டைப்பட **வடிவமைப்பு :** | **திரு.வி.என்.எஸ். உதயச்சந்திரன்** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | அறிமுகம் | xii |
| 02. | பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | xiv |
| 03. | வகுப்பிற்குரிய தேர்ச்சிகள் | xv |
| 04. | பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் | xvi |
| 05. | இணைப்பாட விதானச் செயற்பாடுகள் | xvii |
| 06. | தர உள்ளீடுகள் | xviii |
| 07. | கற்றல் - கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு | xix |
| 08. | பாடத்திட்டம் தரம் - 9 | xx - xxvii |
| 09. | கற்றல் - கற்பித்தல் முறைமை | xxix - xxxii |
| 10. | விரிவான பாடத்திட்டம் | |
| | தவணை 1 | 01 - 48 |
| | தவணை 2 | 49 - 82 |
| | தவணை 3 | 83 - 120 |
| 11. | கணிப்பீடும் மதிப்பீடும் | 121 - 123 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - I
## விரிவான பாடத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. அறிமுகம்

மாணவர் மையக் கற்றல் நடவடிக்கைகளுக்கேற்றவாறு நயத்தல், ஆக்கத்திறன், செயன்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி என்னும் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு தேர்ச்சிகளும், தேர்ச்சி மட்டங்களும் தீர்மானிக்கப் பட்டு ஒன்பதாம் தர (9ஆம்) பரதநாட்டியத்திற்குரிய புதிய பாடத்திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாணவரிடம் இயற்கையாக அமைந்துள்ள திறன்களை இனங்கண்டு. அவற்றை மேலும் மிளிரச் செய்வதற்கும் அதேவேளை ஆர்வமுள்ள ஆனால் சற்றுப் பின்தங்கிய மாணவர்களைத் தேர்ச்சியடையச் செய்வதற்கும், அவர்களின் தவறுகளைத் திருத்தி அம்மாணவர்களுக்குப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடச் செய்து உச்சத் தேர்ச்சியை அடையச் செய்வதற்கும், ஆளுமையான மாணவர்களை உருவாக்குவதற்கும் ஆசிரியர் முன்னுதாரணமாகத் திகழ வேண்டியது நடன பாடம் கற்பிக்கும் ஆசிரியரின் பொறுப்பாகும்.

கற்பித்தல் நுட்பங்கள், செயற்பாடுகள், தர உள்ளீடுகள் பற்றி ஏற்கனவே தீர்மானித்திருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட தொலைக்காட்சி, ஒலிப்பதிவுக் கருவி, கணினி என்பன கிடைக்கப் பெறாதவிடத்து ஆசிரியர் தாமாகவே பாடி, ஆடிக் காட்டுதல் அவசியமாகும்.

பாடசாலையின் தரம், பௌதிக வளம், மாணவரின் தன்மை, கிடைக்கப்பெறும் வளங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஆசிரியர் பாடத்திட்டத்தை நன்கு விளங்கி அதனைச் சரிவர அமுல்படுத்துவது ஆசிரியரின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.2. பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

01. பரதநாட்டியத்தின் அறிமுறை சார்ந்த அறிவினை விருத்தி செய்வதன் ஊடாக ஆடும் திறன், இரசிக்கும் ஆற்றல், விமர்சிக்கும் திறன் ஆகியவற்றை விருத்தி செய்தல்

02. பரத நாட்டியத்தின் செய்ம்முறை சார்ந்த அறிவினை வழங்குவதன் மூலம், அறிமுறை சார்ந்த அறிவினை விருத்தி செய்தல்

03. அறிமுறை சார்ந்த அறிவின் ஊடாக ஆடும் திறன், இரசிக்கும் திறன், விமர்சிக்கும் ஆற்றல் ஆகியவற்றை வளர்த்தல்

04. ஆற்றுகைத் திறன், உருப்படிக்கு ஏற்ப ஆடும் திறன், வடிவமைக்கும் திறன் என்பவற்றை விருத்தி செய்தல்

05. பரதநாட்டியத்தை இரசித்து அனுபவிக்கும் திறனை விருத்தி செய்வதுடன் ஏனைய நடன வகைகளை இரசித்து நயத்தல்

06. பரதநாட்டியத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றையும் அதன் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவர்களையும் அறிந்து சமூகப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணவும், ஆய்வுகளை மேற்கொள்ளவும் ஊக்குவித்தல்

07. அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் விருத்தியின் ஊடாக சமநிலை ஆளுமையை அடைவதற்கு உதவுதல்

08. பரதநாட்டியத்துக்கு ஊடாக தேசிய ஒருமைப்பாட்டையும் நல் இணக்கத்தையும் மேம்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.3. வகுப்பிற்குரிய தேர்ச்சிகள்

01. பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

02. பரத நாட்டியம், கிராமியம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளை வெளிக்கொணர்வார்.

03. பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

04. பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

05. பரத நாட்டியம், கிராமியம் ஆகிய நடனங்கள் பற்றியும், இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும், இவற்றின் இசை பற்றிய விளக்கத்தையும் அறிந்து வெளிப்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.4. பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச் சித்திட்டங்களும்

மாணவர்களது தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், தன் மனப்பாங்கு முதலியவற்றை விருத்தி செய்து கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் மாணவர் மையமாக்கப்பட்டு வகுப்பறைக் கற்பித்தல் தெளிவாக நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. உத்தேச குறிக்கோள்களை அடையக்கூடியவாறு பாடசாலை மட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை திட்டமிட்டு அமுற்படுத்துவது பயனுடையதாகும். பரத நாட்டியப்பாடம் தொடர்பாகப் பிரதேசத்தில் காணப்படும் மனித பௌதீக வளங்களையும் பயன்படுத்திப் பாடசாலைப் பயன்பாட்டுக்கு அமைவான பின்வரும் வேலைத்திட்டங்களை அமுற்படுத்துவதனூடாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செய்ம்முறைக் கேற்ப மாணவர் தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் மென்மேலும் பயனுடையதாக ஆக்கிக்கொள்ளலாம்.

### நேரசூசி

பரதநாட்டியம் அறிமுறையும், செய்ம்முறையும் இணைந்த ஒரு பாடமாகும். அறிமுறை அறிவில் மட்டும் தேர்ச்சி பெறல் பயனளிக்காது. மாணவர் செய்ம்முறையில் உயர் தேர்ச்சி மட்டத்தை அடையவேண்டும் என்பதால் நேரசூசியில் அதிக பாடவேளைகள் செய்ம்முறைப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பாடசாலையில் உள்ள வசதிக்கேற்ப செய்ம்முறைப் பயிற்சிக்காக இரு பாடவேளைகள் தொடர்ச்சியாகவும் வழங்கப்படலாம்.

### ஆசிரியர் தகைமைகள்

பரதநாட்டிய பாடத்தைக் கற்பிப்பதற்கு இத்துறையில் முறைப்படி பயிற்சி பெற்றவர்களே பொருத்தமானவர்களாவர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத பட்சத்தில் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், கர்நாடகசங்கீதத்துறையில் நிபுணத்துவம் பெற்ற மற்றொரு ஆசிரியரது உதவியைப் பெறல் இன்றியமையாததாகும்.

### அதிபரின் கற்பித்தல் தலைமைத்துவப்பங்கு

பாடசாலை அதிபர் ஒருவர் முகாமைத்துவத் தலைமைத்துவத்தோடு கற்பித்தல் தலைமைத்துவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். எனவே பரத நாட்டியத்தினைக் கற்பிப்பதற்குப் பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளல், இப்பாடத்தைக் கற்பிப்பதற்கென தனியான ஓர் அறையை ஒழுங்கு செய்தல், தேவைப்படும் தரஉள்ளீடுகள், பாடத்திட்டம், வழிகாட்டி நூல்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொடுத்தல் அவருடைய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்.

01. பரத நாட்டியம் கற்பிக்கும்போது ஒன்றிணைந்த தன்மை பேணப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதால் நடன ஆசிரியருக்கும் ஏனைய ஆசிரயர்கட்கும் இடையே தொடர்புபடுத்துவது இன்றியமையாதது ஆகும். இதற்கான ஏற்பாடுகள் அதிபரின் ஊடாக செய்யப்படுதல் வேண்டும். உதாரணம் தமிழ்மொழி தினம், பரிசளிப்பு விழா, நிகழ்ச்சிகளுக்கு நடன ஆசிரியரின் உதவியைப் பெறலாம்.

02. வருடத்தொடக்கத்திலேயே இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான திட்டம் வகுக்கப்படல். இலக்கிய மன்றங்கள், வகுப்பறை மாணவர் மன்றங்கள், கலா மன்றங்கள் போன்றவற்றை உருவாக்கி நடன நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்.

03. இவை தவிர வருடாந்த பாடசாலை வைபவங்களாகக் கொண்டாடப்படும் பரிசளிப்பு விழா, கலைவிழா, தமிழ்மொழித்தினவிழா, இலக்கியவிழா, சமயவிழாக்கள், நடன மன்றத்தின் நடனப்போட்டிகள் முதலானவற்றில் மாணவர் பங்குபற்றுவதற்கு மட்டு மன்றி தாமே சுயமாக நடன நிகழ்ச்சிகளை ஆக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல்.

04. சமுதாயத்தைப் பாடசாலைக்குள் கொண்டு வருவதற்கும் பாடசாலையை சமுதாயத் திற்குள் கொண்டு செல்வதற்கும் கலை, கலாசார நிகழ்ச்சிகள் ஊடகமாகக் கருதப்படுகின்றன. எனவே இத்தகைய நிகழ்ச்சிகளில் மாணவர் பங்களிப்புச் செய் வதற்கு வசதியும் வாய்ப்புகளும் வழங்கப்படுதல்.

05. கலை நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படுதல் மாணவர்களுடைய ஆக்கத்திறன் விருத்திக்கும் நயக்கும் திறனுக்கும் துணைபுரியும்.

06. நடன விற்பனவர்களின் பிறந்த தினத்தைக் கொண்டாடுதல் (திருமதி. Dr. ருக்மிணிதேவி அருண்டேல்)

07. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மாணவர் பங்குபற்றக் களம் அமைத்துக் கொடுத்தல்

08. பிரதேசத்தில் காணப்படும் கலையரங்கங்களைப் பார்வையிடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.5 தர உள்ளீடுகள் (கற்பித்தல் உபகரணங்கள்)

பரதநாட்டியப் பாட கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது கீழ்க்காணப்படுகின்ற தர உள்ளீடுகளைப் பயன்படுத்துவதும் விரும்பத்தக்கதாகும்.

- தட்டுக்கழி, தட்டுப்பலகை, நட்டுவாங்கத்தாளம்
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா
- வானொலி
- விளக்கப்படத்துடன் சஞ்சிகைகள்
- சுருதிப் பெட்டி
- மிருதங்கம்
- உடுக்கை
- வீணை
- நடனம் தொடர்பான நூல்கள்
- ஆடை ஆபரணங்கள்
- ஒப்பனைப் பொருட்கள்
- புகழ்பெற்ற நாட்டிய கலைஞரின் படங்கள்
- பாய், வெண்கட்டி, கோலாட்டக்கழிகள், பின்னல் கோலாட்டக் கயிறுகள்
- வீடியோ பெட்டிகைப் பதி கருவி
- தொலைக்காட்சிக் கருவி
- அலுமாரி
- பிறிசில் அட்டைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.6 கற்றல் - கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு

### தரம் - 09
### பாடத்திட்டம்

| பிரதான தேர்ச்சிகள் | பாடவேளைகள் |
|---|---|
| 1.0 நயத்தல் | 06 |
| 2.0 ஆக்கத்திறன் | 12 |
| 3.0 செய்ம்முறை | 52 |
| 4.0 அறிமுறை | 12 |
| 5.0 கலாசாரப் பின்னணி | 08 |
| **மொத்தம்** | 90 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. பாடத்திட்டம் - தரம் 9

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 1.0<br>பரத நாட்டிய நிகழ்ச்சி களையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளை யும் பார்த்துத் தாம் நயத்தவற்றை வெளிப் படுத்துவார். | 1.1<br>வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் மூலம் வெளிக் 'கொணரப்படும் கலை நிகழ்ச்சிகளிற் தாம் நயத்த வற்றை வெளிப்படுத்து வார். | • சாஸ்திரிய நடனம் கிராமிய நடனம் ஆகியவற்றிலுள்ள இசையை இரசித்தல் | 02 |
| | 1.2<br>பரத நாட்டியம் மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சி களையும், பாடசாலைக் கலை நிகழ்ச்சிகளில் இடம் பெறும் நடன நிகழ்ச்சிகளையும் இனங் கண்டு இரசித்தவற்றை வெளிப்படுத்துவார். | • கூத்து | 02 |
| | 1.3<br>கலை நிறுவனங்களினால் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளிலும், நடனப் போட்டிகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளிலும் தாம் நயந்த வற்றைக் கூறுவார். | • வாத்திய இசை<br>• வாய்ப்பாட்டிசை | 02 |
| 2.0<br>சூழலில் காணப்படு கின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார். | 2.1<br>இயற்கைச் சூழலிலுள்ள நிகழ்வுகளையும், உயிரினங்களையும் இனங்கண்டு பாவனை செய்து காட்டுவார். | • இயற்கை அம்சங்கள் (தாவரங்கள்)<br>• மரம்<br>• செடி<br>• கொடி | 02 |
| | 2.2<br>அபிநயப் பாடல்களுக்கும் கதைப் பாடல்களுக்கும் அமைவான அபிநயங் களைத் தாமே அமைத்து ஆடியும் பாடியும் காட்டு வார். | • ''எங்கிருந்தோ வந்தான்'' (பாரதியார் பாடலுக்கு அபிநயம் செய்தல்) | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 2.3<br>கிராமியப் பாடல்களுக்கு ஏற்ற எளிய பாத அசைவு களைத் தாமாகவே அமைத்து ஆடற் கோலங் களை ஆற்றுகைப் படுத்து வார். | • காவடி<br>நேர்த்திக் கடனுக்காக முருகன் ஆலயங்களில் ஆடப்படுகின்ற கிராமிய நடனம். | 03 |
| | 2.4<br>வருடாந்தக் கலை நிகழ்ச் சியை நடத்துவார். | • வருடாந்தக் கலை நிகழ்ச்சி | 04 |
| 3.0<br>பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகை களையும், கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத் துடன் ஆடிக்காட்டுவார். | 3.1<br>ஒற்றைக்கை முத்திரைக ளையும், இரட்டைக் கை முத்திரைகளையும், அவற் றிற்குரிய விநியோகத் தையும் செய்து காட்டுவர். | • ஒற்றைக்கை முத்திரை விநியோகம் 21 - 28 வரை<br>• இரட்டைக்கை முத்திரை விநியோகம் 1 - 10 வரை | 09 |
| | 3.2<br>இலகுவான சந்தங்களுக் கேற்ப லயத்துடன் அசைந்து காட்டுவார். | • பஞ்ச நடைகள்<br>  • கண்டம் | 02 |
| | 3.3<br>பரத நாட்டியத்தின் அடிப் படை அடவுகளில் சில வற்றை ஆடிக் காட்டுவார். | • தத்தெய்தாம் (5 - 6)<br>• தத்தெய் தாஹா அடவு (1 - 2)<br>• ததிங்கிண தொம்<br>• மண்டி அடவு (1 - 2)<br>• தாஹதஜம்தரிதா | 29 |
| | 3.4<br>தேவ, ஜாதி, நவக்கிரக, தசாவதார, பாந்தவ்ய ஹஸ்தங்களை அவற்றிற் குரிய முத்திரைகளுடனும் பாத நிலைகளுடனும் செய்து காட்டுவார். | • அடிப்படை நான்கு பாத பேதங்கள்<br>  • மண்டலம்<br>  • உத்ப்ளவனம்<br>  • ப்ரமரி<br>  • பாதசாரி<br>• தேவஹஸ்தங்கள் - 14 | 01<br><br><br><br><br><br>02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 3.5<br>நடன உருப்படிகளை ரஸ பாவத்துடன் ஆடிக் காட்டு வார். | • நவரஸம்<br>• ஷிருங்காரம்<br>• ஹாஸ்யம்<br>• கருணா<br>• ரௌத்ரம்<br>• பயானகம்<br>• பீபத்ஸம்<br>• அற்புதம்<br>• வீரம்<br>• சாந்தம் | 05 |
| | 3.6<br>வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக்காட்டுவார். | • செம்பு நடனம்<br>• சுளகு நடனம் | 04 |
| 4.0<br>பரதநாட்டியம் தொடர் பான அடிப்படை அம் சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்கு வார். | 4.1<br>ஒற்றைக்கை (அஸம்யுத ஹஸ்தம்) இரட்டைக்கை (ஸம்யுத ஹஸ்தம்) முத்தி ரைகளின் பெயர்களைத் தெளிவாக உச்சரித்துக் காட்டுவ துடன் அவற்றின் விநியோகங்களைக் கூறிப் பொருளுடன் விளக்குவார். | • ஒற்றைக்கை முத்திரை விநியோகம்<br>(சதுரம் - திரிசூலம் வரை)<br>• இரட்டைக்கை முத்திரை விநியோகம்<br>அஞ்சலி - கர்த்தரீஸ்வஸ்திகம் | 04 |
| | 4.2<br>இசைக் குறியீடுகளின் வகைகளையும், சூளாதி சப்த தாளங்களின் குறியீடு களையும் அறிந்து பஞ்ச ஜாதிகளினால் 35 தாளங் களாகும் முறையினைக் கூறுவார். | • பஞ்ச நடைகள் | 01 |
| | 4.3<br>அபிநயத்தின் வகைக ளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றினையும் விளக்கி, ஷிரோ, திருஸ்டி கிரீவா, பாதம் ஆகியவற் றின் வகைகளையும் அறிந்து கூறுவார். | • பாதபேதம் - 4 | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 4.4<br>தேவ, நவக்கிரஹ, ஜாதி, தசாவதார, பாந்தவ ஹஸ் தங்களுக்குரிய முத்திரை களையும் அவற்றின் பாத நிலைகளையும் அறிந்து கூறுவார். | • தேவ ஹஸ்தங்கள் - 14 | 01 |
| | 4.5<br>புஷ்பாஞ்சலி, அரங்க தேவதா, ஸ்துதி, நாட்டியக் கிரமம், பாத்திர அந்தப் பிராணன், பகிப்பிராணன், கிங்கிணி ஆகியவற்றுக் குரிய ஸ்லோகங்களை யும், பொருள்களை யும் கூறுவார். | • அரங்க தேவதா ஸ்துதி<br>• நாட்டியக்கிரமம் | 01 |
| | 4.6<br>தாண்டவம், லாஸ்யம், அடவு, தீர்மானம், கோர் வை, சொற்கட்டு, எடுப்பு, பாத்திரம், அபாத்திரம், குரு, சிஷ்ய, சபாநாயகன், சபை, பஞ்சபாணங்கள், நாட்டிய தர்மி, லோகதர்மி ஆகியவற்றின் எண்ணக் கருக்களை விளக்குவார். | • அடவு<br>• தீர்மானம்<br>• சொற்கட்டு<br>• கோர்வை | 02 |
| | 4.7<br>பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறையினை யும், அணிசேர் இசைக் கருவிகளையும் விளக்கி வாக்கேயக் காரர்களின் வரலாற்றினையும் அவர் தம் கலைத் தொண்டினை யும் அறிந்து மதிப்பிடுவார். | • அலாரிப்பு விளக்கம்<br>• சு. பொன்னையா | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 5.0<br>பரதநாட்டியம், கிராமிய நடனம் என்பன பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும், இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார். | 5.1<br>இலங்கையின் பாரம்பரிய நடனங்களான பரத நாட்டியம், கண்டிய நடனம், றுஹுணு நடனம், சப்ரகமுவ நடனம் ஆகியவற்றின் கலாசார பின்னணியை அறிந்து விளக்குவார். | • உடறட்ட நடன சம்பிரதாயம்<br>• தோற்றம்<br>• ஆட்டமுறை<br>• ஆடை அணிகள்<br>• பக்கவாத்தியங்கள் | 02 |
| | 5.2<br>சமய விழாக்களிலும் சமூக விழாக்களிலும் இடம்பெறும் கிராமிய நடனங்களினதும் அவற்றின் இசையினதும் கலாசாரப் பின்னணியை அறிந்து விளக்குவார். | • எசல பெரஹரா | 02 |
| | 5.3<br>சங்க காலம் தொடக்கம் சோழர் காலம் வரையிலான நடனக்கலை வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். | • சங்காலம்<br>• சங்கமருவிய காலம் | 02 |
| | 5.4<br>இலங்கையிலுள்ள பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளின் கலாசாரப் பின்னணியை விளக்குவார். | • யாழ்ப்பாண மரபில் தெரு வெளி நாடகம் | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1ஆம் தவணை | பாடவேளைகள் | 2ஆம் தவணை | பாடவேளைகள் | 3ஆம் தவணை | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| நயத்தல் | 9.1.1<br>• சாஸ்திரிய நடனம், கிராமிய நடனம் ஆகிய வற்றிலுள்ள இசையில் இரசித்தவற்றை வெளிப் படுத்தல். | 02 | 9.1.2<br>• நிறுவுனர் நினைவு நாள் விழாவில் இடம் பெற்ற நடனங்கள்<br>-கூத்து நிகழ்வில் இரசித்தவற்றை வெளிப்படுத்தல் | 02 | 9.1.3<br>• வாய்ப்பாட்டிசை, வாத்திய இசையில் இரசித்தவற்றை வெளிப்படுத்தல் | 02 |
| ஆக்கத்திறன் | 9.2.1<br>பாவனை செய்தல்.<br>• இயற்கை அம்சங்கள் (தாவரங்கள்)<br>• மரம்<br>• செடி<br>• கொடி<br><br>9.2.2<br>அபிநயப் பாடல்களுக்கும் கதைப் பாடல்களுக்கும் அமைவான அபிநயங்களைத் தாமே அமைத்து ஆடியும் பாடியும் காட்டுவர்.<br>• ‘<br>‘எங்கிருந்தோ வந்தான்” (பாரதியார் பாடலுக்கு அபிநயம் செய்தல்) | 02<br><br>03 | 9.2.3<br>கிராமியப் பாடல்களுக்கு ஏற்ற எளிய பாத அசைவுகளைத் தாமாகவே அமைத்து ஆடற் கோலங்களை ஆற்றுகைப் படுத்துவர்.<br>• காவடி | 03 | 9.2.4.<br>• வருடாந்தக் கலை நிகழ்ச்சி | 04 |
| செய்ம்முறை | 9.3.1<br>• ஒற்றைக்கை முத்திரை விநியோகம் (21 - 24 வரை)<br><br>9.3.3<br>• தத்தெய்தாம் (5 - 6) (கை அசைவுகளுடன்)<br>• தத்தெய் தாஹா அடவு (1 - 2) | 03<br><br>05<br>05 | 9.3.1<br>• ஒற்றைக்கை முத்திரை விநியோகம் (25 - 28 வரை)<br><br>9.3.2<br>• பஞ்ச நடைகள்<br>• கண்டம் | 03<br><br>02 | 9.3.1<br>• இரட்டைக்கை முத்திரை விநியோகம் (1 - 10 வரை)<br><br>9.3.3<br>• தாஹதஜம்தரிதா | 03<br><br>05 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1ஆம் தவணை | பாடவேளைகள் | 2ஆம் தவணை | பாடவேளைகள் | 3ஆம் தவணை | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| செய்முறை | | | 9.3.3<br>• ததிங்கிண தொம்<br>• மண்டி அடவு (1 - 2)<br><br>9.3.4<br>• தேவஹஸ்தங்கள் - 14 | 12<br>02<br><br><br>02 | 9.3.4<br>• அடிப்படை நான்கு பாத பேதங்கள்<br>  • மண்டலம்<br>  • உத்ப்ளவனம்<br>  • ப்ரமரி<br>  • பாதசாரி 14<br><br>9.3.5<br>• நவரஸம்<br>  • ஷிருங்காரம்<br>  • ஹாஸ்யம்<br>  • கருணா<br>  • ரௌத்ரம்<br>  • பயானகம்<br>  • பீபத்ஸம்<br>  • அற்புதம்<br>  • வீரம்<br>  • சாந்தம்<br><br>9.3.6<br>• செம்பு நடனம்<br>சுளகு நடனம் | 01<br><br><br><br><br>05<br><br><br><br>04 |
| அறிமுறை | 9.4.1<br>• ஒற்றைக்கை முத்திரை விநியோகம்<br>(சதுரம் - திரிசூலம் வரை)<br>• இரட்டைக்கை முத்திரை விநியோகம்<br>அஞ்சலி<br>- கர்த்தரீஸ்வஸ்திகம்<br><br>9.4.2<br>• பஞ்ச நடைகள் | 02<br><br>02<br><br><br>01 | 9.4.3<br>• பாதபேதம் - 4<br><br>9.4.4<br>• தேவ ஹஸ்தங்கள் - 14<br><br>9.4.5<br>• அரங்க தேவதா ஸ்துதி<br>• நாட்டியக்கிரமம் | 01<br><br>01<br><br>01 | 9.4.6<br>• அடவு<br>• தீர்மானம்<br>• சொற்கட்டு<br>• கோர்வை<br><br>9.4.7<br>• அலாரிப்பு விளக்கம்<br>• சு. பொன்னையா | 02<br><br><br><br><br>01<br>01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1ஆம் தவணை | பாடவேளைகள் | 2ஆம் தவணை | பாடவேளைகள் | 3ஆம் தவணை | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| கலாசாரப் பின்னணி | 9.5.1<br>• உடறட்ட நடன சம்பிர தாயம்<br>• தோற்றம்<br>• ஆட்டமுறை<br>• ஆடை அணிகள்<br>• பக்கவாத்தியங்கள்<br><br>9.5.2<br>• எசல பெரஹரா | 02<br><br>02 | 9.5.3<br>• சங்காலம்<br>• சங்கமருவிய காலம் | 01<br>01 | 9.5.4<br>• யாழ்ப்பாண மரபில் தெருவெளி நாடகம் | 02 |
| | | 29 | | 31 | | 30 |

**மொத்தப் பாடவேளைகள் 90...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - II
## விரிவான பாடத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. கற்றல் - கற்பித்தல் முறைமை

**4.1**

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உரு வாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செய்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சிமட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த 'ஊடு கடத்தும் பங்களிப்பு' (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'கொடுக்கல் வாங்கல் பங்களிப்பு' (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படு கின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

ஊடுகடத்தும் பங்களிப்பில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே ஆசிரியர் மாறியுள்ளார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர் களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக் கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாட லாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கேவல (கருத்துநிலை) விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாறுகிறார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங் களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு 'உருமாற்றப் பங்களிப்பு' (Transformation Role) எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் தொடரகம் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி 'ஈடுபடுத்தும்படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்க. இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் / படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations), கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இங்கு அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு முறையான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான பேறுகளைக் கண்டு பிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். பிரசினத்தோடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாட லுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப் படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான முடிவுப் பொருளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக்களுக்கான விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Elaboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை உருமாற்றப் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது கொடுக்கல் வாங்கல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ்த் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது உருமாற்றப் பங்களிப்புக்கு மேலதிகமாக ஊடுகடத்தும் பங்களிப்பிலும், கொடுக்கல் வாங்கல் பங்களிப்பிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4.2**

இப்புதிய பாடத்திட்டத்திற்கேற்ப பரத நாட்டியப் பாடத்திற்கான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பின்வரும் அணுகுமுறைகளையும் கையாள்வது விரும்பத்தக்கதாகும்.

- கற்றல் என்பது கூட்டுருவாக்கச் செயன்முறையாக அமையவேண்டும் என்பதே இன்றைய கல்வி நிலைப்பாடாகும். எனவே தான் கற்பித்தலைப் பார்க்கிலும் கற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்படல்.

- கிடைக்கக்கூடிய வளங்களை கவனத்திற்கொண்டு அவற்றுக்கேற்ப மேலதிக செயற்பாடு களை ஆசிரியர் மேற்கொள்ளல்.

- தேர்ச்சி மட்டத்தை நோக்கி மாணவர்கள் அடைந்துள்ள அடைவை இனங்கண்டு தேவையான இடங்களில் மீளவுவலியுறுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் தவணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | :- | பரதநாட்டிய நிகழ்ச்சிகளையும், கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்துத் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 1.1 | :- | வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் மூலம் வெளிக்கொணரப்படும் கலை நிகழ்ச்சிகளிற் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார். |
| செயற்பாடு 1.1.1 | :- | தொலைக்காட்சிகள், இறுவட்டுக்கள் மூலம் வெளிக்கொணரப்படும் கலை நிகழ்ச்சிகளில் பார்த்து நயந்தவற்றை வெளிப்படுத்துவோம். |
| நேரம் | :- | 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • வெகுசனத்தொடர்பு ஊடகங்களில் இடம் பெறும் சாஸ்திரிய கிராமிய நடனங்கள் அடங்கிய ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுக்கள்.<br>• செயற்பத்திரம் 1.1.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 1.1.1

- தரஉள்ளீடுகளைப் பயன்படுத்தி சாஸ்திரிய, கிராமிய நடனங்களை மாணவர் பார்வையிடச் செய்தல்.
- மாணவர்களுடன் ஒளிநாடா, தொலைக்காட்சிகளில் பார்த்து நயந்தவற்றைப் பற்றிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

> ☞ சாஸ்திரிய நடனங்களில் இடம் பெறும் இசை, அபிநயங்கள், பிரயோகிக்கும் முத்திரைகள் என்பவற்றின் சிறப்பம்சங்கள்.
> ☞ கிராமிய நடனங்களில் அதிகம் காணப்படுவது மண்வாசைணை.
> ☞ கிராமிய நடனங்கள் அனேகமாகக் குழுவாக இடம் பெறுதல்.
> ☞ கிராமிய சாஸ்திரிய நடனங்களின் ஆடை, ஆபரணங்கள், ஒப்பனை என்பவற்றின் சிறப்பம்சங்கள்.
>
> (30 நிமிடங்கள்)

### படி 1.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- சகல குழுக்களும் செயற்பத்திர அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுகின்றார்களா? என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 1.1.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது கருத்துக்களை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ சாஸ்திரிய நடனங்களின் ஆடை, ஆபரணம், ஒப்பனை, ஆடல் முறை அபிநயங்கள் என்பவற்றின் சிறப்பம்சங்கள்.
> ☞ கிராமிய நடனங்களின் ஒத்திசைவு, ஆடை, ஆபரணம், பாடல், இசைக்கருவிகள் என்பவற்றின் சிறப்பம்சங்கள்.
> ☞ சாஸ்திரிய நடனங்களில் மனதைக் கவர்ந்தவை.
> ☞ கிராமிய நடனங்களில் மனதைக் கவர்ந்தவை.
>
> (20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- வெகுசனத்தொடர்பு ஊடகங்கள் மூலம் பார்த்து நயந்த சாஸ்திரிய, கிராமிய நடனங்களைப் பட்டியற்படுத்துவார்.
- இந்நடனங்களுள் தாம் நயந்தவற்றைக் குறிப்பிடுவார்.
- சாஸ்திரிய, கிராமிய நடனங்களுக்குப் பயன்படுத்தும் இசை, இசைக்கருவிகள், ஆடை, ஆபரணங்கள், ஒப்பனை முதலியவற்றின் வேறுபாடுகள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- சாஸ்திரிய நடனத்தின் ஆடல் முறைக்கும், கிராமிய நடனத்தின் ஆடல் முறைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுவார்.

## செயற்பத்திரம் 1.1.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

> ☞ தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளில் இடம் பெற்ற சாஸ்திரிய கிராமிய நடனங்களைப் பட்டியற்படுத்துக.
> ☞ இந் நடனத்தில் நீர் நயந்தவற்றைக் குறிப்பிடுக.
> ☞ சாஸ்திரிய நடன ஆடை, ஆபரணம், ஒப்பனை, இசை ஆகியவற்றிற்கும் கிராமிய நடன ஆடை, ஆபரணம், ஒப்பனை, இசை ஆகியவற்றிற்குமிடையே உள்ள வேறுபாடுகளைத் தருக.
> ☞ சாஸ்திரிய நடனத்தின் ஆடல் முறைக்கும், கிராமிய நடனத்தின் ஆடல் முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தருக.
> ☞ சாஸ்திரிய நடனத்தில் / கிராமிய நடனத்தில் உங்களைக் கவர்ந்தவற்றைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 2.0 | :- | சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக் கொணர்வார் |
| தேர்ச்சி மட்டம் 2.1 | :- | இயற்கைச் சூழலிலுள்ள நிகழ்வுகளையும் உயிரினங்களையும் இனம் கண்டு பாவனை செய்து காட்டுவார். |
| செயற்பாடு 2.1. | :- | இயற்கைச் சூழலில் காணப்படுகின்ற மரம், செடி, கொடி போன்று பாவனை செய்வோம். |
| நேரம் | :- | 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • தட்டுக்கழி, தட்டுப்பலகை, மரம், செடி,கொடிகளின் படங்கள்.<br>• செயற்பத்திரம் 2.1.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 2.1.1

- ''பாவனை செய்தல்'' என்றால் என்ன? என வினவுதல்.
- இயற்கையில் எவ்வாறு உயிரினங்கள் தமது வளர்ச்சியினை மேற்கொள்ளுகின்றன எனப் பாவனை செய்து பார்த்தல்.
- பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுதல்.

> ☞ மரம் செடிகளின் அமைப்பு பூப்பூத்தல் காய் கனிகள் பூக்கள் உதிர்தல், மரங்களிலிருந்து கிளையை அசைக்கும் போது நீர்த்துளிகள் என்பன விழுதல்.
> ☞ கொடி வளர்ந்து மரத்தில் பற்றுதல்
> ☞ கொடி படரும்போது இருக்கும் அழகு.
> ☞ கொடிகள் ஒன்றாகத் திரண்டு வளர்தல்
> ☞ மரம், செடி, கொடிகள் காற்றில் அசைதல்.
> ☞ பூக்களின் மீது வண்டுகள் தேன் குடித்தல்.
>
> (30 நிமிடங்கள்)

### படி 2.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- சகல குழுக்களும் செயற்பத்திர அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுகின்றார்களா? என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 2.1.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ மரம், செடி, கொடி போன்றவற்றின் வளர்ச்சி, அமைப்பு, பூப்பூத்தல். காய் கனிகள், பூ வாடுதல், கொடிகள் பற்றிப் படர்தல், பூக்களின் மீது வண்டுகள் தேன் குடித்தல், கொடிகள் ஒன்றாகத் திரண்டு வளர்தல் போன்றவற்றைப் பாவனை செய்து காட்டும் முறை.
> ☞ பாவனை செய்யும் திறனை விருத்தி செய்ய அவதானிப்பின் இன்றியமையாமை.
>
> (20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- இயற்கைச் சூழலில் காணப்படும் மரம், செடி, கொடி போன்றவற்றை இனங்காண்பர்.
- மரம், செடி, கொடிகளின் செயற்பாடுகளை அவதானிப்பார்.

## செயற்பத்திரம் 2.1.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

> பின்வரும் விடயங்களை பாவனை செய்து காட்டுக.
> ☞ மரம் வளர்த்தல்
> ☞ மரத்தில் பூக்கள் பூத்துக் குலுங்குதல்.
> ☞ செடிகளில் பூத்திருக்கும் பூக்கள் மேல் வண்டுகள் தேன் குடித்தல்
> ☞ மரத்தில் கொடி படர்தல்.
> ☞ மரம் காற்றில் அசைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 2.0 :- சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக் கொணர்வார்

தேர்ச்சி மட்டம் 2.2 :- அபிநயப்பாடல்களுக்கும் கதைப்பாடல்களுக்கும் அமைவான அபிநயங்களைத் தாமே அமைத்து ஆடியும் பாடியும் காட்டுவார்.

செயற்பாடு **2.2** :- பாரதியார் பாடலான ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற பாடலுக்கு அபிநயம் செய்வோம்.

நேரம் :- 02 மணித்தியாலம்
(03 பாடவேளைகள்)

தர உள்ளீடுகள் :-
- ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற பாடல் எழுதப்பட்ட அட்டை, ஒலிப்பதிவு நாடா, தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 2.2.1.1
இணைப்பு

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 2.2.1

- ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற பாடலை ஆசிரியர் பாடிக் காட்டியோ அல்லது ஒலிப்பதிவு நாடவில் ஒலிக்கச் செய்தோ மாணவர்கள் பாடலை செவிமடுக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.

☞ ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற பாடல் குறித்த இராகத்திலும், தாளத்திலும் அமைந்துள்ளமை.
☞ பாடல் எழுதப்பட்ட அட்டையினைக் காட்சிப்படுத்தி பகுதி பகுதியாக ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற பாடலை ஆசிரியர் பாட மாணவர்கள் தொடர்ந்து பாட வழிகாட்டல்.
☞ ஆசிரியரும் மாணவரும் இராக தாளத்தை முழுமையாகப் பாடுதல்.
☞ மாணவரைக் குழுவாகவும் தனியாகவும் எழுமாறாகவும் பாடச் செய்தல்.
☞ பாடலின் கருத்துக்கேற்ப பாவத்துடன் தாமே இப்பாடலுக்கு அபிநயம் அமைப்பதற்கு வழிகாட்டுதல்.

(40 நிமிடங்கள்)

### படி 2.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- சகல குழுக்களும் செயற்பத்திர அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுகின்றார்களா? என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 2.2.3**

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற பாரதியார் பாடல் இராகம், தாளம் அமைத்தல்
> ☞ ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற பாடலை முழுமையாக இராக, தாளத்துடன் பாடி அபிநயித்தல்.
>
> (40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற பாரதியார் பாடல் அமைந்துள்ள இராக தாளத்தைக் குறிப்பிடுவார்.
- இப்பாடலை இராக, தாளத்துடன் பாடுவார்.
- இப்பாடலின் கருத்திற்கேற்ப தாமே முத்திரைகளைப் பிடித்து அபிநயம் செய்ய முயற்சிப்பார்.
- இதே போன்று வேறு பாரதியார் பாடலுக்கும் தாமே அபிநயம் அமைத்துக்காட்ட முயற்சிப்பார்.

(40 நிமிடங்கள்)

---

**செயற்பத்திரம் 2.2.1.1**

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

> - எங்கிருந்தோ வந்தான் என்ற பாடலின் இராகம், தாளம் என்ன?
> - பாடலைப் பாடிக் காட்டுக.
> - ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற பாடலை முழுமையாகப் பாடி நீங்களாகவே முத்திரைகள் பிடித்து அபிநயம் செய்து காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்
மாடுகன்று மேய்த்திடுவேன். மக்களை நான் காத்திடுவேன்
வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்
சொன்னபடி கேட்பேன் துணிமணிகள் காத்திடுவேன்
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்
காட்டுவழியானாலும் கள்ளர் பயமானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை தேவரீர் தம்முடனே
சுற்றுவேன் தங்களுக்கோர் துன்பமுறாமற் காப்பேன்
கற்ற வித்தையேதுமில்லை காட்டு மனிதன் ஐயே!
எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்
இங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும், கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.1 | :- | ஒற்றைக்கை முத்திரைகளையும் இரட்டைக் கை முத்திரைகளையும் அவற்றிற்குரிய விநியோகங்களையும் செய்து காட்டுவார். |
| செயற்பாடு **3.1.1** | :- | சதுரம், ப்ரமரம் ஆகிய ஹஸ்தங்களின் விநியோகங்களைச் செய்து காட்டுவோம். |
| நேரம் | :- | 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • சதுரம், ப்ரமரம் ஆகிய ஹஸ்தங்கள் எழுதப்பட்ட ஸ்லோக அட்டைகள்.<br>• சதுரம், பர்மரம் ஆகிய ஹஸ்த விநியோகங்கள் அடங்கிய ஒளி, ஒலி நாடாக்கள்<br>• செயற்பத்திரம் 3.1.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.1.1

- ஏற்கனவே வகுப்பறையில் கற்ற ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களிடம் வினவி நெறிப்படுத்துக.
- அன்றாட நடைமுறையில் நாம் எமது கைகளைப் பிரயோகித்துச் செய்யும் செய்கைகளில் தெரியும் ஹஸ்தங்களை மாணவர்கள் இனங்காண வழிப்படுத்துக.

☞ சதுரம், ப்ரமரம் ஆகிய ஹஸ்தங்களின் ஸ்லோகங்களை ஆசிரியர் உச்சரித்தவாறு அபிநயித்துக் காட்ட மாணவர் அவதானித்தல்.
☞ ஒவ்வொரு ஹஸ்தமாக ஆசிரியர் விநியோகங்களை உச்சரிப்புடன் கூறிக் கருத்தினையும் கூறுதல்.
☞ ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களும் உச்சரித்து அவற்றின் கருத்துக்களைக் கூறுதல்.
☞ மேற்குறித்த ஹஸ்த விநியோகத்தின் ஸ்லோகத்தினை அங்க சுத்தத்துடனும் பாவத்துடனும் அபிநயித்துக் கூறுதல்.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 3.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- குழு நிலையில் ஸ்லோகங்களை உச்சரித்து அபிநயித்துக் காட்டும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- சகல குழுக்களும் ஸ்லோகத்தினைப் பிழையின்றி உச்சரித்து அபிநயித்துக் காட்டுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 3.1.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ சதுரம், ப்ரமரம் ஆகிய ஹஸ்தங்களின் விநியோகத்திற்குரிய ஸ்லோகங்கள் யாவும் வடமொழியில் அமைந்துள்ளமை.
☞ சதுரம், ப்ரமரம் ஆகிய ஹஸ்த விநியோகங்களைக் கருத்திற்கேற்ப பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்தல்.
☞ சதுரம், ப்ரமரம் ஆகிய ஹஸ்த விநியோகங்கலுக்குரிய ஸ்லோகத்தைத் தெளிவாக உச்சரித்தல்.

(30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சதுரம், ப்ரமரம் ஆகிய ஹஸ்தங்கலுக்குரிய ஸ்லோகங்களைத் தெளிவான உச்சரிப்புடன் கூறுவார்.
- ஹஸ்த விநியோகங்களுக்குரிய கருத்துக்களைக் கூறுவார்.
- ஒவ்வொரு ஹஸ்தங்களின் விநியோகத்தையும் அதன் கருத்திற்கேற்ப அபிநயித்துக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பத்திரம் 3.1.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- சதுரம், ப்ரமரம் ஆகிய ஹஸ்த விநியோகங்களில் ஒன்றைப் பிழையின்றிப் பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்துக் காட்டுக.
- ஆசிரியர், எழுமாறாக வினவும் விநியோக ஹஸ்தங்களுக்குரிய பொருளைக் கூறி அபிநயித்துக் காட்டுக.

உதாரணம் :-

சதுரம் - வர்ணபேதனே
ஆனனே
ஸ்வர்னே

ப்ரமரம் - பக்ஷே
கோகிலாதிசு
ஸுகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.1 | :- | ஒற்றைக்கை முத்திரைகளையும் இரட்டைக் கை முத்திரைகளையும் அவற்றிற்குரிய விநியோகங்களையும் செய்து காட்டுவார். |
| செயற்பாடு **3.1.2** | :- | ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம் ஆகிய ஹஸ்தங்களின் விநியோகங்களைச் செய்து காட்டுவோம். |
| நேரம் | :- | 40 நிமிடங்கள்.<br>(01 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம் ஆகிய ஹஸ்தங்கள் எழுதப்பட்ட அட்டைகள், அவை அடங்கிய ஒளி, ஒலி நாடாக்கள்.<br>• செயற்பத்திரம் 3.1.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.1.1

- ஏற்கனவே வகுப்பறையில் கற்ற ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களிடம் வினவி நெறிப்படுத்துக.
- அன்றாட நடைமுறையில் நாம் எமது கைகளைப் பிரயோகித்துச் செய்யும் செய்கைகளில் தெரியும் ஹஸ்தங்களை மாணவர்கள் இனங்காண வழிப்படுத்துக.

- ☞ ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம் ஆகிய ஹஸ்தங்களின் ஸ்லோகங்களை ஆசிரியர் உச்சரித்தவாறு அபிநயித்துக்காட்ட மாணவர் அவதானித்தல்.
- ☞ ஒவ்வொரு ஹஸ்தமாக ஆசிரியர் விநியோகங்களை உச்சரிப்புடன் கூறிக் கருத்தினையும் கூறுதல்.
- ☞ ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களும் உச்சரித்து அவற்றின் கருத்துக்களைக் கூறுதல்.
- ☞ ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து விநியோகங்களைக் கூறுதல்.
- ☞ மேற்குறித்த ஹஸ்த விநியோகத்தின் ஸ்லோகத்தினை அங்க சுத்தத்துடனும் பாவத்துடனும் அபிநயித்துக் கூறுதல்.

(15 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படி 3.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- குழு நிலையில் ஸ்லோகங்களை உச்சரித்து அபிநயித்துக் காட்டும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- சகல குழுக்களும் ஸ்லோகத்தினைப் பிழையின்றி உச்சரித்து அபிநயித்துக் காட்டுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(15 நிமிடங்கள்)

### படி 3.1.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம் ஆகிய ஹஸ்தங்களின் விநியோகத்திற்குரிய ஸ்லோகங்கள் யாவும் வடமொழியில் அமைந்துள்ளமை.
>
> ☞ ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம் ஆகிய ஹஸ்த விநியோகங்களைக் கருத்திற்கேற்ப பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்தல்.
>
> ☞ ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம் ஆகிய ஹஸ்த விநியோகங்களுக்குரிய ஸ்லோகத்தைத் தெளிவாக உச்சரித்தல்.
>
> (10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம் ஆகிய ஹஸ்தங்கலுக்குரிய ஸ்லோகங்களைத் தெளிவான உச்சரிப்புடன் கூறுவார்.
- ஹஸ்த விநியோகங்களுக்குரிய கருத்துக்களைக் கூறுவார்.
- ஒவ்வொரு முத்திரையின் விநியோகத்தையும் அதன் கருத்திற்கேற்ப அபிநயித்துக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பத்திரம் 3.1.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம் ஆகிய ஹஸ்த விநியோகங்களில் ஆசிரியர் வினவும் விநியோகத்தை பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்துக் காட்டுக.
- ஆசிரியர், எழுமாறாக சில விநியோகங்களை வினவ மாணவர் அவற்றின் பொருளைக் கூறி அபிநயித்துக் காட்டுக.

  உதாரணம் :-

  ஹம்ஸாஸ்யம் - ஸுத்ரபந்தேச, தல்லேகணே த தா, சித்ரே, மல்லிகாதௌச, ஜலபந்தே.

  ஹம்சபக்ஷம் - சேதுபந்தே, பிதானே, ஷட்ஸங்கீயாயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.3 | :- | பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகள் சிலவற்றை ஆடிக் காட்டுவார். |
| செயற்பாடு **3.3.1** | :- | அடிப்படை அடவுகளில் ஒன்றான 5ஆவது தத்தெய்தாம் அடவினை ஆடிக் காட்டுவோம். |
| நேரம் | :- | 2 மணித்தியாலம்<br>(03 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • தட்டுக்கழி, தட்டுப்பலகை<br>• ஐந்தாவது தத்தெய்தாம் அடவின் நிலைகளைக் குறிக்கும் படங்கள்.<br>• செயற்பத்திரம் 3.3.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.3.1

- குறித்த அடவுகளின் நிலைகளைக் குறிக்கும் படங்களைக் காட்சிப்படுத்தல்.
- 4ஆவது தத்தெய்தாம் அடவின் சொற்கட்டிலேயே 5வது தத்தெய்தாம் அடவும் ஆடப்படும் என்பதைக் கூறிக் கலந்துரையாடிப் பயிற்சியில் ஈடுபடுத்துங்கள்.

☞ 4ஆவது தத்தெய்தாம் அடவினை மீட்டல்
☞ 5ஆவது தத்தெய்தாம் அடவினை அறிமுகஞ்செய்தல்.
☞ தாளத்துடன் கொலுப்பித்தல்.
☞ இந்த அடவில் பயன்படுத்தப்படும் முத்திரை.
☞ அடவில் முழுமண்டி, அரைமண்டி, காலை வீசும் போதுள்ள நிலை, முடிக்கும் போதுள்ள நிலை அரைமண்டி ஆகிய நிலைகள் இடம் பெறல்.
☞ பாத அசைவினை ஆசிரியர் செய்து காட்டல்.
☞ மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
☞ திரி காலங்களிலும் பாதச் செய்கையைச் செய்து காட்டுதல்.
☞ கைகளின் செய்கையை மாத்திரம் 1ம் காலத்திலும் தொடர்ந்து 2ம் , 3ம் காலங்களிலும் ஆசிரியரும் தொடர்ந்து மாணவரும் ஆடுதல்.
☞ கால்கள் கைகளுடன் இணைந்து ஆடுதல்.
☞ 5 ஆவது தத் தெய் தாம் அடவினை மூன்று காலங்களிலும் முழுமையாக ஆடுதல்.

(50 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

### படி 3.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> - இந்த அடவிற்குத் திரிபதாக முத்திரை மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றமை.
> - 4வது அடவினைப் போன்றே இந்த அடவின் சொற்கட்டும், கைகளின் முத்திரையும் ஒத்திருத்தல்.
> - பயிற்சியின் போது பின்வரும் விடயங்களை அவதானித்து ஆடலில் ஈடுபடுதல்.
>   - முழுமண்டி
>   - காலைவீசும் போதுள்ள நிலை
>   - அரைமண்டி
>   - முடிக்கும் போதுள்ள அரைமண்டி நிலை
>   - கைகளின் நிலை
>
> (40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- அடவின் சொற்கட்டினைத் தகுந்த முறையில் உணர்ந்து கொலுப்பிப்பார்.
- அடவில் இடம் பெறும் நிலைகளை அறிந்து கூறுவார்.
- திரிகாலங்களிலும் 5 ஆவது தத்தெய்தாம் அடவினை ஆடுவார்.

---

## செயற்பத்திரம் 3.3.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- 5ஆவது தத்தெய்தாம் அடவினைத் தாளத்துடன் கொலுப்பிக்குக.
- இவ்அடவில் இடம் பெறும் நிலைகளைக் குறிப்பிடுக.
- திரிகாலங்களிலும் 5ஆவது தத்தெய்தாம் அடவினை ஆடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்தெய்தாம் அடவு 5ஆவது

சொற்கட்டு :- தத்தெய்தாம் தித்தெய்தாம் தத்தெய்தாம் தித்தித்தெய்
தாளம் :- ஆதி

| 4\| | 0 | 0 |
|---|---|---|
| **முதலாம் காலம்** | | |
| தத்,தெய்,தாம்; தித்,தெய்,தாம்; / | தத்,தெய்,தாம்; / | தித்,தித்,தெய்,; // |
| **இரண்டாம் காலம்** | | |
| தத்தெய்தாம் தித்தெய்தாம்<br>தத்தெய்தாம் தித்தித்தெய், / | தத்தெய்தாம்<br>தித்தெய்தாம் / | தத்தெய்தாம்<br>தித்தித்தெய், // |
| **மூன்றாம் காலம்** | | |
| தத்தெய்தாம் தித்தெய்தாம்<br>தத்தெய்தாம் தித் தித் தெய்,<br>தத்தெய்தாம் தித் தெய்தாம்<br>தத்தெய்தாம் தித் தித் தெய், / | தத்தெய்தாம் தித்<br>தெய்தாம் தத்தெய்<br>தாம் தித் தித் தெய், / | தத்தெய்தாம் தித்<br>தெய்தாம் தத்தெய்<br>தாம் தித் தித் தெய், // |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.3 | :- | பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார். |
| செயற்பாடு **3.3.2** | :- | அடிப்படை அடவுகளில் ஒன்றான 6ஆவது தத்தெய்தாம் அடவினை ஆடிக் காட்டுவோம். |
| நேரம் | :- | 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • தட்டுக்கழி, தட்டுப்பலகை<br>• ஆறாவது தத்தெய்தாம் அடவின் நிலைகளைக் குறிக்கும் படங்கள்.<br>• முத்திரைகளின் படங்கள்.<br>• செயற்பத்திரம் 3.3.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.3.2.1

- குறித்த அடவுகளின் நிலைகளைக் குறிக்கும் படங்களைக் காட்சிப்படுத்தல்.
- 1, 2, 3, ஆம் தத்தெய்தாம் அடவுகளின் சொற்கட்டிலேயே இவ்வடவும் ஆடப்படும் என்ற விடயத்தைக் கூறி பின்வரும் வகையிற் கலந்துரையாடலை நிகழ்த்தி அடவினை முழுமையடைய ஊக்குவியுங்கள்.

☞ முன்னர் கற்ற தத்தெய்தாம் அடவுகளினை மீட்டல்.
☞ திரிபதாக முத்திரை மட்டுமே பாவிக்கப்படுவதைக் கூறல்.
☞ ஆசிரியர் 6வது தத்தெய்தாம் அடவின் பாதச் செய்கையைச் செய்து காட்டுதல்.
☞ மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
☞ திரி காலங்களிலும் பயிற்சியை மேற்கொள்ளுதல்.
☞ கைகளின் நிலைகள், கைகளைத் திருப்பும் செயன்முறைகளை நின்ற நிலையில் செய்தல்.
☞ கைச் செய்கையைத் திரிகாலங்களிலும் பயிற்சி செய்தல்.
☞ பாதச் செய்கையுடன் சேர்த்துக் கைச் செய்கையையும் செய்தல்.
☞ 1ம், 2ம் காலங்களில் நன்றாகப் பயிற்சி செய்தல்.
☞ முழுமையாகத் திரிகாலங்களிலும் ஆடுதல்.

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 3.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ பயிற்சியிலீடுபடும் போது கவனிக்க வேண்டியவை.
> ☞ கைகளின் நாட்டியாரம்ப நிலை.
> ☞ திரிப்பதாக முத்திரையை மார்புக்கு நேரே திருப்பும் நிலை.
> ☞ கைகளின் முடிவு நிலை, அரைமண்டி
> ☞ கை சுற்றிவரும் போது உள்ள கால்களின் நிலை.
>
> (40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- 6வது தத்தெய்தாம் அடவிற் பயன்டுத்தப்படும் முத்திரையைக் கூறுவார்.
- 6வது தத்தெய்தாம் அடவினைத் திரிகாலங்களிலும் ஆடுவார்.
- அவ்வடவினை ஆடும் போது இடம் பெறும் வெவ்வேறு நிலைகளைச் செய்துகாட்டுவார்.

## செயற்பத்திரம் 3.3.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- 6ஆவது தத்தெய்தாம் அடவிற் பயன்படுத்தப்படும் முத்திரை எது?
- திரிகாலங்களிலும் 6ஆவது தத்தெய்தாம் அடவினை ஆடுக.
- இவ்அடவில் இடம் பெறும் கைகளின் நிலைகளைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 3.0 :- பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.3 :- பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகள் சிலவற்றை ஆடிக் காட்டுவார்.

செயற்பாடு **3.3.3** :- ''முதலாவது தத்தெய்தாஹா அடவினைப் பூரணமாக ஆடக்கற்றுக் கொள்வோம்.

நேரம் :- 2 மணித்தியாலங்கள்.
(03 பாடவேளைகள்)

தர உள்ளீடுகள் :-
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- முதலாவது தத்தெய்தாஹா அடவின் நிலைகளைக் குறிக்கும் படங்கள்.
- தாள அங்க அடையாளங்களுடன் எழுதப்பட்ட அட்டை.
- செயற்பத்திரம் 3.3.2.1 - பின்னிணைப்பு

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.3.1

- முதலாவது தத்தெய்தாஹா அடவின் நிலைகளைக் குறிக்கும் படங்களைக் காட்சிப்படுத்தல்.
- ஏனைய அடவுகளில் இருந்து எவ்வெவற்றில் 1ஆவது தத்தெய்தாஹா அடவு வித்தியாசப்படுகின்றது என்பதை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடிப் பயிற்சியில் ஈடுபடுத்துங்கள்.

☞ நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
☞ பின்னிணைப்பினை வழங்கி 1 ஆவது தத்தெய்தாஹாவின் தாளம் ரூபகம் என்பதைக் கூறுக.
☞ தாளத்துடன் கொலுப்பித்தல்.
☞ இந்த அடவில் அரைமண்டி காலைத்தட்டும் செய்முறை, கையை வீசித் திருப்பி எடுக்கும் செய்முறை ஆகிய நிலைகளைத் தெளிவுபடுத்தல்.
☞ ஆசிரியர் காற்செய்கையை அரைமண்டியில் செய்து காட்டல்.
☞ திரி காலங்களிலும் பயிற்சியை மேற்கொள்ளுதல்.
☞ மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
☞ காற் செய்கையைத் திரிகாலங்களிலும் ஆடுதல்.
☞ கைச் செய்கையை ஆசிரியர் ஆடுதல்.
☞ மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
☞ 2ம், 3ம் காலங்களில் ஆடுதல்.
☞ திரி காலங்களிலும் அடவினை ஆடுதல்.

(50 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

### படி 3.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ இந்த அடவிற்குத் திரிபதாக முத்திரை மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றமை.
> ☞ பயிற்சியில் அவதானிக்க வேண்டியவை.
> - ► அரைமண்டி
> - ► குதித்தல்
> - ► குதித்து மெட்டுதல்
> - ► கைகளை வீசித் திருப்பி எடுக்கும் நிலைகள்
> - ► திரிகாலங்களிலும் 1ஆவது தத்தெய்ஹா அடவினை முழுமையாக ஆடுதல்.
>
> ☞ கையில் தாளம் போட்டவாறு சொற்கட்டினைக் கொலுப்பித்தல்
> ☞ திரிகாலங்களிலும் ஆடிப் பயிற்சி செய்தல்.
>
> (40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- அடவின் சொற்கட்டினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- அடவில் இடம் பெறும் நிலைகளை அறிந்து கூறுவார்.
- திரிகாலங்களிலும் 1 ஆவது தத்தெய்தாஹா அடவினைச் சீராக ஆடுவார்.

### செயற்பத்திரம் 3.3.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- 1ஆவது தத்தெய்தாஹா அடவினைத் தாளத்துடன் கொலுப்பிக்குக.
- இவ்அடவில் இடம் பெறும் நிலையைக் கூறுக.
- இவ்வடவில் பிரயோகிக்கும் முத்திரையைக் கூறுக.
- திரிகாலங்களிலும் 1ஆவது தத்தெய்தாஹா அடவினை ஆடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடவு :- 1ஆவது தத்தெய்தாஹா
சொற்கட்டு :- தத்தெய்தாஹா தித்தெய்தாஹா
தாளம் :- ரூபகம்

| 0 | 4 |
|---|---|
| **முதலாம் காலம்** | |
| தத்,; தெய்,; | தா; ஹா; தித்,; தெய்,; // |
| தா; ஹா; | தத்,; தெய்,; தா,; ஹா; // |
| தித்,; தெய்,; | தா; ஹா; தத்,; தெய், ; // |
| தா; ஹா; | தித்; தெய்,; தா; ஹா; // |
| **இரண்டாம் காலம்** | |
| தத், தெய், தாஹா | தித் தெய், தாஹா தத், தெய், தாஹா// |
| தித், தெய், தாஹா | தத், தெய், தாஹா தித், தெய், தாஹா// |
| **மூன்றாம் காலம்** | |
| தத்தெய்தாஹா தித்தெய்தாஹா | தத்தெய்தாஹா தித்தெய்தாஹா |
| | தத்தெய்தாஹா தித்தெய்தாஹா// |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.3 | :- | பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக்காட்டுவார். |
| செயற்பாடு **3.3.4** | :- | ''இரண்டாவது தத்தெய்தாஹா'' அடவினைப் பூரணமாக ஆடக்கற்றுக் கொள்வோம். |
| நேரம் | :- | 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • தட்டுக்கழி, தட்டுப்பலகை<br>• இரண்டாவது தத்தெய்தாஹா அடவின் நிலைகளைக் குறிப்பிடும் படங்கள்.<br>• செயற்பத்திரம் 3.3.2.1 பின்னிணைப்பு |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.3.1

- 2 ஆவது தத்தெய்தாஹா அடவின் நிலைகளுக்குரிய படங்களைக் காட்சிப்படுத்தல்.
- ஏனைய அடவுகளில் இருந்த எவ்வெவற்றில் 2ஆவது தத்தெய்தாஹா அடவு வித்தியாசப்படுகின்றது என்பதை வலியுறுத்தும் வயையில் கலந்துரையாடுதல்.
- பயிற்சியில் ஈடுபடுத்தல்.

☞ பின்னிணைப்பை வழங்கிச் சொற்கட்டினை விளக்குதல்.
☞ தாளத்துடன் கொலுப்பித்தல்.
☞ இந்த அடவில் அரைமண்டி, காலைத் தட்டும் செய்முறை, கையை வீசித் திருப்பி எடுக்கும் செய்முறை ஆகிய நிலைகள் இடம் பெறும்.
☞ பாதச் செய்கையை அரைமண்டியில் ஆடுதல்.
☞ மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
☞ திரிகாலங்களிலும் காற் செய்கையை ஆடுதல்.
☞ கைச் செய்கையை 1ஆம், 2ஆம், 3ஆம் காலங்களில் ஆசிரியர் ஆடுதல்.
☞ மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
☞ திரிகாலங்களிலும் அடவினை ஆடுதல்.

(30 நிமிடங்கள்)

### படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் பொழுது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

### படி 3.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ இந்த அடவில் திரிபதாக முத்திரை பயன்படுத்தப்படுகின்றது.
☞ பயிற்சியில் அவதானிக்க வேண்டியவை.
- அரைமண்டி
- குதித்தல்
- குதித்து மெட்டுதல்
- கைகளை வீசித்திருப்பி எடுக்கும் நிலைகள்.

(20 நிமிடங்கள்)

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- அடவின் சொற்கட்டினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- அடவில் இடம் பெறும் நிலையை அறிந்து கூறுவார்.
- 2ஆவது தத்தெய்தாஹா அடவினைத் திரிகாலங்களிலும் சீராக ஆடுவார்.

### செயற்பத்திரம் 3.3.4.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

☞ 2ஆவது தத்தெய்தாஹா அடவினைத் தாளத்துடன் கொலுப்பிக்குக.
☞ இவ்வடவில் இடம் பெறும் நிலையைக் கூறுக.
☞ திரிகாலங்களிலும் 2ஆவது தத்தெய்தாஹா அடவினை ஆடுக.
☞ இவ்வடவில் பிரயோகிக்கும் முத்திரையைக் கூறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடவு :- 2ஆவது தத்தெய்தாஹா
சொற்கட்டு :- தத்தெய்தாஹா தித்தெய்தாஹா
தாளம் :- ஆதி

| 4\| | 0 | 0 |
|---|---|---|
| **முதலாம் காலம்**<br><br>தத்,;தெய்,;<br>தா; ஹா; / | தித்,; தெய்,; / | தா; ஹா; // |
| **இரண்டாம் காலம்**<br><br>தத், தெய், தாஹா<br>தித், தெய், தாஹா/ | தத், தெய், தாஹா / | தித், தெய், தாஹா // |
| **மூன்றாம் காலம்**<br><br>தத்தெய்தாஹா தித்தெய்தாஹா<br>தத்தெய்தாஹா தித்தெய்தாஹா / | தத்தெய்தாஹா<br>தித்தெய்தாஹா / | தத்தெய்தாஹா<br>தித்தெய்தாஹா // |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | :- | பரதநாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 4.1 | :- | ஒற்றைக் கை (அஸம்யுத ஹஸ்தம்), இரட்டைக் கை (ஸம்யுத ஹஸ்தம்) முத்திரைகளின் பெயர்களைத் தெளிவாக உச்சரித்துக் காட்டுவதுடன் அவற்றின் விநியோகங்களைக் கூறிப் பொருளுடன் விளக்குவார். |
| செயற்பாடு 4.1.1 | :- | சதுரம், பிரமரம், ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம், ஸந்தம்ஷம், முகுளம், தாம்ரசூடம், திரிசூலம் ஆகிய ஒற்றைக் கை முத்திரைகளின் விநியோகங்களைக் கற்றுக் கொள்வோம். |
| நேரம் | :- | 1மணித்தியாலம் 20 நிமிடங்கள். (02 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டை.<br>• சுலோகங்கள் பதியப்பட்ட ஒலிநாடா, ஒலிப்பதிவுக் கருவி.<br>• செயற்பத்திரம் 4.1.1.2 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 4.1.1

- சதுரம் முதல் திரிசூலம் வரையிலான சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- அவற்றின் உச்சரிப்பு தெளிவாக இருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

☞ இச் சுலோகங்கள் யாவும் வடமொழியில் அமைந்துள்ளமை.
☞ இவ் விநியோகங்கள் யாவும் ஒரு கையினால் மட்டுமே செய்து காண்பிக்கப்படுதல் என்பது
☞ விதம் விதமான பொருட்கள், பழங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் அபிநய ஹஸ்தங்கள்
☞ சதுரம் முதல் திரிசூலம் வரையிலான முத்திரைகளுக்குரிய விநியோகங்களது தெளிவான உச்சரிப்பு.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 4.1.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.
- செயற்பத்திரத்திற்கமைவாகச் செயற்படுகின்றனரா என உறுதி செய்து கொள்ளுங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 4.1.3**

- ஒவ்வொரு குழுவும் தனியாகவோ அன்றிக் குழுவாகவோ செயற்படுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- சதுரம் முதல் திரிசூலம் வரையிலான முத்திரைகளின் விநியோகங்களை உச்சரிப்புத் தெளிவுடன் கூறுவதற்கு உதவி செய்யுங்கள்.
- அவதானித்தவற்றை விமர்சிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் நன்கு விளங்கும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.

☞ சதுரம் முதல் திரிசூலம் வரையிலான முத்திரை விநியோகங்கள் வடமொழியில் அமைந்துள்ளமை.
☞ மேற்கூறிய முத்திரைகளின் விநியோகங்களைப் பிழையின்றி உச்சரிக்கும் முறை.
☞ இம்முத்திரைகளின் விநியோகங்களுக்குரிய சுலோகங்களை எழுதும் பாங்கு (அட்டவணையைப் பயன்படுத்துக)
☞ மேற்குறிப்பிட்ட முத்திரைகளின் விநியோகங்களின் கருத்துக்கள்.

(20 நிமிடங்கள்)

**ஒப்படை** : ஸ்லோகங்களைக் கருத்துடன் மனனஞ் செய்து வருவதற்குரிய அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சதுரம், ப்ரமரம், ஹம்ஸாஸ்யம் ஆகிய முத்திரைகளுக்குரிய விநியோகங்களின் சுலோகங்களையும் அவற்றிற்குரிய கருத்துக்களையும் கூறுவார்.
- ஹம்ஸபக்ஷம், ஸம்தம்ஷம், முகுளம், தாம்ர சூடம், திரிசூலம் ஆகிய முத்திரைகளுக்குரிய கருத்துக்களையும் கூறுவார்.
- மேற்குறிப்பிட்ட முத்திரைகளின் விநியோகங்களையும் அவற்றிற்குரிய கருத்தினையும் எழுதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாட்டுப்பத்திரம் 4.1.1.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- சதுரம், ப்ரமரம், ஹம்ஸாஸ்யம் ஆகிய முத்திரைகளுக்குரிய விநியோகங்களையும் அவற்றிற்குரிய கருத்தினையும் எழுதுக.
- ஹம்ஸபக்ஷம், ஸம்தம்ஷம், முகுளம், தாம்ரசூடம் ஆகிய முத்திரைகளுக்குரிய விநியோகங்களையும் அவற்றிற்குரிய கருத்தினையும் எழுதுக.
- சதுரம் முதல் திரிசூலம் வரையிலான சுலோகங்களை மனனம் செய்க.

## இணைப்பு

### 21. சதுர ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : கஸ்தூர்யாம் கிஞ்சிதர்த்தே ச ஸ்வர்ணே தாம்ரேச லோஹகே /
ஆர்த்ரே கேதே ரஸாஸ்வாதே லோசனே வர்ண பேதனே //
பிரமானே ஸரஸே மந்த கமனே ஷகலீக்ருதே /
ஆனனே கிருத தைலாதெள யுஜ்யதே சதுரஹ்கரஹ //

**கருத்து** :

| | | |
|---|---|---|
| கஸ்தூர்யம் | : | கஸ்தூரி |
| கிஞ்சிதர்த்தே | : | கொஞ்சம் |
| ஸ்வர்னே | : | தங்கம் |
| தாம்ரே | : | தாமிரம் |
| லோககே | : | இரும்பு |
| ஆர்த்ரே | : | ஈரம் ( நெஞ்சின் ஈரம்) |
| கேதே | : | துயரம் |
| ரஸாஸ்வாதே | : | சுவை பார்த்தல். |
| லோசநே | : | கண்கள் |
| வர்ண பேதனே | : | வித்தியாசமான வர்ணங்களும் சாதிகளும் |
| பிரமானே | : | சத்தியப் பிரமாணம் |
| ஸரஸே | : | இனிமை |
| மந்தகமனே | : | மெதுவான நடை |
| ஷகலீக்ருதே | : | துண்டுகளாக உடைத்தல் |
| ஆனனே | : | முகம் |
| க்ருதம் | : | நெய் |
| தைலாதெள | : | விதம் விதமான எண்ணெய் வகைகள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. ப்ரமர ஹஸ்த விநியோகம்.

**சுலோகம் :** பிரமரேசஷுகே பசேஷ ஸாரஸே கோகிலாதிஷு /
பிரமராக்யஸ்ச ஹஸ்தோயம் கீர்த்திதோ பரதாகமே//

**கருத்து :**

| | | |
|---|---|---|
| பிரமரே | : | வண்டு |
| ஷுகே | : | கிளி |
| பசேஷ | : | சிறகு |
| ஸாரஸே | : | கொக்கு |
| கோகிலம் | : | குயில் |

## 23. ஹம்ஸாஸ்ய ஹஸ்த விநியோகம்.

**சுலோகம் :** மாங்ல்யே சூத்ரபந்தேச்ச உபதேஷ விநிஸ்ச்சயே /
ரோமாஞ்சே மௌக்திகா தௌச தீபவர்த்திப் ப்ரஸாரனே//
நிகஷே மல்லிகா தௌச சித்ரே தல்லேகனே ததா/
தம்ஸேச ஜல பந்தேச்ச ஹம்ஸாஸ்யோ யுஜ்யதேகரஹ //

**கருத்து :**

| | | |
|---|---|---|
| மாங்கல்யே | : | மாங்கல்யம் |
| சூத்ர பந்தம் | : | கழுத்தில் தாலி கட்டுதல். |
| உபதேச | : | அறிவுரை கூறுதல் |
| விநிஸ்ச்சயம் | : | நிச்சயம் செய்தல் |
| ரோமாஞ்சே | : | புல்லரித்தல் |
| மௌக்திகாதௌ | : | முத்துக்கள் |
| தீபவர்த்தி பிரஸாரனே | : | விளக்குத் திரியைத் தூண்டல் |
| நிகஷே | : | உரைகல் |
| மல்லிகாதௌ | : | மல்லிகை |
| சித்ரே | : | ஓவியம் |
| தல்லேகனம் | : | சித்திரம் தீட்டுதல் |
| தம்ஸே | : | கடித்தல் |
| ஜலபந்தம் | : | அணைக்கட்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. ஹம்சபக்ஷம் ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : ஷட் ஸங்க்யாயாம் ஸேது பந்தே நகரே காங்கனே ததா /
பிதானே ஹம்ஸப சேஷாயம் கதிதோ பரதா கமே//

**கருத்து** :

| | | |
|---|---|---|
| ஷட் ஸங்க்யாயம் | : | ஆறு என்னும் இலக்கத்தை காட்டுதல். |
| ஸேது பந்தே | : | அணை கட்டுதல் (ஸ்ரீ ராமனால் கட்டப்பட்டது சேது பந்தம்) |
| நகரே காங்கனம் | : | நகத்தால் வேலைப்பாடு செய்தல் |
| பிதானே | : | மூடல் |

## 25. ஸந்தம்ஷ ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : உதரே பலிதானே ச வ்றனே கீடே மஹா பயே /
அர்ச்சனே பஞ்ச ஸம்க்யாயாம் ஸந்தம் ஸாக்யோநி யுஜ்யதே//

**கருத்து** :

| | | |
|---|---|---|
| உதரே | : | வயிறு |
| பலிதானே | : | பலி கொடுத்தல் |
| வ்றணே | : | கவலை |
| கீடே | : | புழு |
| மஹாபயே | : | பெரும் பயம் |
| அர்ச்சனே | : | அர்ச்சனை செய்தல் |
| பஞ்சஸம்க்யாயாம் | : | 5 எனல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 26. முகுள ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : குமுதே போஜனே பஞ்சபாணே முத்ராதி தாரணே /
நாபௌச கதலி புஷ்பே யுஜ்யதே முகுளஹ் கரஹ//

**கருத்து :**

| | | |
|---|---|---|
| குமுதே | : | நீலோத்பலம் |
| போஜனே | : | உணவு உட்கொள்ளல் |
| பஞ்சபானே | : | மன்மதனின் ஐந்து பாணங்கள் |
| முத்ராதிதாரனே | : | முத்திரை முதலியன தரித்தல் |
| நாபௌ | : | தொப்புள் |
| கதலி புஷ்பம் | : | வாழைப்பூ |

### 27. தாம்ரசூட ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : குக்குடாதௌ பகே காகே ஓஷ்ட்ரே வத்ஸேசலேகனே/
யுஜ்யதே தாம்ர சூடாக்ய கரோ பரதவே திபிஹி//

**கருத்து :**

| | | |
|---|---|---|
| குக்குடாதௌ | : | சேவல் |
| பகே | : | கொக்கு |
| காகே | : | காகம் |
| ஓஷ்ட்ரே | : | ஒட்டகம் |
| வத்ஸேச | : | கன்று குட்டி |
| லேகனே | : | எழுதுகோல் |

### 28. திரிசூல ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : வில்வ பத்ரே த்ரிக்த்வ யுக்தே திரிசூல கர ஈரிதஹ

**கருத்து :**

| | | |
|---|---|---|
| வில்வ பத்ரே | : | வில்வ மரத்தின் இலைகள் |
| த்ரிக்த்வ யுக்தே | : | மூன்று எனக் காட்டுதலும் சிவபெருமானது சூலத்தைக் குறிப்பது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | :- | பரதநாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 4.1 | :- | ஒற்றைக் கை (அஸம்யுத ஹஸ்தம்), இரட்டைக் கை (ஸம்யுத ஹஸ்தம்) முத்திரைகளின் பெயர்களைத் தெளிவாக உச்சரித்துக் காட்டுவதுடன் அவற்றின் விநியோகங்களைக் கூறிப் பொருளுடன் விளக்குவார். |
| செயற்பாடு 4.1.1 | :- | அஞ்சலி, கபோதம், கர்க்கடம், ஸ்வதிகம், டோலாம், புஷ்பபுடம், உத்சங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம், கர்த்தரீ ஸ்வஸ்திகம் ஆகிய இரட்டைக் கை முத்திரைகளின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவோம். |
| நேரம் | :- | 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • அஞ்சலி முதல் கர்த்தரீ ஸ்வஸ்திகம் வரையிலான முத்திரைகளுக்குரிய விநியோகங்கள் எழுதப்பட்ட அட்டை.<br>• சுலோகங்கள் பதியப்பட்ட ஒலிநாடா, ஒலிப்பதிவுக் கருவி.<br>• செயற்பத்திரம் 4.1.1.2 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 4.1.1

- அஞ்சலி முதல் கர்த்தரீ ஸ்வஸ்திகம் வரையிலான சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ஸ்லோகங்களின் உச்சரிப்பு தெளிவாக இருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

☞ இங்கு குறிப்பிடப்பட்ட சுலோகங்கள் அனைத்தும் சமஸ்கிருத மொழியில் அமைந்திருத்தல்.
☞ இணைந்த கைப்பிரயோகங்களை அறிந்து கொள்ளல்.
☞ அஞ்சலி தொடக்கம் கர்த்தரீ ஸ்வஸ்திகம் வரையிலான முத்திரைகள் இரட்டைக் கை முத்திரைகள் எனக் கூறல்.
☞ இவ் இரட்டைக் கை முத்திரைகளின் விநியோகங்கள் யாவும் இரு கைகளினால் மட்டுமே செய்து காண்பிக்கப்படுதல்.

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ அஞ்சலி முதல் கர்த்தரீ ஸ்வஸ்திகம் வரையிலான முத்திரைகளுக்குரிய விநியோகங்களை உச்சரிப்புப் பிழையின்றி ஆசிரியர் கூற மாணவர்கள் பின்பற்றிக் கூறல்.
- ☞ மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களை ஆசிரியர் கூற மாணவர்கள் எழுதுதல்.

(20 நிமிடங்கள்)

## படி 4.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.
- செயற்பத்திரத்திற்கமைவாகச் செயற்படுகின்றனரா என உறுதி செய்து கொள்ளுங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 4.1.3

- ஒவ்வொரு குழுவும் தனியாகவோ அன்றிக் குழுவாகவோ செயற்படுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- அஞ்சலி ஹஸ்தம் முதல் கர்த்தரீ ஸ்வஸ்திகம் வரையிலான முத்திரைகளின் விநியோகங்களை உச்சரிப்புத் தெளிவுடன் கூறுவதற்கு உதவி செய்யுங்கள்.
- மாணவர்கள் அவதானித்தவற்றை விமர்சிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் நன்கு விளங்கும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.

- ☞ அஞ்சலி முதல் கர்த்தரீ ஸ்வஸ்திகம் வரையிலான முத்திரை விநியோகங்கள் சமஸ்கிருத மொழியில் அமைந்துள்ளமை.
- ☞ மேற்கூறிய முத்திரைகளின் விநியோகங்களை பிழையின்றி உச்சரிக்கும் முறை.
- ☞ இம்முத்திரைகளின் விநியோகங்களுக்குரிய சுலோகங்களை எழுதும் பாங்கு (அட்டவணையைப் பயன்படுத்துக)
- ☞ மேற்குறிப்பிட்ட முத்திரைகளின் விநியோகங்களின் கருத்துக்கள்.

(20 நிமிடங்கள்)

**ஒப்படை** : ஸ்லோகங்களைக் கருத்துடன் மனனஞ் செய்து வருவதற்குரிய அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- அஞ்சலி, கபோதம், கர்க்கடகம், ஸ்வஸ்திகம் ஆகிய முத்திரைகளின் விநியோகங்களை தெளிவான உச்சரிப்புடன் கூறுவார்.
- டோலா, புஷ்பபுடம், உத்ஸங்கம், சிவலிங்கம் ஆகிய முத்திரைகளின் விநியோகங்களை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறுவார்.
- கடகாவர்த்தனம், கர்த்தரீஸ்வஸ்திகம் ஆகிய முத்திரைகளின் வநியோகங்களை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறுவார்.
- அஞ்சலி முதல் கர்த்தரீஸ்வஸ்திகம் வரையிலான முத்திரைகளின் விநியோகங்களுக்குரிய கருத்துக்களைக் கூறுவார்.

## செயற்பத்திரம் 4.1.1.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குங்கள்.)**

- அஞ்சலி முதல் ஸ்வஸ்திகம் வரையிலான முத்திரைகளின் விநியோகங்களையும் அவற்றின் கருத்துக்களையும் எழுதுக.
- டோலா முதல் சிவலிங்கம் வரையிலான முத்திரைகளுக்குரிய விநியோகங்களையும் அவற்றிற்குரிய கருத்தினையும் எழுதுக.
- கடகாவர்த்தனம், கர்த்தரீ ஸ்வஸ்திகம் ஆகிய முத்திரைகளுக்குரிய விநியோகங்களையும் அவற்றிற்குரிய கருத்தினையும் எழுதுக.
- அஞ்சலி முதல் கர்த்தரீஸ்வஸ்திகம் வரையிலான சுலோகங்களை இணைப்பின் உதவியுடன் மனனம் செய்க.

**ஒப்படை** :- சுலோகங்களை கருத்துடன் மனனம் செய்து வருவதற்குரிய அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வழங்குக.

**இணைப்பு**

**இரட்டைக்கை முத்திரைகளின் விநியோகம்**

### 1. அஞ்சலி ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : தேவதா குரு விப்ராணாம் நமஸ்காரே
ஷ்வனுக்ரமாத் /
கார்யஹ் ஷிரோ முகோ ரஸ்தோ
விநியோங்கேஞ்சலிர் புதைஹி //

**கருத்து** :

தெய்வம், ஆசிரியர், பிராமணர் முதல் தாய் தந்தை முதலியோருக்கும் பெரியோர்களுக்குமாக அஞ்சலிக்கையை முறையே தலை, நெற்றி, மார்பு ஆகிய இடங்களில் பிடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கபோத ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : ப்றணாமே குரு சம்பாஷே வினயாங்கீக்ருதே ஸ்வயம்

**கருத்து** :

| | | |
|---|---|---|
| ப்ரணாமே | : | வணக்கம் |
| குருசம்பாஷே | : | ஆசிரியருடன் பேசுதல் |
| வினயாங்கீ | : | விநயமாகப் பேசுதல் |
| க்ருதே ஸ்வயம் | : | மரியாதையுடன் ஏற்றுக் கொள்ளல், அங்கீகரித்தல் |

## 3. கர்க்கட ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : சமுஹாகமனே துந்த தர்ஷனே ஷங்க பூரணே /
அங்காணாம் மோடனே ஷாகோன் நமனே சநியுஜ்யதே //

**கருத்து** :

| | | |
|---|---|---|
| சமுஹாகமனே | : | கூட்டமாக வருவனவற்றைக் குறித்தல். |
| துந்த தர்ஷனே | : | வயிறு |
| ஷங்க பூரனே | : | சங்கு ஊதுதல். |
| அங்காணாம மோடனே | : | அங்கங்களைப் பிடித்துவிடல் |
| ஷாகோன் நமனே | : | பெரிய மரக்கிளையை வளைத்தல் |

## 4. ஸ்வஸ்திக ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : ஸம்யோகேன ஸ்வஸ்திகாக்யோ மகரே விநியுஜ்யதே

**கருத்து** :

| | | |
|---|---|---|
| மகரம் | : | முதலை |

## 5. டோலா ஹஸ்த விநியோகம்.

**சுலோகம்** : நாட்யாரம்பே பிரயோக்தவ்ய மிதி நாட்ய விதோ விதுவுக

**கருத்து** :

| | | |
|---|---|---|
| நாட்டியாரம்பே | : | நடன ஆரம்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6. புஷ்ப புட ஹஸ்த விநியோகம்.

**சுலோகம் :** நீராஜன விதௌ வாரி பலாதி க்ரஹனே பி ச/
ஸந்தியாயம் அர்க்ய தானேச மந்த்ர புஷ்பேச யுஜ்யதே//

**கருத்து :**

| | | |
|---|---|---|
| நீராஜன விதௌ | : | கடவுளுக்கு கற்பூர தீபம் காட்டல். |
| வாரி பலாதி க்ரகணம் | : | தண்ணீர், பழங்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளல். |
| ஸந்தியாயம் அர்க்ய தானே | : | சந்தியா காலங்களில் தெய்வங்களுக்கு நைவேத்தியம் கொடுத்தல் |
| மந்திர புஷ்பம் | : | மந்திர சக்தியூட்டப்பட்ட மலர். |

### 7. உத்ஸங்க ஹஸ்த விநியோகம்.

**சுலோகம் :** ஆலிங்கனேச்ச லஜ்ஜாயாம் அங்கதாதி ப்ரதர்ஷனே/
பாலானாம் ஷிசஷனே சாயம் உத்ஸங்கோ யுஜ்யதே கரஹ//

**கருத்து :**

| | | |
|---|---|---|
| ஆலிங்கனே | : | அணைத்தல் |
| லஜ்ஜாயாம் | : | வெட்கம் |
| அங்கதாதி ப்ரதர்ஷனே | : | அங்கங்களைத் தொடுத்தல் |
| பாலானாம் ஷிசஷ்கே | : | சிறிய பிள்ளைகளுக்குக் கற்பித்தல், தாலாட்டு |

### 8. சிவலிங்க ஹஸ்த விநியோகம்.

**சுலோகம் :** விநியோகஸ்து தஸ்யைவ ஷிவலிங்கஸ்ய தர்ஷணே/

**கருத்து :**

| | | |
|---|---|---|
| சிவலிங்க | : | சிவலிங்கம் |

### 9. கடகாவர்த்தன ஹஸ்த விநியோகம்.

**சுலோகம் :** பட்டாபிஷேகே பூஜாயாம் விவாகாதிஷு யுஜ்யதே/

**கருத்து :**

| | | |
|---|---|---|
| பட்டாபிஷேகே | : | முடிசூட்டு வைபவம் |
| பூஜாயாம் | : | பூசை |
| விவாக | : | கல்யாணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. கர்த்தரீ ஸ்வஸ்திக ஹஸ்த விநியோகம்.

**சுலோகம் :** ஷாகாஷ ் சாத்ரி ஷிகரே வ்ருசேஷஷ ் சனியுஜ்யதே

**கருத்து :**

| | | |
|---|---|---|
| ஷாகாஷ ் சாத்ரி | : | மரக்கிளைகள் |
| ஷிகரே | : | மலை உச்சி |
| விருசேஷ | : | மரங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | :- | பரதநாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 4.2 | :- | இசைக் குறியீடுகளின் வகைகளையும் சூளாதி சப்த தாளங்களின் குறியீடுகளையும் அறிந்து பஞ்சஜாதிகளினால் 35 தாளங்களாகும் முறையினைக கூறுவார். |
| செயற்பாடு **4.2** | :- | பஞ்ச நடைகளையும், அவற்றிற்குரிய சொற்கட்டுகளையும், எண்ணிக்கைகளையும் கற்றுக் கொள்வோம். |
| நேரம் | :- | 40 நிமிடங்கள். (01 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • பஞ்ச நடைகளின் சொற்கட்டுக்கள், எண்ணிக்கைகள் எழுதப்பட்ட அட்டை<br>• செயற்பத்திரம் 4.2.2 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 4.2.1

- பஞ்ச நடைகளுக்குரிய சொற்கட்டுக்கள், எண்ணிக்கைகள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ஆசிரியர் பஞ்ச நடைக்குரிய சொற்கட்டுக்களையும் அவற்றிற்குரிய எண்ணிக்கைகளையும் கூறுதல்.
- திஸ்ரமும், சதுஸ்ரமும் சேர்ந்து மிஸ்ர நடை உருவாகுவதனை ஆசிரியர் விளக்குதல்.
- இதே போன்று சதுஸ்ரமும் கண்டமும் சேர்ந்து சங்கீர்ண நடை உருவாகுவதனை விளக்குதல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கூறிக் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

☞ பஞ்ச நடைகள் என்பது ஐந்து வகையான நடைகள்.
*அவையாவன*: 1. திஸ்ரம் 2. சதுஸ்ரம் 3. கண்டம் 4. மிஸ்ரம் 5. சங்கீர்ணம்

☞ இவை முறையே மூன்று, நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது எண்ணிக்கைகளைக் கொண்டவை.

☞ பஞ்ச நடைகளின் சொற்கட்டு முறையே தகிட, தகதிமி, தகதகிட, தகிடதகதிமி, தகதிமி தகதகிட

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 4.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 4.2.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

- ☞ பஞ்ச நடைகளின் விளக்கம்.
- ☞ பஞ்ச நடைகளுக்குரிய சொற்கட்டுக்களின் விளக்கம்.
- ☞ ஒவ்வொரு நடைக்குமுரிய எண்ணிக்கைகளின் விளக்கம்.
- ☞ இரு வேறு நடைகள் இணைந்து உருவாகும் நடை பற்றிய விளக்கம்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பஞ்ச நடைகள் மொத்தம் எத்தனை வகைப்படும் என்பதைக் குறிப்பிடுவார்.
- ஒவ்வொரு நடைகளையும் குறிப்பிடுவார்.
- பஞ்ச நடைகளினதும் சொற்கட்டுக்களை கூறுவார்.
- இரு நடைகள் இணைந்து உருவாகும் மற்றுமொரு நடையினைக் குறிப்பிடுவார்.

## செயற்பத்திரம் 4.2.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- பஞ்ச நடைகளைத் தருக.
- பஞ்ச நடைகளுக்குமுரிய சொற்கட்டுக்களை எழுதுக.
- ஒவ்வொரு நடைக்குமுரிய எண்ணிக்கைகளைத் தருக.
- திஸ்ர நடை, சதுஸ்ர நடை இணைந்து உருவாகும் நடையினை எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | :- | பரதநாட்டியம் கிராமிய நடனம் என்பன பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார். |
| தேர்ச்சி மட்டம் 5.1 | :- | இலங்கையின் பாரம்பரிய நடனங்களான கண்டிய நடனம், றுகுணு நடனம், சப்ரகமுவ நடனம் ஆகியவற்றின் கலாசாரப் பின்னணியை அறிந்து விளக்குவார். |
| செயற்பாடு **5.2.1** | :- | இலங்கையின் பாரம்பரிய நடனமான உடறட்ட நடன சம்பிரதாயம் பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | :- | 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • உடறட்ட நடனம், வாத்தியக் கருவிகள் சம்பந்தமான படங்கள், ஒளி நாடாக்கள், தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ பதி கருவி.<br>• செயற்பத்திரம் 5.1.2.1 - பின்னிணைப்புப் பத்திரம். |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 5.2.1

- உடறட்ட நடனம் சம்பந்தமான படங்களைக் காட்சிப்படுத்தல்.
- சிங்கள மக்களால் ஆடப்படும் நடன வகைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- உடறட்ட நடனம் பற்றி அறிந்தவற்றைக் கேட்டறிதல்.
- காட்சிப்படுத்தியவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

☞ உடறட்ட நடன சம்பிரதாயம், கண்டியில் தோன்றியது.
☞ கண்டிய நடனம் வளர்க்கப்பட்ட இடங்கள்.
☞ இந்நடனத்தின் பிரிவுகள் இருவகைப்படும்.
☞ ''கொஹோம்பகங்காரிய'' எனும் சடங்கு
☞ கண்டிய நடனத்தின் பாத நிலை, முத்திரை
☞ கண்டிய நடனத்தில் வாசிக்கப்படும் வாத்தியம்
☞ இந்நடனத்தின் பிரிவுகள்
☞ ''வண்ணம்'' 18 வகைப்படும்.
☞ கண்டிய நடனத்தில் நிருத்தத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 5.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினையும் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற் கேற்பச் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.
- ஒரு குழு முன்வைத்தவற்றை மற்றைய குழுவினரும் அவதானித்ச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 5.1.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு முன் வைத்ததை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ மத்திய மாகாணத்தின் மலை நாடான கண்டியில் தோன்றியது.
☞ கந்த உடறட்ட, ஹாரிஸ் பந்துவ, மாநுவர, சதற கோரலய தும்பர, ஹேவாஹெட்ட, உடுநுவர, யட்டிநுவர ஆகிய இடங்களில் குருகுல முறையில் வளர்க்கப்பட்டது.
☞ கண்டிய நடனத்தில் வண்ணம், வெஸ், நையாண்டி, உடக்கி, பந்தேரு ஆகியவை சாஸ்திரிய சம்பந்தமான நடனங்களாகும்.
☞ ''கொஹோம்ப கங்காரிய'' எனும் சமய சடங்கு முறையுள்ளது.
☞ கண்டிய நடனத்தின் பாத நிலை ''மண்டிய'' என்பார்.
☞ இந்நடனத்தில் பிரயோகிக்கும் ஹஸ்தம் அர்த்த சந்திரன் ஆகும்.
☞ கண்டிய நடனத்திற்கு வாசிக்கப்படும் வாத்தியம் கட்டபெர எனப்படும்.
☞ கண்டிய நடனத்தில் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என மூன்று வகையுண்டு. நிருத்தமே கூடுதலாக பயன்படுத்தப்படுகிறது.
☞ ''வண்ணம'' எனும் சொல் தமிழில் வண்ணம் எனும் சொல்லில் இருந்தே வந்தது. வண்ணம் பதினெட்டு வகைப்படும்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கண்டிய நடனம் எம்மக்களுக்குரியது எனக் கூறுவார்.
- கண்டிய நடனம் வளர்க்கப்பட்ட இடங்கள் பற்றிக் கூறுவார்.
- கண்டிய நடனத்தின் சாஸ்திரிய நடனங்கள் பற்றிக் கூறுவார்.
- ''கொஹோம்ப கங்காரிய'' என்ற சமய சம்பந்தமான நடனம் பற்றி மாணவர் விளக்குவார்.
- கண்டிய நடனத்தின் பாத நிலை, முத்திரை பற்றி மாணவர் குறிப்பிடுவார்.
- கண்டிய நடனத்திற்கு வாசிக்கப்படும் பக்கவாத்தியக் கருவி பற்றி கூறுவார்.
- பதினெட்டு வண்ணங்களையும் குறிப்பிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பத்திரம் 5.1.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.)**

- கண்டிய நடனம் எம் மாகாணத்திற்குரியது எனக் கூறுவார்.
- கண்டிய நடனம் வளர்க்கப்பட்ட முறையினை விளக்குவார்.
- கண்டிய நடனத்தின் வகைகள் எவை என விளக்குவார்.
- ''கொஹோம்பகங்காரிய'' எனும் சமய சடங்கு முறையை விளக்குவார்.

## பின்னிணைப்பு

சிங்கள மக்களின் பாரம்பரிய கலையானது அவர்களது கிராம சமூக வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். இக்கலையானது பாரம்பரிய கலை, உபயோகக் கலை, அழகுக் கலை என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் உபயோகக் கலை என்பது அடிப்படைத் தேவைக்கேற்றபடி உருவாக்கப்பட்டது. உதாரணமாக, மட்பாண்டகலை, பின்னற் கலைபோன்றவற்றைக் கூறலாம். அழகுக் கலை என்பது மக்களின் அழகுணர்வால் உருவாக்கப்பட்டவை. இவ் அழகுக்கலை இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உயர் மட்டமாக நுண்கலைக் காவியம், சாஸ்திரிய சங்கீதம், ஓவியக் கலை என்பனவும் தாழ்ந்த மட்டமாகக் கிராமவாசிகளின் கலைகளும் ஆகும். இக் கிராம வாசிகளின் கலையானது சமயம் தொடர்பான சடங்கு நடனங்களாகும்.

இலங்கை வாழ் சிங்கள மக்களின் சாஸ்திரிய நடனங்களாகவும் பாரம்பரிய நடனங்களாகவும் பின்வரும் நடனங்கள் காணப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | கண்டிய நடனம் | - | உடறட்ட நட்டும் (மலைப்பிரதேச நடனம்) |
| 2. | றுகுணு நடனம் | - | பஹத்தரட்ட நட்டும் (கரையோரப் பிரதேச நடனம்) |
| 3. | சபரஹமுவ நடனம் | - | சபரஹமுவ நட்டும் (சபரஹமுவ நடனம்) |

இலங்கையில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த மற்றைய பகுதிகளில் தமது செல்வாக்கினை நிலைநாட்டி நிற்கும் நடனம் கண்டிய நடனமாகும். இந்நடனம் இலங்கையின் மத்திய மாகாண மலை நாடாகிய கண்டியில் தோன்றியதால் இந் நடனத்தைக் கண்டிய நடனம் எனவும் அழைக்கின்றார்கள். முன்பு கந்த உடபஸ்ரட்ட, ஹரிஸ்பத்துவ, மாநுவர, சதர கோரயை, ஹேவாஹெட்ட, உடுநுவர, யட்டிநுவர ஆகிய இடங்களில் தான் இந் நடனம் ஆடப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது. மேலும், இந்த உடரட்ட நடனத்தில் வண்ணம், வெஸ், நையாண்டி, உடக்கி, பந்தேரு ஆகியவை சாஸ்திரிய சம்பந்தமான நடனங்கள் ஆகும். ''கொஹோம்பகங்காரிய'' எனும் சடங்கு முறையுடன் இணைந்த வகையில் இந்நடனம் பிரசித்தமாய் இருந்தது. கொஹோம்பகங்காரிய எனும் இச் சடங்கு நிகழ்வானது ''கொஹோம்ப'' என்னும் தெய்வத்தை முதன்மைப்படுத்திச் செய்யப்படும் ஓர் சமயச் சடங்கு முறை ஆகும். பிற்காலத்தில் இக் கண்டி நடனமானது மங்கள நிகழ்வுகளில் ஆடப்படும் நடனம், பேய் பிசாசுகளை விரட்டுவதும் சாந்தி செய்வதுடன் இணைந்த சடங்கு நடனமாகவும் இரு பிரிவுகளில் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிய நடனத்தின் பாத நிலையினை ''மண்டிய'' என்பர் இது பரத நாட்டியத்தின் ''அங்க ப்ரம்மரீ'' யினை ஒத்தது. இரு கால்களையும் சற்று அகட்டி கையில் அர்த்த சந்திரன் முத்திரையினை இரு கைகளிலும் பிடித்தவாறு மேலும் கீழுமாக அசைத்து ஆடுவார். இந் நடனத்தில் நிருத்தம் நிருத்தியம் நாட்டியம் எனும் மூன்று பிரிவுகளும் காணப்படுகின்றது. ஆயினும், நிருத்தத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந் நடனத்தின் பிரதான தாள வாத்தியம் ''கெற்ற பெரய'' (Gatta beraya) எனும் தோல் வாத்தியம் ஆகும். சல்லாரி, புல்லாங்குழல், கொம்பு வாத்தியம் என்பனவும் பாவிக்கப்படுகின்றது.

வண்ணம நடனம் என்பது தமிழில் உள்ள வண்ணம் என்னும் சொல்லிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இவ் வண்ணங்கள் 18 வகைப்படும்.
அவையாவன:-

| | | | |
|---|---|---|---|
| 1. | கஜக வண்ணம் | 2. | அனுமான் வண்ணம் |
| 3 | மயூர வண்ணம் | 4. | உதாரற வண்ணம் |
| 5. | சவுளா வண்ணம் | 6. | வைரோடி வண்ணம் |
| 7. | நையடி வண்ணம் | 8. | சிங்கராஜ வண்ணம் |
| 9. | துரக வண்ணம் | 10. | அஸத்ருஸ வண்ணம் |
| 11. | ஈரடி வண்ணம் | 12. | ஸுரபதி வண்ணம் |
| 13. | காஹக வண்ணம் | 14. | உக்குஸா வண்ணம் |
| 15. | உரக வண்ணம் | 16. | முசலடி வண்ணம் |
| 17 | கிரளா வண்ணம் | 18. | கணபதி வண்ணம் |

ஆரம்ப காலத்தில் கண்டிய நடனமானது சமய சடங்குகளில் கோவில்களிலும் ஆடப்பட்டு வந்தது. காலப்போக்கில் அவைக்காற்றுகைக் கலையாக இது உயர் நிலையை அடைந்திருப்பதைக் காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | :- | பரதநாட்டியம் கிராமிய நடனம் என்பன பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார். |
| தேர்ச்சி மட்டம் 5.2 | :- | சமய விழாக்களிலும் சமூக விழாக்களிலும் இடம் பெறும் கிராமிய நடனங்களினதும் அவற்றின் இசையினதும் கலாசாரப் பின்னணியை அறிந்து விளக்குவார். |
| செயற்பாடு 5.2.1 | :- | சமய விழாக்களில் ஒன்றான எசல பெரஹரா பற்றி அறிவோம். |
| நேரம் | :- | 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • எசல பெரஹரா சம்பந்தமான படங்கள்.<br>• செயற்பத்திரம் 5.2.2 - பின்னிணைப்புப் பத்திரம். |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 5.2.1

- எசல பெரஹரா சம்பந்தமான படங்களைக் காட்சிப் படுத்தல்.
- காட்சிப்படுத்தியவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> ☞ சிங்கள மக்களின் பாரம்பரிய விழா
> ☞ காலப் பகுதி
> ☞ தோற்றுவாய்
> ☞ இதில் இடம் பெறும் கலாசார, சமூக, நிகழ்வுகள்.
>
> (40 நிமிடங்கள்)

### படி 5.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினையும் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற் கேற்பச் செயற்படுகின்றனரா? என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(10 நிமிடங்கள்)

### படி 5.2.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> - எசல பெரஹறா சிங்கள மக்களால் கொண்டாடப்படும்.
> - இது தொடர்ந்து 90 நாட்கள் கொண்டாடப்படும்.
> - ஆடி, ஆவணி மாதத்தில் வரும் போயா தினத்தில் இவ்விழா தொடங்கும்.
> - புனிதப் பல்லை ஊர்வலமாக கொண்டு செல்லும் நிகழ்வு.
> - பெரஹறாவின் வகைகள்.
> - யானையின் அலங்கரிப்பு.
> - ஊர்வலத்தில் இடம் பெறும் கலாசார நிகழ்வுகள்.
> - இறுதி நாள் நிகழ்வு.
>
> (30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- எசல பெரஹறா எம்மக்களால் கொண்டாடப்படும் என கூறுவார்.
- எசல பெரஹறா கொண்டாடப்படும் மாதத்தினை கூறுவார்.
- பெரஹறாவின் வகைகளைக் கூறுவார்.
- ஊர்வலத்தில் இடம் பெறும் கலை நிகழ்வுகளை விபரிப்பார்.

ᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏ

## செயற்பத்திரம்

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.)**

- எசல பெரஹறாவின் தோற்றம் பற்றி விளக்குவார்.
- திரந்தோலி பெரஹறாவின் சிறப்பினை விளக்குவார்.
- பெரஹறாவில் இடம் பெறும் நான்கு இந்துக் கோயில்களையும் அறிந்து கூறுவார்.
- இதில் இடம் பெறும் கலாசார நிகழ்வுகளை அறிந்து விபரிப்பார்.

ᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏᘏ

## பின்னிணைப்பு

### எசல பெரஹறா

உலகத்திலேயே மிக அற்புதமானதும் அழகானதுமான ஒரு ஊர்வலத்தின் சுருக்கமான ஒரு குறிப்பு. கண்டிப் பெரஹறா கி.பி. 300 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது. எமது வரலாற்றிலிருந்து நாம் அறிந்து கொண்டபடி புத்த பகவானின் புனிதப் பல் அப்போதிருந்த அரசனுக்குக் கிடைத்த போது அதன் சிறப்புக்காக அதனைக் கொண்டாடினான். அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் அக்கொண்டாட்டம் நடாத்தப்பட வேண்டும் என்றும் அக்கொண்டாட்டத்தில் அப்புனிதப்பல் ஊர்வலமாகத் தலைநகரான அநுராதபுரத்தைச் சுற்றிவர வேண்டும் என்றும் ஆணையிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்பு சீனப்பயணியாக இங்கு வந்த Fa Hian என்பவர் இவ் ஊர்வலத்தை கண்ணால் கண்டதாகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவரது குறிப்பின்படி இப்பெரஹரா 90 நாட்கள் தொடர்ந்து நடக்கும் என்றும், அதில் பெரும் எண்ணிக்கையான புத்த குருமார்களும், மக்களும் கலந்து கொள்வார்கள் என்றும், சாம்பிராணி குச்சிகள் எரிக்கப்பட்டு விளக்குகள் ஏற்றப்பட்டு இரவு பகலாக தொடர்ந்து சமய அனுஷ்டானங்கள் ஓய்வில்லாமல் நடக்கும் என்றும் 90 நாட்களின் பின் அப்புனிதப் பல் அடங்கிய பேழை திரும்பவும் கோயிலில் வைக்கப்படும்.

கண்டி தலைநகராக மாறிய பின்னர் இந்தியாவில் இருந்து வந்த அரசிகள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபடியால் நான்கு ஐந்து கோவில்களும் அமைக்கப்பட்டிருந்தன. அவையாவன நாத, விஷ்ணு, கதிர்காம, பத்தினி என்பவையாகும். இந்த இந்துக் கோயில்களிலும் பெரஹரா நடாத்தப்பட வேண்டுமென அரசன் உத்தரவிட்டான்.

இந்துக் கோயில்களில் இக் கொண்டாட்டங்கள் நடத்தப்படுவது பற்றி புத்த பிக்குகள் மத்தியில் திருப்தியீனங்களையும் சிக்கல்களையும் உருவாக்கியதை அறிந்த அரசன் சுதேச இணக்கப்பாட்டிற்காகப், புனிதப்பல் பேழைக்கே ஊர்வலத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டான். அதனைத் தொடர்ந்தே நான்கு இந்துக் கடவுளர்களின் ஊர்வலங்களும் வர வேண்டும் என்று அரசன் கட்டளையிட்டான். யாரிடம் இப்புனிதப்பல் உள்ளதோ அவருக்கு இலங்கையை ஆளும் வல்லமை இருக்கும் என்ற ஒரு நம்பிக்கை முன்னர் இருந்தது. இதனை நம்பிய போர்த்துக்கேயர் கூட, இப்பேழையைப் பாதுகாக்க, பெரும் சிரத்தை எடுத்துக்கொண்டார்கள்.

இப்பேழை கோயில் யானையின் மீது வைக்கப்பட்டே ஊர்வலம் வரும். கோயில் யானையின் தந்தங்கள் தங்க முலாம் பூசப்பட்டு உடல் முழுவதும் பெறுமதி வாய்ந்த துணிகளாலும் ஆபரணங்களாலும் மூடப்பட்டிருக்கும். யானையின் தலை, தும்பிக்கையும் கூட அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். பெரிய காது மாட்டிகளையும் கால்களில் கொலுசுகளையும் அத்தோடு ஐவகை உலோகங்களால் செய்யப்பட்ட ஒரு சோடி மணிகளையும் அணிந்திருக்கும். ஊர்வலத்தில் வரும் மற்றைய யானைகள் அதைவிடக் குறைவாகவே அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

கோவில் யானையைத் தொடர்ந்து பிரதானமான தலைவரும் புனித கோவிலின் பாதுகாவலருமான நியவதன நிலமே முழு கீழைத்தேச கலாசார அலங்காரத்தில் அவரது ஆட்டக்காரர்களுடனும் மேளகாரருடனும் செங்கோல் தாங்குபவருடனும் குடைகாவுவோருடனும் கலாசார உடைகளுடனான மற்றைய நிலமேக்களுடன் பவனி வருவார். புனிதக் கோவிலின் பெரஹராவினைத் தொடர்ந்து, நான்கு கிளைப் பெரஹராக்களும் தங்களின் அலங்கார யானைகளுடனும் தலைவர்களுடனும் ஆட்டக்காரர்களுடனும் கலந்து கொள்வர். எல்லாமாக எண்பது அல்லது அதற்கு மேற்பட்ட யானைகள் ஊர்வலத்தில் கலந்து கொள்ளும். ஒவ்வொரு சமூகத்தலைவரும் தங்களது பதவிக்கு ஏற்றவாறு பாரம்பரிய உடைகளை அணிந்திருப்பார். நான்கு மூலைகளுடைய தொப்பி, தங்க வேலைப்பாடு செய்த மேலாடை தங்க விளிம்புகளைக் கொண்ட தோல்காப்பு, தங்க வேலைப்பாடுகள் செய்யப்பட்ட 7 யார் நீளம் கொண்ட பருத்தித் துணியினால் உடல் முழுவதும் மூடப்பட்டு முன் பக்கம் மடிப்புகள் கொண்ட கீழாடைக்கு தெரியக் கூடியவாறு விடப்பட்டிருக்கும். அவ்ஆடை தங்கத்தாலான அகலமான இடுப்புப் பட்டியொன்றினால் தாங்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியவதன நிலமே திறமான நகைகளாலும் பெரிய மோதிரங்களாலும், அட்டிகைகளாலும், சங்கிலிகளாலும், ஒரு நீண்ட தடி, ஒருவாள், ஒரு கத்தி கொண்டு அலங்கரிக்கப்பட்டிருப்பார். அவர் உயர் பதவியிலிருந்தால் அவரது நெற்றியில் தங்கத் தகடு ஒன்றிருக்கும். அவர்களின் அழகான நடை யானைகளின் கம்பீர நடையை ஒத்திருக்கும். முழு ஊர்வலமும் ஒழுங்கான பெருமையான கம்பீரமாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.

யானைகளின் மணி எழுப்பும் ஒலிகளுடன் மேளங்களின் எதிரொலியும், தாளங்களும் ஆட்டக்காரர்களினதும், மேளக்காரர்களினதும் ஒரே மாதிரியான அசைவுகளும் முழு ஊர்வலத்தையும் பிரகாசமாகக் காட்டும்.

குப்பல் பெரஹறா முதல் 5 இரவுகளுமாகும். அதன் பின் அடுத்த 5 ரங்கோலி பெரஹறா இறுதி ஊர்வலத்தின் பின் அடுத்த நாள் காலையில் பகல் பெரஹறா (தவல் பெரஹறா) தண்ணீர் வெட்டும் கொண்டாட்டத்திற்கு முன்பாக ( டியா ரெயிம) கண்டியில் உள்ள மகாவலி ஆற்றில் நடைபெறும்.

கடந்த 200 ஆண்டுகளில் இப் பெரஹறா இப்போது கொண்டாடப்படுவது போலவே கொண்டாடப்பட்டது. அழகாக அலங்கரிக்கப்பட்ட யானைத்தந்தத்தினால் தூக்கிவரப்படும் பேழை, நான்கு ஊர்வலத்துக்கும் முன்பாக கொண்டுவரப்படும். இவ்வைந்து ஊர்வலங்களின் சேர்க்கையும் கண்டி பெரஹறாவிற்கு அழகையும் நீண்ட சிறப்பையும் கொடுக்கின்றன. அதில் பங்கு பற்றும் ஒவ்வொருவரும் தங்களது சொந்த யானைகளையும் சொந்த சமூகத்தவர்களையும் சொந்த ஆட்டக்காரர்களையும் மேளக்காரர்களையும் கொண்டிருப்பார்கள்.

இவ்வூர்வலமானது ஆடி மாதத்திலோ அல்லது ஆவணி மாதத்திலோ நிலவைப் பொறுத்து இரவில் தொடங்கும். ஒவ்வொரு இரவின் அழகும் மகிழ்ச்சியை அதிகரித்துக்கொண்டு செல்லும் வகையில் பல நாட்களுக்கு இவ்வூர்வலம் நடக்கும். பல்வேறுபட்ட மக்களும் இவ்வூர்வலத்தின் பாதையில் காலையில் இருந்தே ஒழுங்காக நிற்பார்கள். கைக் குழந்தைகளை கைகளில் தாங்கி இருக்கும் தாய்மார்கள் நடைபாதையில் இருப்பார்கள்.

சிங்கள அரசர்கள், மந்திரி பிரதானிகளுடனும், சமூகத்தவர்களுடனும் சேர்ந்து இவ்வூர்வலத்தில் பங்கேற்பதுடன் அவர்களைத் தொடர்ந்து அரசிகளும் பல்லக்குகளில் கலந்து கொள்வார்கள் என்று கூறப்படுகிறது. இப்பல்லக்குகள் இப்போதும் அரச பரம்பரையை சேர்ந்தவர்களால் பெரஹறாவில் பயன்படுத்தப்படுகிறது.

பெரஹறாவின் பத்தாவது இரவு மற்றவற்றை விட பிரம்மாண்டமானது. சங்குகளின் சத்தமானது சொர்க்கத்தையே அதிரவைப்பது போலவும், கடவுளிடம் இரப்பது போலவும் பெரஹறாவுக்கு கட்டியம் கூறுகின்றது. அதனைத் தொடர்ந்து வெடி கொழுத்துவோரும் வேறு மாகாணங்களிலிருந்தும் கோவில்களிலிருந்தும் தம் கொடிகளை தாங்குவோரும் அணிவகுத்து வருவார்கள்.

எண்ணிக்கை இல்லாமல் தீபம் ஏற்றுபவரும், தியாட்டக்காரர்களும் நெருப்புச் சக்கரங்களுடன் சுழன்று சுற்றி ஆடியபடி வருவார்கள். அவர்களுடன், கோலாட்டம், கும்மி, செம்பு, பொய்கால் நடனம், சுளகு நடனம், உலக்கை நடனம் போன்ற பல்வேறு வகையான நடனங்களை ஆடிவருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு முதலில் வரும் யானையில் அமர்ந்திருக்கும் ஒரு உத்தியோகத்தர் அரசனின் விசேட அறிவிப்பை வெளியிடுவார். ஆனால், இன்று கோயில் நிலங்களின் பதிவேடுகளையும் அவற்றின் குத்தகைக்காரர்களின் பட்டியல்களையும் கோயில்களுக்கான அவர்களின் சேவைகளையும் காவிச் செல்வார். ஒவ்வொரு குத்தகைக் காரர்களும் பெரஹராவை அவர்களுக்குரிய குறிப்பிட்ட சேவைகளையும், தனிப்பட்ட சேவையோ அல்லது அவசியமான கொடுக்கிற சேவையாகவும் இருக்கும்.

அடுத்ததாக ஊர்வலத்தில் வேறுபட்ட மேளங்களை இசைத்தபடி மேளகாரர்கள் எக்காலம் ஊதுபவரும் வருவார். ஒவ்வொருவரும் மெதுவாக அசைந்து நடப்பார். பின்பு அரசயானைகளின் தலைவரும் கொண்டாட்டத்திற்குப் பொறுப்பானவரும் அவர்களுக்குரிய யானையில் வருவார்கள். அவர்களுடன் மேளகாரர்களும் ஆட்டக்காரர்களும் வர பின்னால் யானைகளும் பவனி வரும்.

கோயில் யானையின் வருகை கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். மங்கள விஹாஸ்தி ராஜாய பேழையை (ரன்சிவிஜே) தாங்கிவரும். அதன் உடல் முழுதும் துணி ஒன்றினால் மூடப்பட்டு அது நடப்பதற்காக வெள்ளைத் துணி வீதியில் விரிக்கப்படும். இந்தக் கம்பீரமான மிருகத்திற்கு தான் செய்யும் புனிதமான பணி பற்றித் தெரிந்திருக்கும்0.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் தவணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | :- | பரதநாட்டிய நிகழ்ச்சிகளையும், கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்துத் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 1.2 | :- | பரத நாட்டியம் மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பாடசாலைக் கலை நிகழ்ச்சிகளில் இடம்பெறும் நடன நிகழ்ச்சிகளையும் இனங்கண்டு இரசித்தவற்றை வெளிப்படுத்துவார். |
| செயற்பாடு **1.2.1** | :- | நாட்டுக் கூத்தின் சிறப்பம்சங்களை இரசிப்போம். |
| நேரம் | :- | 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • நாட்டுக் கூத்து நிகழ்ச்சி அடங்கிய இறுவெட்டு ஒலி. ஒளிப்பதிவு நாடாக்கள்.<br>• செயற்பத்திரம் 1.2.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 1.1.1

- நாட்டுக் கூத்து நிகழ்ச்சி அடங்கிய ஒளிப்பதிவு நாடாவினைப் போட்டுப் பார்க்கச் செய்து பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> ☞ நாட்டுக் கூத்தின் - இசை
> - கருப்பொருள்
> - ஆட்ட முறை
>
> ☞ வேஷப் பொருத்தம்
> ☞ பிற்பாட்டு, பக்க வாத்திய இசை
>
> 40 நிமிடங்கள்

### படி 1.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- சகல குழுக்களும் செயற்பத்திர அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுகின்றார்களா? என்பதை உறுதிப்படுத்துங்கள்.

### படி 1.2.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அவற்றை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளை தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> ☞ நாட்டுக் கூத்தின் கருப்பொருள்
> ☞ கலை விழாவில் இடம் பெற்ற நாட்டுக் கூத்து நிகழ்ச்சியில் பயன்படுத்தப்பட்ட உடையலங்காரம் ஒப்பனை, ஆபரணங்கள் என்பவற்றின் சிறப்பம்சங்கள்.
> ☞ நாட்டுக் கூத்து இசையின் தனித்தன்மை.
> ☞ நாட்டுக் கூத்து ஆட்ட முறை
> ☞ நாட்டுக் கூத்திற்கும், ஏனைய பரதநாட்டியம், கிராமிய நடனத்திற்குமிடையிலான வேறுபாடுகள்.
>
> 40 நிமிடங்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- நாட்டுக் கூத்தின் உடையலங்காரம், ஒப்பனை ஆபரணங்கள் பற்றிக் கூறுவார்.
- நாட்டுக் கூத்தின் இசையின் தனித்தன்மை பற்றிக் கூறுவார்.
- நாட்டுக் கூத்தின் ஆட்டமுறை பற்றிக் கூறுவார்.
- நாட்டுக் கூத்தின் கருப்பொருள் பற்றிக் கூறுவார்.
- நாட்டுக் கூத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.
- நாட்டுக் கூத்தில் தாம் நயந்தவற்றைக் கூறுவார்.

## செயற்பத்திரம் 1.2.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

> நீங்கள் பார்த்த நாட்டுக் கூத்து நிகழ்ச்சி தொடர்பாக பின்வரும் அம்சங்களை விளக்குக.
>
> ☞ கருப்பொருள்
> ☞ உடையலங்காரம், ஒப்பனை, ஆபரணங்கள்
> ☞ இசை
> ☞ ஆட்ட முறை
> ☞ பரதநாட்டியம், கிராமிய நடனம் என்பவற்றிலிருந்து கூத்து வேறுபடும் முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 2.0 | :- | சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக் கொணர்வார் |
| தேர்ச்சி மட்டம் 2.3 | :- | கிராமியப் பாடல்களுக்கு ஏற்ற எளிய பாத அசைவுகளைத் தாமாகவே அமைத்து ஆடற் கோலங்களை ஆற்றுகைப்படுத்துவார். |
| செயற்பாடு **2.3** | :- | ''அழகுத் தெய்வமாக வந்து'' என்ற பாடலுக்குக் காவடி நடனம் ஒன்றினை அமைத்து ஆற்றுகைப் படுத்துவோம். |
| நேரம் | :- | 2 மணித்தியாலங்கள்.<br>(03 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • தட்டுக்கழி, தட்டுப்பலகை, காவடி<br>• காவடிப் பாடல் அமைந்த ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி<br>• பாடல் எழுதப்பட்ட அட்டை<br>• செயற்பத்திரம் 2.3.1.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 2.3.1

- ''அழகுத் தெய்வமாக வந்து'' என்ற காவடிப் பாடலைச் செவிமடுக்க இடமளிக்குக.
- காவடி தொடர்பான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடி ஆடலில் ஈடுபடுத்துங்கள்.

> ☞ பாடலை ஆசிரியர் பாட மாணவரும் சேர்ந்து பாடுதல்
> ☞ பாடலின் நடை மாற்றங்களை இனங்காணச் செய்யும் விதத்தில் தாளத்தினைப் போடுதல்.
> ☞ பாடலுக்கேற்ற விதத்தில் காவடி நடனத்தின் அசைவுகளைத் தாமே உருவாக்கி ஆடல்.
> ☞ பல்வேறு கோலங்களிலாடுதல்.
>
> (40 நிமிடங்கள்)

### படி 2.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒரு குழு செய்ததை மற்றைய குழுவினரும் அவதானித்து விமர்சிக்க இடமளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சகல குழுக்களும் காவடி நடனத்தைச் சரியாகப் பாடி ஆடுகின்றனரா என உறுதிப்படுத்துங்கள்.

(50 நிமிடங்கள்)

**படி 2.3.3**

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ ''அழகுத் தெய்வமாக வந்து'' என்ற பாடலைப் பாடுதல்.
☞ இவற்றின் நடை மாற்றங்களுக்கேற்ப அசைவுகளை மேற்கொண்டு தாமே ஆடுதல்.
☞ பல்வேறு கோலங்களில் ஆடுதல். (O,X,V,L வடிவங்கள்)
☞ பூரணப்படுத்தி ஆடிக் காட்டுதல்.

(30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ''அழகுத் தெய்வமாக வந்து'' என்னும் காவடிப் பாடலைப் பாடிக்காட்டுவார்.
- நடைகளை மாற்றி அசைவுகளை மேற்கொள்வார்.
- பல்வேறு கோலங்களில் ஆடுவார்.
- இதே போன்று வேறு பாரதியார் பாடலுக்கும் தாமே அபிநயம் அமைத்துக்காட்ட முயற்சிப்பார்.

## செயற்பத்திரம் 2.3.1.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- ''அழகுத் தெய்வமாக வந்து'' என்ற காவடிப் பாடலைப் பாடுக.
- பல்வேறு கோலங்களில் நடை மாற்றங்களுக்கேற்ப காவடி நடனத்தை ஆடிக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவடிச் சிந்து

அழகு தெய்வமாக வந்து பழனி மலை மீதில் நிற்கும்
ஆதி சக்தி அன்னை தந்த பாலன் - அவன்
அசுரர் தம்மை வென்ற வடிவேலன் - நல்ல
அமுதமென்னுமோர் தமிழில் பாடிடும்
அன்பர் வாழவே கருணை செய்குகன்
அரனுகந்த குருவாம் உயர் சீல0ன் - என்றும்
அருள் சுரந்து காக்கும் அனுகூலன்

குழந்தையாக குமரனாக கோவணாடைத் துறவியாக
கோலம் கொள்ளும் காட்சி என்ன சொல்வேன் - கண்டு
கூறுமயினைகள் யாவும் வெல்வேன் - இந்த
குவலயத்திலோர் கலியுகப் பெரு
வரதனாய் திகழ்ந்தருளும் கந்தனை
கும்பிட்டெந்தன் பிணிகள் நீங்க மகிழ்வேன் - உள்ள
குமுறல் ஓய்ந்தே நல்ல வழி செல்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.1 | :- | ஒற்றைக்கை முத்திரைகளையும் இரட்டைக் கை முத்திரைகளையும் அவற்றிற்குரிய விநியோகங்களையும் செய்து காட்டுவார். |
| செயற்பாடு **3.1.3** | :- | ஸம்தம்சோ, முகுளஸ்சைவ, தாம்ரசூட, திரிசூலகஹ ஆகிய ஹஸ்தங்களின் விநியோகங்களைச் செய்து காட்டுவோம். |
| நேரம் | :- | 2 மணித்தியாலங்கள்<br>(03 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • ஸம்தம்சோ, முகுளஸ்சைவ, தாம்ரசூட, திரிசூலகஹ ஆகிய ஹஸ்தங்கள் எழுதப்பட்ட ஸ்லோக அட்டைகள்.<br>• செயற்பத்திரம் 3.1.3.1, பின்னிணைப்பு |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.1.1

- ஏற்கனவே வகுப்பறையில் கற்ற ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களிடம் வினவி நெறிப்படுத்துக.
- அன்றாட நடைமுறையில் நாம் எமது கைகளைப் பிரயோகித்து செய்யும் செய்கைகளில் தெரியும் ஹஸ்தங்களை மாணவர்கள் இனங்காண வழிப்படுத்துக.
- பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாகக் கற்பித்தலை மேற்கொள்ளவும்.

☞ ஸம்தம்சோ, முகுளஸ்சைவ, தாம்ரசூட, திரிசூலகஹ ஆகிய ஹஸ்தங்களின் ஸ்லோகங்களை ஆசிரியர் உச்சரித்தவாறு அபிநயித்துக்காட்ட மாணவர் அவதானித்தல்.
☞ ஒவ்வொரு ஹஸ்தமாக ஆசிரியர் விநியோகங்களை உச்சரிப்புடன் கூறிக் கருத்தினையும் கூறுதல்.
☞ ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களும் உச்சரித்து அவற்றின் கருத்துக்களைக் கூறுதல்.
☞ ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து விநியோகங்களைக் கூறுதல்.
☞ மேற்குரித்த ஹஸ்த விநியோகத்தின் ஸ்லோகத்தினை அங்க சுத்தத்துடனும் பாவத்துடனும் அபிநயித்துக் கூறுதல்.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 3.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- குழு நிலையில் ஸ்லோகங்களை உச்சரித்து அபிநயித்துக் காட்டும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- சகல குழுக்களும் ஸ்லோகத்தினைப் பிழையின்றி உச்சரித்து அபிநயித்துக் காட்டுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 3.1.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ ஸம்தம்சோ, முகுளஸ்சைவ, தாம்ரசூட, திரிசூலகஹ ஆகிய ஹஸ்தங்களின் விநியோகத்திற்குரிய ஸ்லோகங்கள் யாவும் வடமொழியில் அமைந்துள்ளமை.
☞ ஸம்தம்சோ, முகுளஸ்சைவ, தாம்ரசூட, திரிசூலகஹ ஆகிய ஹஸ்த விநியோகங்களைக் கருத்திற்கேற்ப பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்தல்.
☞ ஸம்தம்சோ, முகுளஸ்சைவ, தாம்ரசூட, திரிசூலகஹ ஆகிய ஹஸ்த விநியோகங்களுக்குரிய ஸ்லோகங்களைத் தெளிவாக உச்சரித்தல்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஸம்தம்சோ, முகுளஸ்சைவ, தாம்ரசூட, திரிசூலகஹ ஆகிய ஹஸ்தங்கலுக்குரிய ஸ்லோகங்களைத் தெளிவான உச்சரிப்புடன் கூறுவார்.
- மேற்குறித்த ஹஸ்த விநியோகங்கலுக்குரிய கருத்துக்களைக் கூறுவார்.
- ஒவ்வொரு முத்திரையின் விநியோகத்தையும் அதன் கருத்திற்கேற்ப அபிநயித்துக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பத்திரம் 3.1.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- ஸம்தம்சோ, முகுளஸ்சைவ, தாம்ரசூட, திரிசூலகஹ ஆகிய ஹஸ்த விநியோகங்களில் ஒன்றை பிழையின்றி பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்துக் காட்டுக.
- ஆசிரியர், எழுமாறாக சில விநியோகங்களை வினவ மாணவர் அவற்றின் பொருளைக் கூறி அபிநயித்துக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.2 | :- | இலகுவான சந்தங்களுக்கேற்ப லயத்துடன் அசைந்து காட்டுவார். |
| செயற்பாடு **3.2** | :- | சந்தங்களுக்கேற்ப வேறுபாடுகளை அறிந்து கண்டநடையில் (தாளத்துடன்) லயத்துடன் ஆடுவோம். |
| நேரம் | :- | 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • தட்டுக்கழி, தட்டுப்பலகை<br>• கண்ட நடை எழுதப்பட்ட அட்டை<br>• செயற்பத்திரம் 3.2.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.2.1

- முன்னர் கற்ற திஸ்ர சதுஸ்ர நடைகளைப் போல் தாளத்திற்குட்பட்ட லயத்துடன் கூடிய அசைவுகளையெல்லாம் பார்க்கக் கேட்க எவ்வாறு இருக்கும் என வினாவுதல்.
- கண்ட நடை எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ஆசிரியர் கண்ட நடையினைத் தட்டிக் காட்டிக் கலந்துரையாடல்.

> ☞ ''தகதகிட'' என்னும் சொற்கட்டினை உடையதே கண்ட நடையாகும்.
> ☞ இது ஐந்து எண்ணிக்கை உடையது.
> ☞ மூன்று காலங்களிலும் கைகளில் மாணவர் தட்டுதல்.
> ☞ மூன்று காலங்களிலும் ஆடுதல்.
>
> (40 நிமிடங்கள்)

### படி 3.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 3.2.3

- ஒவ்வொரு குழுவினரும் ஆடலில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பல்வேறு கோலங்களில் ஆடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடிக்காட்டும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் செய்முறை பற்றிய கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள். கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

> ☞ கண்ட நடை - தகதகிட என்னும் சொற்கட்டையும் 5 எண்ணிக்கைகளையும் கொண்டது.
> ☞ தகதகிட நடையை மூன்று காலங்களிலும் கையில் தட்டி போட்டுக்காட்டுதல்.
> ☞ அவ்வாறே பல்வேறு கோலங்களில் மூன்று காலங்களிலும் ஆடுதல்.
>
> (20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கண்ட நடை என்றால் - தகதகிட சொற்கட்டில் 5 எண்ணிக்கை என அறிந்து குறிப்பிடுவார்.
- கண்ட நடையினை ஆடலை மெருகூட்டுவதற்குப் பயன்படுத்தலாம் எனக் கூறுவார்.
- மூன்று காலங்களிலும் கண்ட நடையினைக் கைகளில் தட்டுவார்.
- பல்வேறு கோலங்களிலும் மூன்று காலங்களிலும் கண்ட நடையில் ஆடலை மேற்கொள்ளவார்.

## செயற்பத்திரம் 3.2.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- கண்ட நடையின் எண்ணிக்கை எத்தனை?
- கண்ட நடையின் சொற்கட்டினைத் தருக?
- மூன்று காலங்களிலும் கண்ட நடையினைக் கையில் தட்டுக?
- மூன்று காலங்களிலும் கண்ட நடையினைப் பல்வேறு கோலங்களில் ஆடிக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.3 | :- | பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகள் சிலவற்றை ஆடிக் காட்டுவார். |
| செயற்பாடு **3.3.5** | :- | அடிப்படை அடவுகளுள் ஒன்றான ததிங்கிணதொம் அடவினைத் திரிகாலங்களிலும் ஆடுவோம். |
| நேரம் | :- | 8 மணித்தியாலங்கள்<br>(12 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • தட்டுக்கழி, தட்டுப்பலகை<br>• பாத நிலைகளின் வரைபடங்கள்.<br>• தாள அட்டவணை.<br>• செயற்பத்திரம் 3.3.2.1 - பின்னிணைப்பு |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.3.1

- பாத நிலை வரையப்பட்ட படங்களைக் காட்சிப்படுத்தல்.
- ததிங்கிணதோம் அடவின் பாத செயன்முறையை அறிமுகப்படுத்தல்.
- ஆசிரியர் இவ்வடவின் பாத செய்கையினை செய்து காட்டுதல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- தத்திங்கிண தொம் அடவை மகுட அடவு என்றும் கூறலாம்.
- ததிங்கிண தொம் அடவு ரூபக தாளத்திலும் அமைந்துள்ளது.
- ததிங்கிணதொம் தக ததிங்கிண தொம், தகதிகு ததிகிங்கிணதொம் என்ற மிருதங்கச் சொற்கட்டு தெய் திதிதெய், தெய் தெய் திதி தெய், தெய் தெய் தெய் திதி தெய் என்ற அடவுச் சொற்கட்டிலும் அமையும்.
- ஆசிரியர் ததிங்கிண தொம் அடவின் பாதச் செய்கையை செய்து காட்டுதல்.
- மாணவர் ஆசிரியரை பின்பற்றிப் பாதச் செய்கையை ஆடுதல்.
- திரி காலங்களிலும் பயிற்சியை மேற்கொள்ளுதல்.
- கைகளின் நிலைகள், கைகளைத் திருப்பும் செய்ம்முறைகளை நின்ற நிலையில் செய்தல்.
- கைச் செய்கையைத் திரிகாலங்களிலும் பயிற்சி செய்தல்.
- பாதச் செய்கையுடன் சேர்த்துக் கைச் செய்கையையும் செய்தல்.
- 1ம், 2ம் காலங்களிலும் நன்றாகப் பயிற்சி செய்தல்.
- முழுமையாக திரி காலங்களிலும் ஆடுதல்.

5மணித்தியாலங்கள் 20 நிமிடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்)

### படி 3.3.3

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
- ஒரு குழு ஆடிக்காட்டும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் செய்முறை பற்றிய கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள். கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

☞ இவ்வடவு ரூபக தாளத்தில் அமைந்துள்ளமை.
☞ இவ்வடவின் பாதச் செய்கை
☞ கையில் தாளம் போட்டவாறு சொற்கட்டினைக் கொலுப்பித்தல்
☞ திரிகாலங்களிலும் ஆடிப் பயிற்சி செய்தல்.

(1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ததிங்கிணதொம் அடவின் தாளத்தைக் கூறுவார்.
- திரிகாலங்களிலும் அடவினைத் தாளத்துடன் கொலுப்பிப்பர்.
- திரிகாலங்களிலும் இவ் அடவினை ஆடிக் காட்டுவார்.

## செயற்பத்திரம் 3.3.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- ததிங்கிணதொம அடவு அமைந்துள்ள தாளத்தின் பெயரைக் குறிப்பிடுக.
- இவ்வடவினைத் தாளம் போட்டுத் திரிகாலங்களிலும் கொலுப்பிக்குக.
- இவ்அடவினை திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.
- ததிங்கிண தொம் என்ற அடவின் அடவுச் சொற்கட்டை குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ததிங்கிணதொம் அடவு

தாளம் :- ரூபகம்

| 0 | \|4 |
|---|---|
| **முதலாம் காலம்** | |
| த, திங், கி, ண, /<br>தொம், ; த, க, / | தொம்,; த, க, த, திங், கி, ண //<br>தி, கு, திங், கி, ண, தொம்,; // |
| **இரண்டாம் காலம்** | |
| ததிங்கிணதொம், தக / | ததிங்கிணதொம், தகதிகு திங்கிணதொம், // |
| **மூன்றாம் காலம்** | |
| ததிங்கிணதொம் தக<br>ததிங்கிணதொம் தக / | திகுததிங்கிண தொம் ததிங்கிண தொம்<br>தகததிங்கிண தொம்<br>தகதிகுததிங்கிணதொம்// |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.3 | :- | பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார். |
| செயற்பாடு **3.3.6** | :- | அடிப்படை அடவுகளில் ஒன்றான 1ஆவது மண்டி அடவினை ஆடிக் காட்வோம். |
| நேரம் | :- | 40 நிமிடங்கள்<br>(01 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • மண்டியடவின் செய்முறை வரைபடங்கள்.<br>• ஒளிப்படங்கள்.<br>• தட்டுக்கழி, தட்டுப்பலகை<br>• செயற்பத்திரம் 3.3.2.1<br>• பின்னிணைப்பு |

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.3.1**

- 1வது மண்டியடவு வரையப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ஆசிரியர் இவ்வடவின் பாதச் செய்கையனைச் செய்து காட்டுதல்.
- மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்
- ஆசிரியர் இவ்வடவின் கைச் செய்கையனைச் செய்து காட்டுதல்.
- மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்
- திரிகாலங்களிலும் பயிற்சியை மேற்கொள்ளல்.
- கையில் தாளம் போட்டவாறு அடவின் சொற்கட்டைக் கொலுப்பித்தல்.

☞ அடவின் செய்முறை விளக்கம்.
☞ இவ்வடவின் பெயர்.
☞ இவ்வடவின் தாளம்.
☞ தாளத்துடன் சொற்கட்டினைக் கொலுப்பித்தல்.
☞ திரி காலங்களிலும் கொலுப்பித்தல்.
☞ திரி காலங்களிலும் பாதச் செய்கையைப் பயிற்சி செய்தல்.
☞ கை அசைவுகளைச் செய்தல்.
☞ பாத அசைவுடன் கை அசைவினையும் இணைத்து ஆடுதல்.
☞ மண்டி அடவின் சொற்கட்டுடன் அடவினை ஆடுதல்.

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(10 நிமிடங்கள்)

## படி 3.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ 1வது மண்டியடவு அமைந்துள்ள தாளம் - ரூபகம்
☞ இவ்வடவிற்குப் பயன்படுத்தப்படும் முத்திரையின் பெயர் - திரிபதகம்
☞ அங்க சுத்தம், முழு மண்டி என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஆடுதல்.
☞ கையில் தாளம் போட்டவாறு சொற்கட்டினைக் கொழுப்பித்தல்.
☞ திரிகாலங்களிலும் ஆடிப்பயிற்சி செய்தல்.
☞ சொற்கட்டினைக் கொலுப்பித்தவாறு அடவினை ஆடுதல்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- 1வது மண்டி அடவு அமைந்துள்ள தாளத்தினைக் கூறுவார்.
- இவ்வடவின் பாதச் செய்கையினை ஆடிக் காட்டுவார்.
- பாதச் செய்கையுடன், கைச் செய்கையையும் இணைத்து ஆடுவார்.
- திரிகாலங்களிலும், அடவினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- இந்தஅடவலில் பயன்படுத்தப்படும் முத்திரையின் பெயரைக் குறிப்பிடுவார்.

## செயற்பத்திரம் 3.3.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- 1ஆவது மண்டியடவு அமைந்துள்ள தாளத்தின் பெயரைக் குறிப்பிடுக.
- இவ்வடவில் பயன்படுத்தப்படும் முத்திரையின் பெயரைக் குறிப்பிடுக.
- இவ்அடவினைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுக.
- 1ஆவது மண்டியடவினை மூன்று காலங்களிலும் ஆடிக்காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

### மண்டியடவு

சொற்கட்டு :- தாங்கிடு தத்த தின்னா
தாளம் :- ரூபகம்

| 0 | 4 |
|---|---|
| **முதலாம் காலம்**<br>தாங்கிடுதத், த, | தின்,ன, தாங்கிடு தத், த, தின்,ன, // |
| **இரண்டாம் காலம்**<br>தாங்கிடு தத்த தின்ன தாங்கிடு | தத்த தின்ன தாங்கிடு தத்ததின்ன<br>தாங்கிடு தத் தின்ன // |
| **மூன்றாம் காலம்**<br>தாங்கிடு தத்ததின்ன தாங்கிடு<br>தத்ததின்ன தாங்கிடு தத்த | தின்ன தாங்கிடு தத்ததின்ன<br>தாங்கிடு தத்த தின்ன<br>தாங்கிடு தத்த தின்ன<br>தாங்கிடு தத்த தின்ன<br>தாங்கிடு தத்த தின்ன // |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 3.0 :- பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.4 :- பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக்காட்டுவார்.

செயற்பாடு 3.4.7 :- அடிப்படை அடவுகளில் ஒன்றான 2 ஆவது மண்டியவினை ஆடுவோம்.

நேரம் :- 40 நிமிடங்கள்
(01 பாடவேளை)

தர உள்ளீடுகள் :-
- 2ஆவது மண்டியடவுச் செய்ம்முறை வரைபடம்.
- ஒளிப்படங்கள்.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.3.2.1

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.3.1

- 2ஆவது மண்டியடவின் செய்ம்முறை வரையப்பட்ட அட்டையினையும் ஒளிப்படங்களையும் காட்சிப்படுத்தல்.
- 1ஆவது, 2ஆவது மண்டியடவுகளில் காணப்படும் வேறுபாட்டினை ஆசிரியர் விளக்குதல்.

> - 2ஆவது மண்டியடவின் விளக்கமும் செய்முறையும்
> - பயன்படுத்தப்படும் முத்திரை
> - இவ்வடவின் மறுபெயர்
> - அமைந்துள்ள தாளம்
> - தாளத்துடன் சொற்கட்டினைக் கொலுப்பித்தல்
> - மூன்று காலங்களிலும் காற்செய்கையைக் கைச்செய்கையுடன் சேர்த்து ஆடுதல்.
>
> (20 நிமிடங்கள்)

### படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 3.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடிக்காட்டும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு செயல்முறையில் ஈடுபடும் பொழுது மற்றைய குழு கையில் தாளம் போட்டு அடவுச் சொற்கட்டினைக் கொலுப்பித்தல்.
- மாணவர்கள் செய்முறை பற்றிய கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள். கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

> ☞ 2ஆவது மண்டியடவு அமைந்துள்ள தாளம் ரூபகம்
> ☞ அங்க சுத்தம், முத்திரை, முழு மண்டி நிலை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஆடுதல்.
> ☞ கையில் தாளம் போட்டவாறு சொற்கட்டைக் கொலுப்பித்தல்.
> ☞ திரிகாலங்களிலும் இவ்வடவினை ஆடிப்பயிற்சி செய்தல்.
> ☞ சொற்கட்டினைக் கொலுப்பித்தவாறு அடவினை ஆடுதல்.
>
> (0 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- 2ஆவது மண்டியடவு அமைந்துள்ள தாளத்தைக் குறிப்பிடுவார்
- இவ்வடவில் பயன்படுத்தப்படும் முத்திரைகளின் பெயர்களைக் குறிப்பிடுவார்.
- இவ்வடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக்காட்டுவார்.
- அடவின் சொற்கட்டைத் திரிகாலங்களிலும் கொலுப்பிப்பார்.

## செயற்பத்திரம் 3.3.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- இவ்வடவு அமைந்துள்ள தாளத்தினைக் கூறுக.
- இவ்வடவின் சொற்கட்டைத் திரகாலங்களிலும் கொலுப்பிக்குக.
- இவ்வடவில் பயன்படுத்தப்படும் முத்திரைகளின் பெயர்களைக் கூறுக.
- இவ்வடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | :- | பரதநாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 4.3 | :- | அபிநயத்தின் வகைகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றினையும் விளக்கி, ஷிரோ, திருஷ்டி, கிரீவா, பாதம் ஆகியவற்றின் வகைகளையும் அறிந்து கூறுவார். |
| செயற்பாடு **4.3.1** | :- | பாதபேதத்தினைக் கற்றுக் கொள்வோம். |
| நேரம் | :- | 40 நிமிடங்கள்.<br>(01 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • பாத நிலைகளை விளக்கும் தோற்றப்படங்கள்.<br>• செயற்பத்திரம் 4.3.2 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 4.3.1

- பாதநிலைகளை விளக்கும் தோற்றப் படங்களைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்தியவற்றைக் கருத்திற் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> ☞ பாத பேதம் என்பதன் விளக்கம்.
> ☞ பாத பேதத்தின் சுலோகங்களைக் கூறுவார்.
> ☞ சுலோகத்தைச் சரியாக எழுதுதல்.
>
> (20 நிமிடங்கள்)

### படி 4.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

### படி 4.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ கால்களின் அசைவு பாதபேதம் மண்டலம், உத்பிளவனம், ப்ரமரி, பாதசாரி அடிப்படையான பாத பேதங்கள். இவ் அசைவுகள் முறையே நிற்றல், பாய்தல், சுற்றல், நடை
>
> (20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பாத பேதம் என்றால் என்ன எனக் கூறுவார்.
- பாத பேதம் (அடிப்படையான) எத்தனை வகைப்படும் எனக் கூறுவார்.
- இப் பாத அசைவுகளின் பெயர்களைக் கூறுவார்.

## செயற்பத்திரம் 4.3.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- பாத பேதம் என்பதன் பொருள் என்ன?
- அடிப்படையான பாத பேதங்கள் எவை?
- இவற்றின் அசைவுகளைக் குறிப்பிடுக.
- பாத பேதத்தின் செயற்பாடு பற்றிக் குறிப்பிடுக.

## இணைப்பு

நடன அசைவுகளுக்குத் தேவையான கால்களின் அசைவுகள் (நிலைகள்) பாத பேதம் எனப்படும். அடிப்படையான பாத பேதங்கள் நான்கு அடிப்படையான பாத பேதங்கள் நான்கு வகைப்படும். அவையாவன.

**பாதபேதம்**

மண்டலோத் ப்ளவனே சைவ பிரமரி பாதசாரிகா //
சதுர்தா பாதபேதாஹ சுவிஷ்தேஷாம் லக்ஷணம் உச்யதே //

**மண்டலம்** - நிற்கும் நிலை
**உத்பிளவனம்** - பாய்தல்
**பிரமரீ** - சுற்றிவருதல்
**பாதசாரிகா** - நடத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 4.0 :- பரதநாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.4 :- தேவ, நவக்கிரஹ, தஸாவதார, பாந்தங்ய ஹஸ்தங்களுக்குரிய முத்திரைகளையும் அவற்றின் பாத நிலைகளையும் அறிந்து கூறுவார்.

செயற்பாடு **4.4** :- தேவர்களின் பெயர்களையும், ஒவ்வொருவரையும் அபிநயிக்கப் பிரயோகிக்கும் ஹஸ்தங்களையும் அவற்றின் பாத நிலைகளையும் கற்றுக் கொள்வோம்.

நேரம் :- 40 நிமிடங்கள்.
(01 பாடவேளை)

தர உள்ளீடுகள் :-
- தேவர்களின் பெயர்களும் அவர்களை அபிநயிக்கப் பிரயோகிக்கும் முத்திரைகளும் எழுதப்பட்ட அட்டை, படங்கள் பாத நிலைகளின் படங்கள்.
- செயற்பத்திரம் 4.4.2.1 - பின்னிணைப்புப் பத்திரம்.

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 4.3.1

- தேவர்களின் பெயர்களும் அவர்களுக்குரிய ஹஸ்தங்களும் அடங்கிய அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.
- பாத நிலைகளின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தி கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

> ☞ தேவர்களின் பெயர்கள், தேவ ஹஸ்தங்களின் எண்ணிக்கை, தேவர்களும் அவர்களுக்குரிய தொழில்களும்
> ☞ தேவர்களை அபிநயிக்கும் ஹஸ்தங்கள்.
> ☞ ஹஸ்தங்களை அபிநயிக்கும் ஸ்தானங்கள்.
>
> (20 நிமிடங்கள்)

### படி 4.4.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் செயற்பத்திரத்திற்கமைவாக செயற்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் அச் செயற்பாட்டிலீடுபடுகின்றாரா? என்பதனை உறுதிப்படுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 4.4.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ தேவஹஸ்தங்கள் பதினாறு வகைப்படும் என்பது
> ☞ தேவர்களின் பெயர்களான பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்றன.
> ☞ இவர்களுக்குரிய தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல் முதலானவை.
> ☞ தேவர்களை அபிநயிக்கும் போது பிரயோகிக்கும் பாத நிலைகள் - ப்ரேங்கனம், ஸ்வஸ்திகம் போன்றன.
> ☞ தேவஹஸ்தங்களை அபிநயிக்கும் பொருத்தமான ஸ்தானங்கள்.
>
> (10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- தேவஹங்கள் எத்தனை வகைப்படும் என்பதைக் கூறுவார்.
- தேவர்களின் பெயர்களையும் தொழில்களையும் கூறுவார்.
- தேவர்களை அபிநயிக்க பிரயோகிக்கும் ஹஸ்தங்களைக் கூறுவார்.
- தேவர்களை அபிநயிக்கும் போது பிரயோகிக்கும் பாத நிலைகளைக் கூறுவார்.
- தேவ ஹஸ்தங்களை அபிநயிக்கும் பொருத்தமான ஸ்தானங்களைக் கூறுவார்.

## செயற்பத்திரம் 4.4.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- தேவ ஹஸ்தங்கள் மொத்தம் எத்தனை வகைப்படும்?
- தேவர்களின் பெயர்களை பட்டியற்படுத்துக.
- தொழில்களுக்குரிய தேவர்களின் பெயர்களைத் தருக.
- ப்ரேங்கன நிலையில் அபிநயிக்கக் கூடிய தேவர்களை தருக?
- தேவ ஹஸ்தங்களை அபிநயிக்கும் பொருத்தமான ஸ்தானங்களை பின்வரும் தேவர்களுக்கு தருக? பிரம்மா, இந்திரன், மன்மதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்புப் பத்திரம்

விரும்பிய பாத நிலைகளைப் பிரயோகிக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு.

| | தேவர்கள் | வலது கையும் ஸ்தானமும் | இடது கையும் ஸ்தானமும் | பாதநிலை |
|---|---|---|---|---|
| 01 | பிரம்மா (படைத்தல்) | ஹம்ஸாசியம் (மார்புக்கு நேராக) | சதுரம் (மார்புக்கு நேராக) | ஸ்வஸ்திகம் |
| 02 | சிவன் (அழித்தல்) | திரிபாதகம் (நாட்டியாரம்பத்தில்) | சிம்ஹமுகம் (நாட்டியாரம்பத்தில்) | ப்ரேங்கணம் |
| 03 | விஷ்ணு (காத்தல்) | திரிபாதகம் (மார்புக்கு நேராக) | திரிபாதகம் (மார்புக்கு நேராக) | ஸ்வஸ்திகம் |
| 04 | சரஸ்வதி (கல்வி) | சூசி (மார்புக்கு நேராக) | கபித்தம் (நாட்டியாரம்ப நிலைக்கு மேல்) | ஸ்வஸ்திகம் |
| 05 | பார்வதி | பதாகம் (மார்புக்கு நேராக மேல் நோக்கி) | பதாகம் (மார்புக்கு நேராக கீழ் நோக்கி) | அரைமண்டி நிலை |
| 06 | இலக்குமி (செல்வம்) | கபித்தம் (மார்புக்கு நேராக) | கபித்தம் (மார்புக்கு நேராக) | ஸ்வஸ்திகம் |
| 07 | விநாயகர் | கபித்தம் (மார்புக்கு நேராக மேல் நோக்கி) | கபித்தம் (மார்புக்கு நேராக கீழ் நோக்கி) | ஸ்வஸ்திகம் |
| 08 | சண்முகன் | சிகரம் (நாட்டியாரம்பநிலை) | திரிசூலம் (நாட்டியாரம்பநிலை) | ப்ரேங்கணம் |
| 09 | மன்மதன் (காதல்) | கடஹாமுகம் (மார்புக்கு நேராக) | சிகரம் (மார்புக்கு நேராக) | வ.கா.தட்டி முன்வைத்து இ.கா. சேர்த்தல் |
| 10 | இந்திரன் | திரிபாதகம் (தலைக்கு மேல்) | திரிபதாகம் (தலைக்கு மேல்) | வலது காலை இடது கால் மீது மடித்து வைத்தல் |
| 11 | அக்கினி (தீ) | திரிபதாகம் (மார்புக்கு நேராக) | காங்கூலம் (மார்புக்கு நேராக) | சமபாதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | தேவர்கள் | வலது கையும் ஸ்தானமும் | இடது கையும் ஸ்தானமும் | பாதநிலை |
|---|---|---|---|---|
| 12 | யமன் (உயிரைக் கவர்தல்) | சூசி (மார்புக்கு நேராக) | பாசம் (நாட்டியாரம்ப நிலைக்கு சற்று கீழ்) | ப்ரேங்கணம் |
| 13 | நிருத்தி (பேய்களின் கடவுள்) | ஷகடம் (மார்புக்கு நேராக) | கட்வா (மார்புக்கு நேராக) | ஸ்வஸ்திகம் |
| 14 | வருணன் (மழை கடவுள்) | பதாகம் (மார்புக்கு நேராக) | சிகரம் (மார்புக்கு நேராக) | சமபாதம் |
| 15 | வாயு (காற்றின் கடவுள்) | அராளம் (நாட்டியாரம்ப நிலைக்கு சற்று கீழ்) | அர்த்தபதாகம் (நாட்டியாரம்பம்) | ப்ரேங்கணம் |
| 16 | குபேரன் (செல்வம்) | முஷ்டி (மார்புக்கு நேராக) | அலபத்மம் (மார்புக்கு நேராக) | ஸ்வஸ்திகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | :- | பரதநாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 4.5 | :- | புஷ்பாஞ்சலி, அரங்கதேவதாஸ்துதி, நாட்டியக் கிரமம், பாத்திர அந்தப்பிராணன், பகிப் பிராணன், கிங்கிணி ஆகியவற்றிற்குரிய ஸ்லோகங்களையும் பொருள்களையும் கூறுவார். |
| செயற்பாடு **4.5.1** | :- | அரங்கதேவதாஸ்துதி, நாட்டியக் கிரமம் இவற்றின் ஸ்லோகங்களையும் கருத்துக்களையும் அறிந்து கொள்வோம். |
| நேரம் | :- | 40 நிமிடங்கள். (01 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • அரங்கதேவதாஸ்துதி, நாட்டியக் கிரமம் இவற்றின் ஸ்லோகங்கள் அடங்கிய அட்டை<br>• செயற்பத்திரம் 4.5.1.2 - பின்னிணைப்புப் பத்திரம். |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 4.5.1

- அரங்கதேவதாஸ்துதி, நாட்டியக் கிரமம் இவற்றின் ஸ்லோகங்கள் அடங்கிய அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.
- காட்சிப் படுத்தியவற்றைக் கருத்திற் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தி கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

☞ அரங்கதேவதாஸ்துதி என்றால் என்ன? என்பது பற்றிய விளக்கம்.
☞ அரங்க தேவதாஸ்துதிக்குரிய ஸ்லோகம் உச்சரிப்பு.
☞ அரங்க தேவதாஸ்துதியின் கருத்து.
☞ நாட்டியக் கிரமம் என்பது பற்றிய விளக்கம்.
☞ நாட்டியக் கிரமத்திற்குரிய ஸ்லோகம்
☞ நாட்டியக் கிரமத்திற்குரிய கருத்து

(20 நிமிடங்கள்)

### படி 4.5.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 4.5.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ அரங்கத்தின் தேவதையைக் குறிப்பது அரங்க தேவதாஸ்துதி
> ☞ அதன் ஸ்லோகம் கருத்து
> ☞ நாட்டியத்தின் கிரமம் பற்றியது.
> கைகள் செல்லுமிடம் கண்
> கண் செல்லுமிடம் மனம்
> மனம் செல்லுமிடம் பாவம்
> பாவம் செல்லுமிடம் இரசனை
>
> (20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- அரங்க தேவதாஸ்துதியின் ஸ்லோகத்தை சரியான உச்சரிப்புடன் கூறுவார்.
- அரங்க தேவதாஸ்துதியின் பொருளைக் கூறுவார்.
- நாட்டியக் கிரமத்திற்குரிய ஸ்லோகத்தினைக் கூறுவார்.
- நாட்டியக் கிரமத்தின் பொருளைக் கூறுவார்.

ஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞ

## செயற்பத்திரம் 4.5.1.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- அரங்க தேவதாஸ்துதி என்றால் என்ன?
- அரங்க தேவதாஸ்துதிக்குரிய ஸ்லோகத்தினைக் கூறுக.
- அதன் பொருளினைக் கூறுக.
- நாட்டியக் கிரமத்திற்குரிய ஸ்லோகத்தினைக் கூறுக.
- நாட்டியக் கிரமத்தின் பொருளினைக் கூறுக.

ஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞஞ

## இணைப்பு

### அரங்க தேவதாஸ்துதி

பரத குல பாக்கிய கலிகே
பாவரஸானந்த பரின தாகரே/
ஜெகதேக மோகனகலே
ஜெய ஜெய ரங்காதி தேவதா தேவி//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்து :-**

பரத குலத்திற்கு மொட்டுப் போன்றவளும், பாவம், இரசம் இவைகளால் ஏற்படுத்தக் கூடிய ஆனந்த சொரூபமானவளும், உலகத்தை எல்லாம் சோபிக்கச் செய்யும் அரங்க தேவதையாகிய கலைவாணியே உமக்கு ஜெயம் உண்டாகட்டும்.

**நாட்டியக் கிரமம்**

யதோ ஹஸ்த  ததோ திருஷ்டி
யதோ திருஷ்டி  ததோ மனஹ /
யதோ மனஹ  ததோ பாவஹ
யதோ பாவஹ  ததோ ரஸஹ //

**கருத்து :-**

கைகள் செல்லுமிடத்து கண்கள் செல்லல் வேண்டும், கண்கள் செல்லுமிடத்து மனம் செல்ல வேண்டும். மனம் செல்லுமிடத்து பாவம் செல்ல வேண்டும். பாவம் செல்லுமிடத்து இரசனை உண்டாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | :- | பரதநாட்டியம் கிராமிய நடனம் என்பன பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார். |
| தேர்ச்சி மட்டம் 5.3 | :- | சங்ககாலம் தொடக்கம் சோழர்காலம் வரையிலான நடனக் கலை வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். |
| செயற்பாடு 5.3.1 | :- | சங்ககாலத்தில் நிலவிய ஆடற்கலை பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | :- | 40 நிமிடங்கள். (01 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • செயற்பத்திரம் 5.3.2.1 - பின்னிணைப்புப் பத்திரம். |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 5.3.1

- நடனக் கலையின் ஆரம்பகால வரலாறுகள் பற்றி மாணவர்கள் அறிந்து வைத்துள்ளமை பற்றிக் கேட்டறிக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> ☞ ஆடல் பற்றிக் கூறும் சங்ககால இலக்கியங்கள்.
> ☞ மன்னரின் ஆதரவு.
> ☞ ஆடப்பட்ட ஆடல் வகைகள்.
> ☞ ஆடல் இடம் பெற்ற சந்தர்ப்பங்கள்.
> ☞ ஆடல் களம்
> ☞ ஆடல் மகளிர்
>
> (10 நிமிடங்கள்)

### படி 5.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினையும் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற் கேற்பச் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 5.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ சங்க காலத்தில் நடனக் கலைஞர்கள் கூத்தர், கூத்தியர், கோடியர், வயிரியர், கண்ணூலர், விறலியர் என அழைக்கப்பட்டனர்.
> ☞ நடனக் கலை கூத்து, ஆடல், குனிப்பு எனும் பெயர்களால் அழைக்கப்பட்டது.
> ☞ சங்ககால ஆடல் பற்றிக் கூறும் மிக முக்கியமான இலக்கியங்கள் - கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை
> ☞ சங்க காலத்தில் இடம் பெற்ற அடிப்படைப் பண்கள் மருதம், செவ்வழி, பாலை, குறிஞ்சி
>
> (10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சங்க கால ஆடல் கலைஞர்கள் பற்றிக் கூறுவார்.
- இடம் பெற்ற ஆடல் வகைகள் பற்றிக் கூறுவார்.
- வழக்கிலிருந்த இசைக்கருவிகள் பற்றிக் கூறுவார்.
- சங்ககாலத்திலிருந்த பண்கள், இசைக் கருவிகள் பற்றிக் குறிப்பிடுவார்.

## செயற்பத்திரம் 5.3.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.)**

- சங்ககால நடனக் கலைஞர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
- சங்ககாலத்து ஆடல் எவ்வாறு அழைக்கப்பட்டது?
- சங்ககாலத்து ஆடல் வகைகள் யாவை?
- சங்ககாலத்தில் நடனக் கலை உயர் நிலையிலிருந்தமைக்கான காரணம் பற்றிக் கூறுக.

## பின்னிணைப்பு

சங்ககாலத்திலே மக்களும் மன்னரும் இவ்வுலக இன்பங்களில் நன்கு தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். இக்காலத்திலும் இதற்கு முன்பும் பலவகையான நடனங்கள் நிலவி வந்துள்ளன. மக்களின் வாழ்வில் இசையும் நடனமும் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தமைக்கு நூல்கள் தக்க சான்றுகளாகும். சங்க கால நடனங்கள் சமய, உலகியல் சார்புள்ளனவாக நிலவி வந்துள்ளன. ஐவகை நிலங்களுக்கும் தனித்தனியான ஆடல் வகைகள், பண்கள், இசைக்கருவிகள் என்பன இடம் பெற்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலத்திலே நடனம், கூத்து, ஆடல், குனிப்பு என அழைக்கப்பட்டது. ஆடுவோர் கூத்தர், கூத்தியர், கோடியர், வயிரியர், கண்ணூலர், விறலியர் என அழைக்கப்பட்டனர்.

வள்ளிக் கூத்து, குரவைக் கூத்து, வேலன் வெறியாட்டு, துணங்கை, முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை போன்ற ஆடல்கள் இடம் பெற்றுள்ளன. இதில் துணங்கை கூத்து, பெண்கள் மட்டுமே ஆடும் நடனமாகும். சங்ககால மக்கள் குழுவாகவே வாழ்ந்தனர். எனவே, இவர்களது பெரும்பாலான நடனங்கள் குழு நடனங்களாகவே விளங்கின. மன்னர்களைக் காணச் செல்லும் விறலியோ அல்லது கூத்தரோ தனி நடனம் செய்வார்கள்.

மருதம், செவ்வழி, பாலை, குறிஞ்சி எனும் நான்கு அடிப்படையான பண்கள் வழக்கிலிருந்தன. இவை தவிர நைவளம், காமரம் ஆம்பல் முதலிய கிளைப்பண்களும் இடம் பெற்றிருந்தன.

சங்க நூல்களிலே வில்யாழ், பேரியாழ், பறை, முழவு, முரசம், பதலை, தொண்டகம், ஆகுளி, குழல், சங்கு, தட்டை, தடாரி, வயிர், பாண்டில் முதலிய இசைக் கருவிகளும் கூறப்பட்டுள்ளன.

ஆடற் கலைஞரின் அழகிய தோற்றம் அணிகள் ஒப்பனை முதலியவை பற்றிய குறிப்புக்களையும் சங்க நூல்களில் காணலாம். உள்ளி விழாவின் போது ஆடல் மகளிர் *அணிந்த மணிகளோடு கூடிய மேகலை பற்றியும் சிவந்த பாதத்திலே வீரக் கழல்* அசைய அழகிய அரையில் கட்டப்பட்ட மணிகளுடன் பொன்னாலான கஞ்சக் கருவி (சல்லாரி) ஒலிப்ப ஒரு கலைஞர் ஆடுவது பற்றியும் பல குறிப்புக்கள் இலக்கியங்களில் உள்ளன.

மேலும், நடனங்கள் அரங்கு, தெரு, மணலுள்ள இடம், வீட்டின் முன்பக்கம் முதலியவற்றிலே இடம் பெற்றுள்ளன. நகர்ப்புறங்களிலே கூத்தினை நிகழ்த்துவதற்கு அரங்குகளும் இருந்தன.

கலைஞர்களை மன்னர்கள் நன்கு ஆதரித்து விலையுயர்ந்த பரிசில்களும் கௌரவங்களும் வழங்கியமையால் சங்ககால ஆடற் கலை செழிப்புற்று காணப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | :- | பரதநாட்டியம் கிராமிய நடனம் என்பன பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார். |
| தேர்ச்சி மட்டம் 5.3 | :- | சங்ககாலம் தொடக்கம் சோழர்காலம் வரையிலான நடனக் கலை வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். |
| செயற்பாடு **5.3.2** | :- | சங்கமருவிய காலத்தில் நடனக் கலையின் நிலை பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | :- | 40 நிமிடங்கள்.<br>(01 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • செயற்பத்திரம் 5.3.2.1 - பின்னிணைப்புப் பத்திரம். |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 5.3.1

- சங்ககால நடனக் கலை தொடர்பாக மீட்டல் செய்து மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- சங்கமருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம் பற்றி மாணவர்கள் அறிந்தவை பற்றிக் கேட்டறிக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

☞ சங்கமருவிய கால ஆடற்கலையைப் படம் பிடித்துக் காட்டும் இலக்கியம் சிலப்பதிகாரம்.
☞ அக்காலத்திலெழுந்த அறநூல்களில் உள்ள ஆடற்கலை பற்றிய குறிப்புக்கள்.
☞ சிலப்பதிகாரத்தில் மாதவியின் ஆடல் மூலம் கூறப்படும் நடனம் தொடர்பான செய்திகள்.
☞ நடனம் கற்கும் வயது.
☞ கற்க வேண்டிய காலம்.
☞ அரங்கேற்றம் செய்யும் முறை.
☞ கை முத்திரைகள்.
☞ 11 வகை ஆடல்.
☞ அக்காலத்தில் நிலவிய நடன வகைகள்.
- வேட்டுவரி, ஆச்சியர் குரவை, குன்றக் குரவை, சாக்கையர் கூத்து, வரிக்கோலம்
☞ சிறந்த நாட்டிய மடந்தைக்கு வழங்கப்பட்ட ''தலைக் கோலிப் பட்டம்''

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படி 5.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினையும் பின்னிணைப்யையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற் கேற்பச் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

### படி 5.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ சங்கமருவிய காலத்தில் ஒரு சார்பினர் நடனக் கலையை கேவலமான ஒன்றாக கருதியுள்ளனர்.
> ☞ இதற்குச் சான்றுகள் அற இலக்கியங்களில் உள்ளன.
> ☞ இருப்பினும் அறஇலக்கிய காலத்தின் பின் வந்த சிலப்பதிகாரம் ஆடற் கலை உன்னத நிலையிலிருந்தமையைக் காட்டுகிறது.
> ☞ எனவே, ஒரு சாரார் ஆடற்கலையைக் கேவலமானது எனக் கருதிய போதும் பெரும்பான்மை ஆதரவு அதற்குக் கிடைத்தமையே அதன் தொடர்ச்சியான வளர்ச்சிக்குக் காரணம்.
>
> (10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சங்கமருவிய காலத்தில் ஒரு சாரார் நடனக் கலையை ஆதரிக்க மற்றொரு சாரார் அதனை ஒதுக்கியமை பற்றிக் கூறுவார்.
- சிலப்பதிகாரமே சங்கமருவிய கால நடனக் கலைக்கு மணி மகுடம் என்பதை விபரிப்பர்.
- மாதவியின் ஆடலூடாக சங்கமருவிய கால நடனக் கலை எவ்வாறு இருந்தது என்பதை விபரிப்பார்.
- சிறந்த நடன மணிக்கு வழங்கப்படும் தலைக்கோலிப் பட்டம் பற்றிக் கூறுவார்.

## செயற்பத்திரம் 5.3.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.)**

> - சங்கமருவிய காலத்தில் நடனக் கலை பற்றிக் கூறும் அற இலக்கியங்கள் எவை?
> - இக்கால ஆடலைத் துல்லியமாக விளக்கி நிற்கும் இலக்கியம் யாது?
> - சிறந்த நடனக் கலைஞருக்கு வழங்கப்பட்ட பட்டம் யாது?
> - சிலப்பதிகாரம் கூறும் நடனம் பற்றிய செய்திகளைக் கூறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

தமிழக வரலாற்றில் சங்கமருவிய காலத்தை நோக்கும் போது நாம் சிலப்பதிகாரத்திலிருந்து தான் ஆடற்கலை பற்றிக் குறிப்பிட விளைகின்றோம். ஆனால், சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த அற இலக்கியங்கள் (பதினென் கீழ்க் கணக்கு நூல்கள்) கூட ஆடற் கலை பற்றிக் கூறிச் சென்றுள்ளன. இவை அற இலக்கியங்களாதலால் நடனம், கூத்துகளை ஒரு பெருமையான தொழிலாக அந்நூல்கள் கொள்ளவில்லை.

எனினும், வள்ளுவர், கூத்தினை ஆடுவதற்குத் தனித்த அவை இருந்தது என்கிறார். நாலடியாரோ உயிரைக் கூத்தன் என்கின்றது. கூத்தாடுபவன் இடைவிடாது பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆடும் மகளிர் அணிகலன்களால் ஒப்பனை செய்து கொள்வார் என்றும் வரும் செய்திகளைக் காணலாம். ஏலாதி, கைந்நிலை, திரிகடுகம் என்பன கூத்தினை இழிவாகவே பேசுகின்றன.

இவற்றைத் தொடர்ந்து வந்த சிலப்பதிகாரம் ஆடற்கலைக்கு மகுடம் வைத்தாற் போல் அமைகிறது. நடனத்தினை முறையாகக் கற்று அரங்கேற்றுவதற்கு ஒரு நடனப் பெண் நடனம் கற்கத் தொடங்கும் வயது, கற்க வேண்டிய காலம், அரங்கேற்றம் செய்யும் முறை, அரங்கேற்றத்தில் செய்யப்படவேண்டிய கூத்துக்கள் என்பன பற்றி நன்கு விளக்கியுள்ளது.

நடனத்தின் பக்கவாத்தியக்காரர்களான ஆடல் ஆசிரியன் (நட்டுவனார்) தகுதி, தண்ணுமை, குழல், யாழ் என்பன இசைப்போர் பற்றியும் அரங்கு, எழிற்கை, தொழிற்கை, பிண்டி, பிணையல் என்கின்ற கைகளின் தொழிற்பாடுகள் பற்றியும் கூறுகின்றது.

மேலும், வேத்தியல், பொதுவியல் எனும் இரண்டு வகை நடனங்களில் கௌத்துவமும் 11 வகை ஆடலும் பொதுவியலில் அடங்குவதாகவும் கூறுகிறது.

மேலும், வேட்டுவவரி, ஆச்சியர் குரவை, குன்றக் குரவை, சாக்கையர் கூத்து வரிக்கோலம் போன்று நடன வகைகள் பற்றிய செய்திகளையும் அறிய முடிகிறது.

சிறந்த நாட்டிய மடந்தைக்கு வழங்கப்பட்ட ''தலைக் கோலிப்பட்டம்'' மாதவிக்கு வழங்கப்பட்ட செய்தியையும் காணமுடிகிறது. இன்றைய நடனத்திற்குரிய 4 வித பாவங்களையும் அன்றே சிலப்பதிகாரம் விரிவாக விளக்கியுள்ளது.

எனவே, சங்கமருவிய காலத்தில் நடனக் கலை ஒரு வரன் முறைக்குட்பட்டனவாய் உயர்ந்த நிலையிலிருந்தமையை அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் தவணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | :- | பரதநாட்டிய நிகழ்ச்சிகளையும், கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்துத் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 1.3 | :- | கலை நிறுவனங்களால் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளிலும் நடனப் போட்டிகளிலும் இடம் பெறும் நிகழ்ச்சிகளிலும் தாம் நயந்தவற்றைக் கூறுவார். |
| செயற்பாடு 1.3. | :- | பக்க வாத்திய இசை மற்றும் வாய்ப்பாட்டிசையை இரசிப்போம் (ஜதிஸ்வரம்) |
| நேரம் | :- | 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்.<br>(02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • ஜதிஸ்வரம் பாடல் அடங்கிய ஒலிப்பதிவு நாடா. ஒலிப்பதிவுக் கருவி.<br>• செயற்பத்திரம் 1.3.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 1.3.1

- ஜதிஸ்வரப் பாடல் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்து செவிமடுக்கச் செய்தல்.
- பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாகக் கலந்துரையாடுவார்.

> ☞ ஜதீஸ்வரத்தில் அமைந்துள்ள தீர்மானம், ஜதிக் கோர்வைகளின் அமைப்பு
> ☞ பாடல் அமைப்பு முறை - மத்திம காலம்
> - துரித காலம்
> ☞ ஜதீஸ்வரத்தில் நயக்கக் கூடிய பொதுவான அம்சம் - ஸ்வர அமைப்பு, பல்லவியின் பின்னர் தீர்மானம் (அதன் ஜதி அமைப்பு)
> ☞ இவற்றில் மாணவர்களின் அபிப்பிராயங்களை வெளிக்கொணரல்.
> ☞ ஜதீஸ்வரத்தில் பயன்படுத்தப்பட்ட வாத்தியங்களில் நயந்த விடயங்கள்
> ☞ குறிப்பாக மிருதங்கத்தில் தீர்மானத்தை வாசித்ததில் நயந்த விடயங்கள்.
>
> (40 நிமிடங்கள்)

### படி 1.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- சகல குழுக்களும் செயற்பத்திர அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுகின்றார்களா? என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 1.2.3**

- ஒவ்வொரு குழுவினரும் தமது கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது கருத்துக்களை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ மாணவர்கள் வாய்ப்பாட்டிசையில் நயந்த விடயங்கள்.
> ☞ மாணவர்கள் வாத்திய இசையில் நயந்தவை.
> ☞ நயந்த பகுதியைப் பாடியோ இசைத்தோ (Humming) வெளிக்காட்டுதல்.
>
> (20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஜதிஸ்வரத்தினை நயப்பார்.
- நயந்த வாய்ப்பாட்டிசையை இசைத்துக் (Humming) காட்டுவார்.
- மிருதங்க வாசிப்பில் நயந்த பகுதியைக் குறிப்பிடுவார்.
- அதனை நயந்தமைக்கான காரணங்களைப் பட்டியற் படுத்துவார்.

## செயற்பத்திரம் 1.3.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

> ☞ ஜதிஸ்வரத்தைக் கேட்கச் சந்தர்ப்பம் வழங்குக.
> ☞ ஜதிஸ்வரத்தில் நயந்த வாய்ப்பாட்டிசையை இசைத்தோ (Humming) பாடியோ காட்டுக.
> ☞ மிருதங்க வாத்தியத்தினை செவிமடுத்தபோது நயந்த பகுதியாது?
> ☞ அதனை நயந்தமைக்கான காரணங்கள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 2.0 | :- | சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக் கொணர்வார் |
| தேர்ச்சி மட்டம் 2.4 | :- | வருடாந்தக் கலை நிகழ்ச்சியை நடாத்துவார். |
| செயற்பாடு 2.4 | :- | குறித்த வருடத்தில் கற்ற விடயங்களைத் தொகுத்து அரங்கேற்றுவோம். |
| நேரம் | :- | 2 மணித்தியாலம் 40 நிமிடங்கள்.<br>(04 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • மேடை நடன நிகழ்ச்சிகள் அடங்கிய ஒளிநாடா, தொலைக் காட்சிக் கருவி, ஒளிப்பதிவுக் கருவி, வீடியோபெட்டிகைப் பதிகருவி, ஆடை அணிகலன்கள், ஒப்பனை, பக்க வாத்தியங்கள், மாதிரி அழைப்பிதழ், கணினி. |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 2.4.1

- தொலைக்காட்சிக் கருவிமூலம் மேடை அரங்க நிகழ்ச்சியை மாணவர்கள் அவதானிக்க வழிப்படுத்தல்.
- வருடத்தில் கற்ற நடனங்கள் பற்றியும் மேடையேற்றும் நடனங்கள் பற்றியும் கலந்துரையாடல்.
- கலை நிகழ்ச்சியொன்றினை மேடையேற்றுவதற்கு எத்தகைய ஆயத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதையும் ஏற்கனவே கடந்த தரங்களில் அவர்களால் நடாத்தப்பட்ட ஆற்றுகைகள் பற்றியும் கலந்துரையாடிப் பின்வரும் விடயங்களையும் வலியுறுத்திக் கலை நிகழ்ச்சியைத் திட்டமிடுக.

- ☞ பாடசாலைக் கீதம், தேவாரம், தேசிய கீதம்
- ☞ வரவேற்புரை, நன்றியுரை, அதிதியின் உரை
- ☞ தரமான நிகழ்ச்சி நிரல்
- ☞ தனி நடனம் / குழு நடனம்
- ☞ பரத நாட்டியம்
- ☞ கிராமிய நடனம்
- ☞ பொருத்தமான ஒப்பனை, ஆடை, அலங்காரம்
- ☞ ஒலி, ஒளி அமைப்பு
- ☞ பக்கவாத்தியங்கள்
- ☞ நிகழ்ச்சித் தொகுப்பாளர், அறிவிப்பாளர் பற்றிய தீர்மானம்

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 2.4.2

- நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவரை நியமித்துப் பயிற்சிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வொரு குழுவினரும் தத்தம் வேலைகள் பற்றிப் பிரத்தியேகமாகக் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்க வழிகாட்டுக.
- தீர்மானித்தபடி குழுவினர் தமக்குரிய பணிகளில் ஈடுபடுகின்றனரா, குறித்த தினத்தில் மேடையேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதி செய்க.

(20 நிமிடங்கள்)

## படி 2.4.3

- சகல குழுக்களும் தத்தமது நிகழ்ச்சிகளைச் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.
- நிகழ்ச்சி நிரலிலுள்ள ஒழுங்கில் ஒத்திகை பார்க்குக.
- ஒத்திகையின் போது நிகழ்ச்சிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனை வழங்குக.
- ஒத்திகை பார்க்கும் போது ஏனைய குழுக்களின் விமர்சனத்தை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- தீர்மானித்தபடி குழுவினர் தமக்குரிய பணிகளில் ஈடுபடுகின்றனரா, குறித்த தினத்தில் மேடையேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதி செய்க.
- மேடையேற்றல் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

- ☞ நாட்டியக் கலை நிகழ்ச்சி ஒன்றினை அரங்கேற்றுவதற்கான முன்னோடித் திட்டமிடல்.
- ☞ மேடையேற்றப்பட வேண்டிய நிகழ்ச்சிகளைத் தீர்மானித்துப் பட்டியற் படுத்துக.
- ☞ சகல மாணவர்களும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் விதத்தில் நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்தல்.
- ☞ கலை நிகழ்ச்சிகளுக்குப் போதுமான அளவு பயிற்சி செய்தல்.
- ☞ அழைப்பிதழில் திகதி, நேரம், இடம், பிரதம அதிதி, கௌரவ விருந்தினர், அழைப்பவர் பெயர் போன்ற விடயங்கள் இடம் பெறல் வேண்டும்.
- ☞ நிகழ்ச்சி நிரலில் வரவேற்புரை, கலை நிகழ்ச்சிகள், தேசிய கீதம், பாடசாலைக் கீதம், அதிதியின் உரை, நன்றியுரை போன்ற விடயங்கள் இடம் பெறவேண்டும்.
- ☞ அழைக்கப்பட வேண்டியோர், அழைப்பிதழ் தயாரித்தல், மேடை அலங்காரம், பக்கவாத்தியம், ஆடை அலங்காரம், ஒப்பனை, வரவேற்பு, சிற்றுண்டி ஒழுங்கு முதலியன.
- ☞ வெவ்வேறு குழுக்களிடம் பணி ஒப்படைப்பு.
- ☞ கலை நிகழ்ச்சி அரங்கேற்றப்படும் போது நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர், அறிவிப்பாளர் ஆகியோரின் பங்கு அவசியம்.

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- மேடையேற்ற வேண்டிய நிகழ்ச்சிகளைத் தீர்மானித்துப் பட்டியற் படுத்துவார்.
- மேடையேற்றுவதற்கான பயிற்சிகளில் ஈடுபடுவார்.
- நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கான ஆயத்தங்களைச் செய்து முடிப்பார்.
- நிகழ்ச்சிகளை மேடையேற்றுவார்.
- இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய எப்போதும் உற்சாகத்துடன் ஈடுபடுவார்.

(20 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.1 | :- | ஒற்றைக்கை முத்திரைகளையும் இரட்டைக் கை முத்திரைகளையும் அவற்றிற்குரிய விநியோகங்களையும் செய்து காட்டுவார். |
| செயற்பாடு **3.1.1** | :- | அஞ்சலி, கபோதம், கர்கடகம், ஸ்வஸ்திகம், டோலம், புஷ்பபுடம் ஆகிய ஹஸ்தங்களின் விநியோகங்களைச் செய்து காட்டுவோம். |
| நேரம் | :- | 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (03 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • அஞ்சலி, கபோதம், கர்கடகம், ஸ்வஸ்திகம், டோலம், புஷ்பபுடம் ஆகிய ஹஸ்தங்கள் எழுதப்பட்ட ஸ்லோக அட்டைகள்.<br>• செயற்பத்திரம் 3.1.2.1, பின்னிணைப்பு |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.1.1

- ஏற்கனவே வகுப்பறையில் கற்ற ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களிடம் வினவி நெறிப்படுத்துக.
- அன்றாட நடைமுறையில் நாம் எமது கைகளைப் பிரயோகித்து செய்யும் செய்கைகளில் தெரியும் ஹஸ்தங்களை மாணவர்கள் இனங்காண வழிப்படுத்துக.
- பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாகக் கற்பித்தலை மேற்கொள்ளவும்.

☞ அஞ்சலி, கபோதம், கர்கடகம், ஸ்வஸ்திகம், டோலம், புஷ்பபுடம் ஆகிய ஹஸ்தங்களின் ஸ்லோகங்களை ஆசிரியர் உச்சரித்தவாறு அபிநயித்துக்காட்ட மாணவர் அவதானித்தல்.
☞ ஒவ்வொரு ஹஸ்தமாக ஆசிரியர் விநியோகங்களை உச்சரிப்புடன் கூறிக் கருத்தினையும் கூறுதல்.
☞ ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களும் உச்சரித்து அவற்றின் கருத்துக்களைக் கூறுதல்.
☞ ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து அபிநயித்தல்
☞ மேற்குறித்த ஹஸ்த விநியோகத்தின் ஸ்லோகத்தினை அங்க சுத்தத்துடனும் பாவத்துடனும் அபிநயித்துக் கூறுதல்.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 3.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- குழு நிலையில் ஸ்லோகங்களை உச்சரித்து அபிநயித்துக் காட்டும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- சகல குழுக்களும் ஸ்லோகத்தினைப் பிழையின்றி உச்சரித்து அபிநயித்துக் காட்டுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 3.1.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ அஞ்சலி, கபோதம், கர்கடகம், ஸ்வஸ்திகம், டோலம், புஷ்பபுடம் ஆகிய ஹஸ்தங்களின் விநியோகத்திற்குரிய ஸ்லோகங்கள் யாவும் வடமொழியில் அமைந்துள்ளமை.

☞ அஞ்சலி, கபோதம், கர்கடகம், ஸ்வஸ்திகம், டோலம், புஷ்பபுடம் ஆகிய ஹஸ்த விநியோகங்களைக் கருத்திற்கேற்ப பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்தல்.

☞ அஞ்சலி, கபோதம், கர்கடகம், ஸ்வஸ்திகம், டோலம், புஷ்பபுடம் ஆகிய ஹஸ்த விநியோகங்களுக்குரிய ஸ்லோகங்களைத் தெளிவாக உச்சரித்தல்.

(30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- அஞ்சலி, கபோதம், கர்கடகம், ஸ்வஸ்திகம், டோலம், புஷ்பபுடம் ஆகிய ஹஸ்தங்களுக்குரிய ஸ்லோகங்களைத் தெளிவான உச்சரிப்புடன் கூறுவார்.
- மேற்குறித்த ஹஸ்த விநியோகங்களுக்குரிய கருத்துக்களைக் கூறுவார்.
- ஒவ்வொரு முத்திரையின் விநியோகத்தையும் அதன் கருத்திற்கேற்ப அபிநயித்துக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பத்திரம் 3.1.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- ☞ அஞ்சலி, கபோதம், கர்கடகம், ஸ்வஸ்திகம், டோலம், புஷ்பபுடம் ஆகிய ஹஸ்த விநியோகங்களில் ஒன்றை பிழையின்றி பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்துக் காட்டுக.
- ☞ ஆசிரியர், எழுமாறாக சில விநியோகங்களை வினவ மாணவர் அவற்றின் பொருளைக் கூறி அபிநயித்துக் காட்டுக.

| | | |
|---|---|---|
| உதாரணம்:- | அஞ்சலி | - தேவதா |
| | கபோதம் | - குருசம்பாசே |
| | கர்கடகம் | - ஸங்க பூரணே, அங்கானாம் மோடனே. |
| | ஸ்வஸ்திகம் | - மகரே |
| | டோலம் | - நாட்டியாரம்பே |
| | புஷ்பபுடம் | - வாரிபலாதிக்ரகனே, ஸந்தியாயாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.1 | :- | ஒற்றைக்கை முத்திரைகளையும் இரட்டைக் கை முத்திரைகளையும் அவற்றிற்குரிய விநியோகங்களையும் செய்து காட்டுவார். |
| செயற்பாடு **3.1.2** | :- | உத்ஸங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம், கத்தரீஸ்வஸ்திகம் ஆகிய ஹஸ்தங்களின் விநியோகங்களைச் செய்து காட்டுவோம். |
| நேரம் | :- | 40 நிமிடங்கள்.<br>(01 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • உத்ஸங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம், கத்தரீஸ்வஸ்திகம் ஆகிய ஹஸ்தங்கள் எழுதப்பட்ட ஸ்லோக அட்டைகள்.<br>• செயற்பத்திரம் 3.1.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.1.5.1

- ஏற்கனவே வகுப்பறையில் கற்ற ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களிடம் வினவி நெறிப்படுத்துக.
- அன்றாட நடைமுறையில் நாம் எமது கைகளைப் பிரயோகித்து செய்யும் செய்கைகளில் தெரியும் ஹஸ்தங்களை மாணவர்கள் இனங்காண வழிப்படுத்துக.
- பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாகக் கற்பித்தலை மேற்கொள்ளவும்.

☞ உத்ஸங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம், கத்தரீஸ்வஸ்திகம் ஆகிய ஹஸ்தங்களின் ஸ்லோகங்களை ஆசிரியர் உச்சரித்தவாறு அபிநயித்துக்காட்ட மாணவர் அவதானித்தல்.

☞ *ஒவ்வொரு ஹஸ்தமாக ஆசிரியர் விநியோகங்களை உச்சரிப்புடன் கூறிக்* கருத்தினையும் கூறுதல்.

☞ ஹஸ்தங்களின் விநியோகங்களை மாணவர்களும் உச்சரித்து அவற்றின் கருத்துக்களைக் கூறுதல்.

☞ ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து விநியோகங்களைக் கூறுதல்.

☞ மேற்குறித்த ஹஸ்த விநியோகத்தின் ஸ்லோகத்தினை அங்க சுத்தத்துடனும் பாவத்துடனும் அபிநயித்துக் கூறுதல்.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படி 3.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- குழு நிலையில் ஸ்லோகங்களை உச்சரித்து அபிநயித்துக் காட்டும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- சகல குழுக்களும் ஸ்லோகத்தினைப் பிழையின்றி உச்சரித்து அபிநயித்துக் காட்டுகின்றார்களா? என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

### படி 3.1.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ உத்ஸங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம், கத்தரீஸ்வஸ்திகம் ஆகிய ஹஸ்தங்களின் விநியோகத்திற்குரிய ஸ்லோகங்கள் யாவும் வடமொழியில் அமைந்துள்ளமை.
> ☞ உத்ஸங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம், கத்தரீஸ்வஸ்திகம் ஆகிய ஹஸ்த விநியோகங்களைக் கருத்திற்கேற்ப பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்தல்.
> ☞ உத்ஸங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம், கத்தரீஸ்வஸ்திகம் ஆகிய ஹஸ்த விநியோகங்களுக்குரிய ஸ்லோகத்தைத் தெளிவாக உச்சரித்தல்.
>
> (10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- உத்ஸங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம், கத்தரீஸ்வஸ்திகம் ஆகிய ஹஸ்தங்கலுக்குரிய ஸ்லோகங்களைத் தெளிவான உச்சரிப்புடன் கூறுவார்.
- மேற்குறித்த ஹஸ்த விநியோகங்களுக்குரிய கருத்துக்களைக் கூறுவார்.
- ஒவ்வொரு முத்திரையின் விநியோகத்தையும் அதன் கருத்திற்கேற்ப அபிநயித்துக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பத்திரம் 3.1.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- ☞ உத்ஸங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம், கத்தரீஸ்வஸ்திகம் ஆகிய ஹஸ்த விநியோகங்களில் ஒன்றை பிழையின்றி பாவததுடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்துக் காட்டுக.
- ☞ ஆசிரியர், எழுமாறாக சில விநியோகங்களை வினவ மாணவர் அவற்றின் பொருளைக் கூறி அபிநயித்துக் காட்டுக.

  உதாரணம்:-

  | | | |
  |---|---|---|
  | உத்ஸங்கம் | - | லஜ்ஜாயாம், ஆலிங்கனேச |
  | சிவலிங்கம் | - | சிவலிங்கம் |
  | கடகாவர்த்தனம் | - | பட்டாபீஷேகே, பூஜாயாம் |
  | கத்தரீஸ்வஸ்திகம் | - | சாகாஸ, விருக்ஷேஸ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 3.0 :- பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.1 :- பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகளிற் சிலவற்றை ஆடிக்காட்டுவார்.

செயற்பாடு 3.1.7 :- ''தாஹத ஜம்தரிதா'' என்னும் அடவினைத் திரிகாலங்களிலும் ஆடுவோம்.

நேரம் :- 2 மணித்தியாலம் 40 நிமிடங்கள்.
(04 பாடவேளைகள்)

தர உள்ளீடுகள் :-
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- ''தாகத ஜம்தரிதா'' அடவின் நிலைகளைக் குறிக்கும் படங்கள்.
- முத்திரைகளின் படங்கள்.
- செயற்பத்திரம் 3.1.2.1

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 3.3.1**

- குறித்த அடவின் நிலைகளைக் குறிக்கும் படங்கள். முத்திரைகளின் படங்களைக் காட்சிப்படுத்தி ஆடற் பயிற்சியினை மேற்கொள்ளுங்கள்.
- அன்றாட நடைமுறையில் நாம் எமது கைகளைப் பிரயோகித்து செய்யும் செய்கைகளில் தெரியும் ஹஸ்தங்களை மாணவர்கள் இனங்காண வழிப்படுத்துக.
- பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாகக் கற்பித்தலை மேற்கொள்ளவும்.

☞ இந்த அடவு ரூபகதாளத்தில் அமைந்துள்ளது.
☞ ''தாஹத ஜம்தரிதா ஜம்தரி ஜகதரி தெய்'' என்று நிறைவு செய்யப்படும் ஜதிச் சொற்கட்டைத் தாளத்துடன் கொலுப்பித்தல்.
☞ இது ''தெய் தெய் திதி தெய் தாம்'' என்னும் அடவுச் சொற்கட்டில் அமைந்துள்ளது.
☞ இவ்வடவின் பாதச் செய்கையை ஆசிரியர் செய்து காட்டுதல்.
☞ மாணவர் பின்பற்றி ஆடுதல்
☞ திரிகாலங்களிலும் பாதச் செய்கையை செய்து காட்டுதல்.
☞ பதாகம், கடகாமுகம், அலபத்மம் ஆகிய முத்திரைகளைப் பயன்படுத்திக் கைச் செய்கையை மாத்திரம் ஆசிரியர் செய்து காட்டுதல்.
☞ மாணவர் பின்பற்றி கைச் செய்கையைச் செய்தல்.
☞ பகுதி பகுதியாக கை, கால், கண் ஆகியவற்றின் செய்முறைகளை செய்து காட்டுதல்.
☞ மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி செய்தல்
☞ படிப்படியாகத் திரிகாலங்களிலும் ஆடி முழுமையாக்குதல்.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- குழுநிலையில் ஸ்லோகங்களை உச்சரித்து அபிநயித்துக் காட்டும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- சகல குழுக்களும் ஸ்லோகத்தினைப் பிழையின்றி உச்சரித்து அபிநயித்துக் காட்டுகின்றார்களா? என்பதை உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 3.3.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களில் தொகுக்கப்பட்டவற்றினை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ அடவுப் பயிற்சியின் போது கவனிக்க வேண்டியவை
- அரைமண்டி
- குதிக்கும் நிலை
- கண்களின் செய்கை
- முத்திரை மாற்றம்

(30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ''தாகத ஜம்தரிதா'' அடவினைத் திரிகாலங்களிலும் முழுமையாக ஆடுவார்.
- அடவின் சொற்கட்டினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- பயன்படுத்தப்படும் முத்திரைகளைக் கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பத்திரம் 3.3.7.2**

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- ''தாஹத ஜம்தரிதா'' அடவினைத் திரிகாலங்களிலும் ஆடுக.
- அடவினைத் தாளத்துடன் கொலுப்பிக்குக.
- குறித்த அடவில் பாவிக்கப்படும் முத்திரைகள் எவை?

**பின்னிணைப்பு**

## தாஹதஜம்தரிதா

| 0 | \|4 |
|---|---|
| **முதலாம் காலம்**<br>தா; ஹ, த,<br>ஜெம்,; த, ரி, | <br>ஜெம்; த, ரி, தா;;; //<br>ஜெம், த, ரி, தா;;;; // |
| **இரண்டாம் காலம்**<br>தாஹத ஜெம், தரி | <br>தா; ஜெம்; த, ரி, ஜெகதரி தெய்,; // |
| **மூன்றாம் காலம்**<br>தாஹத ஜெம்தரி தா<br>ஜெம்தரி | <br><br>ஜெகதரி தெய், தாஹத ஜெம் தரிதா<br>ஜெம்தரி ஜெகதரி தெய் // |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 3.0 :- பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.4 :- தேவ, ஜாதி, நவக்கிரக, தசாவதார, பாந்தவ்ய ஹஸ்தங்களை அவற்றிற்குரிய முத்திரைகளுடனும், பாதநிலைகளுடனும் செய்து காட்டுவார்.

செயற்பாடு 3.4 :- அடிப்படையான நான்கு பாத பேதங்களையும் செய்து காட்டுவோம்.

நேரம் :- 40 நிமிடங்கள்
(01 பாடவேளை)

தர உள்ளீடுகள் :-
- பாத பேதங்களின் நிலைகளை விளக்கும் வரைபடங்கள்.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.2.1

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.4.1

- பாதபேதங்களின் நிலைகளை விளக்கும் வரைபடங்களின் அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்திய பாத பேதங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- ☞ பாதபேதங்களின் நிலைகளடங்கிய அட்டையைக் காட்சிப்படுத்தி விளக்குதல்.
- ☞ ''மண்டல பேதம்'' என்பது அரைமண்டியில் இருந்தவாறு கைகளை நாட்டியாரம்பத்தில் வைத்தல்.
- ☞ ''உத்பிளவனம்'' என்பது அரைமண்டியில் இருந்தவாறு இடது கை கடகாமுக முத்திரையைத் தலைக்கு மேல் வைத்து, வலது கையில் கடகாமுகம் பிடித்து மார்புக்கு நேராக வைத்து, வலது காலை மடித்து முன்னால் பாயும் போது வலதுகை அலபத்மமாக மார்புக்கு முன்னால் நீட்டுதல்.
- ☞ ''பிரமரீ'' என்பது அரைமண்டியில் இருந்தவாறு இடது காலை பின்னால் நாட்டி, இடது கையில் கடகாமுகம் தலைக்கு மேல் பிடித்து, வலது கையில் கடாகமுகம் மார்பின் முன் பிடித்து அலபத்மமாகக் கையை நீட்டிக் காலுடன் சுற்றி கால்களைச் சேர்த்து நிற்றல்.
- ☞ ''பாதசாரிகா'' என்பது கால்களைச் சேர்த்து நின்றவாறு கைகளை இடுப்பில் வைத்து நான்கு தடவைகள் கால்களை மடித்து முன்னோக்கி நடத்தல்.
- ☞ ஆசிரியர் மேற்படி பாத பேதங்களைத் தனித்தனியாகச் செய்து காட்டும் போது மாணவர்கள் அவற்றை அவதானித்து செய்து காட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ மாணவரும் ஆசிரியரும் சேர்ந்து முழுமையாகச் செய்தல்.
- ☞ மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஆடுவதற்கு இடமளித்தல்.

(20 நிமிடங்கள்)

**படி 3.4.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா? என அவதானியுங்கள்.
- மாணவர் பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

*(10 நிமிடங்கள்)*

**படி 3.4.3**

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒருகுழு ஆடிக்காட்டும் போது மறுகுழு அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்துங்கள்.

- ☞ பாத பேதங்களின் அசைவுகள், உருப்படிகளிலும், *கிராமிய* நடனங்களில் இடம் பெறுதல்.
- ☞ பாதபேத நிலைகளை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து ஆடி, நிறைவு செய்தல்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- நான்கு பாதபேதங்களையும் கூறுவார்.
- நான்கு பாதபேத நிலைகளையும் செய்து காடடுவார்.

**செயற்பத்திரம் 3.4.2.1**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- பாத பேதங்கள் எத்தனை வகைப்படும் எனக் குறிப்பிடுக.
- பாத பேதங்களின் வகைகளைக் கூறுக.
- பாத பேதங்களின் நிலைகளைச் செய்து காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.5 | :- | நடன உருப்படிகளை ரஸ பாவத்துடன் ஆடிக் காட்டுவார். |
| செயற்பாடு **3.5.1** | :- | இதிகாச, புராண, சமூகக் கதைச் சம்பங்களினூடாக நவரஸங்களை விளங்கிக் கொள்வோம். |
| நேரம் | :- | 3 மணித்தியாலம் 20 நிமிடம் (05 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • இராமாயணம், மகாபாரதம், சமூக சம்பந்தமான நாடகங்கள் அடங்கிய ஒளி நாடா, நவரஸம எழுதப்பட்ட / வரையப்பட்ட அட்டைகள், வீடியோ பதிகருவி.<br>• செயற்பத்திரம் 3.5.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.5.1

- அட்டைப் படங்களையும் நவரஸம் வரையப்பட்ட அட்டைகளையும் காட்சிப்படுத்தல்.
- நவரஸம் தொடர்பான விளக்கத்தை மாணவருக்கு வழங்குதல்.
- இராமாயணம் / மகாபாரத சமூக சம்பந்தமான கதைகளை ஒளிபரப்பச் செய்தல்.
- கற்பித்தலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கதைச் சம்பவத்தினூடாக ஒவ்வொரு நவரஸமும் இடம் பெறும் சந்தர்ப்பத்தை விளக்குதல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

☞ ஒன்பது வகையான ரஸங்கள்.
☞ அன்றாட வாழ்வில் ரஸங்கள் உருவாகும் சந்தர்ப்பங்கள்.
☞ ரஸங்களை அபிநயிக்கும் போது இடம் பெறும் ஹஸ்தங்கள்.

(80 நிமிடங்கள்)

### படி 3.5.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- நவரஸங்கள் பற்றிய முழுமையான கலந்துரையாடலில் குழுக்களை ஈடுபடுத்துங்கள்.
- தமக்குக் கொடுக்கப்பட்ட செயற்பாட்டைக் குழுரீதியாகக் கலந்துரையாடச் செய்யுங்கள்.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 3.5.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ நவரஸம் என்பதன் விளக்கம்.
> ☞ நவரஸங்களின் பொருள்
> ☞ 9 வகையான நவரஸங்கள்.
> - ⊖ சிருங்காரம்
> - ⊖ பீபத்ஸம்
> - ⊖ பயானகம்
> - ⊖ ஆச்சர்யம்
> - ⊖ ஹாஸ்யம்
> - ⊖ வீரம்
> - ⊖ சௌத்திரம்
> - ⊖ சாந்தம்
> - ⊖ கருணை
>
> (80 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சிருங்கார ரஸத்தினை அபிநயித்துக் காட்டுவார்.
- இராமாயணக் கதையினூடாக அற்புத ரஸத்தினை அபிநயத்துக் காட்டுவார்.
- ஐம்புலன்களையும் அடக்கி தியானத்தில் இருக்கும் நிலை எவ்வகையான ரஸம் என அபிநயித்துக் காட்டுவார்.

## செயற்பத்திரம் 3.5.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- ரஸங்கள் எத்தனை வகைப்படும்?
- நீங்கள் விரும்பிய 5 ரஸங்களை அபிநயித்துக் காட்டுக.
- அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி நவரஸங்களை அபிநயித்துக்காட்டுக.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.6 | :- | வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக்காட்டுவார். |
| செயற்பாடு **3.6.1** | :- | வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களில் ஒன்றான செம்பு நடனத்தை ஆடிக்காட்டுவோம். |
| நேரம் | :- | 1 மணித்தியாலங்கள் 20 நிமிடங்கள். (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • (தெரிவு செய்யப்பட்ட) செம்பு நடனத்திற்குப் பொருத்தமான கிராமிய நடனப் பாடல் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, செம்பு நடன நிகழ்ச்சி அடங்கிய ஒளிப்பதிவு நாடா, தட்டுக்கழி, தட்டுப்பலகை.<br>• செயற்பத்திரம் 3.6.2 - பின்னிணைப்பு |

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.6.1**

- எடுத்துக் கொண்ட செம்பு நடனப்பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ஒலிப்பதிவுக் கருவியை ஒலிக்கச் செய்து செம்பு நடனப் பாடலைச் செவிமடுக்கச் செய்தல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடி நடனத்தை ஆடுதல்.

- ☞ செம்பு நடனத்தின் சிறப்பம்சங்கள்.
- ☞ ஆசிரியரால் தெரிவு செய்யப்பட்ட செம்பு நடனத்திற்குரிய பாடலைக் காட்சிப்படுத்தி அதன் இராக, தாளத்தைக் கூறுதல்.
- ☞ இப்பாடலை ஆசிரியர் பகுதி, பகுதியாகப் பாட, மாணவரும் இணைந்து பாடுதல்.
- ☞ குறித்த பாடலுக்கேற்றவாறு செம்புகளைக் கையில் வைத்து பொருத்தமான சுவட்டுடன் உட்பிரவேசித்தல்.
- ☞ கற்பனைக் கேற்றவாறு ஆடச் செய்தல் (V X U போன்ற வடிவங்கள்)
- ☞ பாடலுக்கேற்றவாறு ஆசிரியரும் , மாணவரும் சேர்ந்து முழுமையாக்குதல்.
- ☞ முழுமையாக்கிய செம்பு நடனத்தை மாணவர்களை குழுக்களாகப் பிரித்து ஆடுவதற்கு இடமளித்தல்.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 3.6.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 3.6.3**

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ செம்பினை முற்றத்தில் நீர்தெளிப்பதற்கு, குளிப்பதற்கு, நீரருந்துவதற்கு பயன்படுத்தலாம் என்பது செம்பு நடனத்தின் மூலம் காட்டப்படும்.
☞ செம்பு நடனப்பாடலை ஆசிரியரும், மாணவரும் இராகத்துடன் பாடுதல்.
☞ செம்பு நடனத்தை முழுமையாக்குதல்.

(20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- செம்பு நடனத்தின் சிறப்பம்சத்தைக் குறிப்பிடுவார்.
- செம்பு நடனப்பாடலின் இராகத்தைக் கூறுவார்.
- செம்பு நடனப்பாடலை முழுமையாகப் பாடுவார்.
- செம்பு நடனத்தினைப் பல்வேறு கோலங்களில் ஆடுவார்.

## செயற்பத்திரம் 3.6.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- செம்பு நடனத்தின் இராகம், தாளம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.
- இச்செம்பு நடனப் பாடலை முழுமையாகப் பாடுக.
- குறித்த செம்பு நடனப்பாடலுக்கேற்றவாறு செம்பு நடனத்தை ஆடுக.
- செம்பு நடனத்தில் பாவனை செய்து காட்டப்படும் விடயங்களைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | :- | பரதநாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.6 | :- | வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக்காட்டுவார். |
| செயற்பாடு **3.6.2** | :- | கிராமிய நடனங்களில் ஒன்றான சுளகு நடனத்தை ஆடுவோம். |
| நேரம் | :- | 1 மணித்தியாலங்கள் 20 நிமிடங்கள்.<br>(04 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • (தெரிவு செய்யப்பட்ட) சுளகு நடனத்திற்குப் பொருத்தமான கிராமிய நடனப் பாடல் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, நடன நிகழ்ச்சி அடங்கிய ஒளிப்பதிவு நாடா, சுளகுகள், தட்டுக்கழி, தட்டுப்பலகை.<br>• செயற்பத்திரம் 3.6.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 3.6.1

- எடுத்துக் கொண்ட சுளகு நடனப்பாடல் எழுதப்பட்ட அட்டையை காட்சிப்படுத்தல்.
- ஒலிப்பதிவுக் கருவியை ஒலிக்கச் செய்து பாடலைச் செவிமடுக்கச் செய்தல்.
- சுளகு நடனத்தை ஒளிப்பதிவு செய்துப் பார்வையிடத் தூண்டுதல்.
- செவிமடுத்த பாடலை, பார்வையிட்ட நடனத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

☞ நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
☞ சுளகின் பயன்பாடுகள் சிலவற்றை ஆசிரியர் செய்து காட்டுதல். (வயலில் நெல் தூற்றுதல், அரிசி புடைத்தல், அரிசி கொளித்தல், பொருட்களை வெயிலில் காய வைத்தல். )
☞ மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றி இவற்றைப் பாவனை செய்தல்.
☞ வயலில் நெற்குவியலில் அள்ளுதல், மற்றவரின் சுளகிற் கொட்டுதல், வட்டம், V, X, \ போன்ற பல்வேறு கோலங்களில் ஆடுதல்.
☞ ஆடியவாறு நிறைவு செய்தல்.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படி 3.6.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

### படி 3.6..3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ சுளகினை நளினமாக அசைத்துப் பாவனை செய்து பல்வேறு கோலங்களில் ஆடி சுளகு நடனத்தை ஆட முடியும்.
>
> (20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சுளகு நடனத்தின் கிராமியப் பாடலைத் தாளத்துடன் பாடுவார்.
- பல்வேறு கோலங்களில் சுளகு நடனத்தை முழுமையாக ஆடுவார்.
- பாவனை செய்யப்படும் விடயங்கள் எவை?

## செயற்பத்திரம் 3.6.2

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- சுளகு நடனத்தின் கிராமியப் பாடலைத் தாளத்துடன் பாடிக் காட்டுக.
- சுளகு நடனத்தைப் பல்வேறு கோலங்களில் முழுமையாக ஆடிக் காட்டுக.
- சுளகு நடனத்திற் பாவனை செய்து காட்டப்படும் விடயங்கள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | :- | பரதநாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 4.6 | :- | தாண்டவம், லாஸ்யம், அடவு, தீர்மானம், கோர்வை, சொற்கட்டு, எடுப்பு, பாத்திரம், அபாத்திரம், குரு, சிஷ்ய, சபாநாயகன், சபை, பஞ்சபாணங்கள், நாட்டிய தர்மி, லோகதர்மி ஆகியவற்றின் எண்ணக்கருக்களை விளக்குவர். |
| செயற்பாடு **4.6.1** | :- | அடவு, கோர்வை, தீர்மானம், சொற்கட்டு என்பனவற்றின் அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் அறிவோம். |
| நேரம் | :- | 80 நிமிடங்கள். (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடுகள் | :- | • இவ் எண்ணக்கருக்கள் எழுதப்பட்ட அட்டைகள்.<br>• செயற்பத்திரம் 4.6.1.2 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 4.6.1

- இவ் அட்டைகளைக் காட்சிப்படுத்துங்கள்.
- காட்சிப் படுத்திய அட்டைகளில் உள்ளவற்றை மாணவர்கள் வாசித்தல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தி கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

☞ அடவு, கோர்வை, தீர்மானம், சொற்கட்டு என்றால்? என்ன என்பது

### படி 4.6.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

### படி 4.6.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ ஒரே தாளச்சீர் பிரமாணத்திற்கேற்ப வருவது.
> ☞ இதில் இடம் பெறும் கண், தலை, கழுத்து அங்கங்கள் ஸ்நானக, சாரி நிலைகள்.
> ☞ அடவில் இடம் பெறும் விளம்பித, மத்திம, துரித காலங்களும் அடவின் வன்மை, மெய்யடவு வகைகளும்.
> ☞ கோர்வை என்பது பல அடவுகளின் சேர்க்கை.
> ☞ இதன் முடிவில் இடம் பெறுவது தீர்மானம்.
> ☞ தீர்மானம் மிருதங்க சொற்கட்டுகளுடன் கூடியது.
> ☞ சொற்கட்டு கருத்தற்ற தூய்மையானவை.
>
> (20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- அடவு என்பதற்குரிய விளக்கம் கூறுவார்.
- இதில் இடம் பெறும் அங்கங்கள், நிலைகள் கூறுவார்.
- இதில் இடம் பெறும் காலங்களும் அடவின் சில வகைகளும் கூறுவார்.
- கோர்வை பற்றிய விளக்கம் கூறுவார்.
- இதன் முடிவில் இடம் பெறும் தீர்மானம் பற்றிக் கூறுவார்.
- தீர்மானம், சொற்கட்டு பற்றிய விளக்கம் கூறுவார்.

## செயற்பத்திரம் 4.6.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.)**

- அடவு என்பதன் விளக்கத்தை சுருக்கமாகக் கூறுக.
- இதில் இடம் பெறும் காலங்களும், அடவின் சில வகைகளும் கூறுக.
- கோர்வை என்ற பதத்தை விளக்குக.
- தீர்மானம், சொற்கட்டு என்பனவற்றை சுருக்கமாக விளக்குக.
- நாட்டியக் கிரமத்தின் பொருளினைக் கூறுக.

## இணைப்பு

**அடவு:**

தலை, கால், கை, சரீர அசைவுகள் ஒருங்கே ஒரே நேரத்தில் இணைந்து தாளச் சீர்ப் பிரமாணத்திற்கேற்ப வருவது அடவு எனப்படும்.

ஒவ்வொரு அடவிலும் ஸ்தானக பேதம், சாரி பேதம், நிருத்த ஹஸ்தம், கண் அசைவு, தலை அசைவு, கழுத்து அசைவு யாவும் அடங்கி இருக்கும். இந்த அடவு ஒவ்வொன்றையும் விளம்பாத காலம், மத்திய காலம், துரித காலம் ஆகிய காலங்களிலும் செய்யலாம். அடவுகளில் வன்மையான அடவு, மென்மையான அடவு, மெய்யடவு போன்ற அடவு வகைகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோர்வை:**

பல அடவுகளின் சேர்க்கை கோர்வை எனப்படும். இதனை பூமாலைக்கு ஒப்பிடுகிறார்கள். இது லயத்துடன் அமைந்திருக்க வேண்டும். கோர்வையின் அடவுகள் இருபக்கமும் சமச்சீராக இருக்க வேண்டும். இதனைச் செய்யும் போது வன்மையாகவும், கைகளை அழுத்தமாகவும் செய்ய வேண்டும். வன்மையான மென்மையான அடவுகள் மாறி மாறி இடம் பெற வேண்டும். கோர்வைகள் பாட்டின் வன்மை மென்மைக்கு ஏற்ப அமைய வேண்டும். கோர்வை அமைக்கும் போது ஆரம்பத்திலிருந்து படிப்படியாக மூன்றாம் காலத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். 'கிடதக்தரிகிட தொம்' அல்லது ததிங்கிணதொம் உடன் முடிவு பெறும்.

**தீர்மானம்:**

மிருதங்க சொற்கட்டுகளுடன் கூடிய ஜதிகளைக் கொண்டு மகுட அடவுகளுடன் முடிவுறும் கோர்வைகள், தீர்மானம் எனப்படும். குறுகிய தனித்துவமான அழகான அடவுகள் சேர்ந்து சிக்கலான லயப்பிடிப்புடன் செய்ய வேண்டியதே தீர்மானம். நீண்டதும் குறுகியதுமான சொற்கட்டுகளை லயத்துடன் கூடி ஒழுங்கு முறையாக மூன்று தரம் செய்ய வேண்டும். மூன்று சோடிகளாகவும் செய்யலாம்.

**சொற்கட்டு:** (ஜதி)

மிருதங்கத்தில் வாசிக்கப்படும் சொற்கட்டு அமைப்புகள் ஜதிகள் எனப்படும். கருத்தற்ற சொற்களான கதி, தொன், நன் முதலியவற்றால் ஆக்கப்பட்ட சொற்கட்டுக் கோர்வைகள் பெரும்பாலும் தாள வாத்தியங்களின் அடிப்படைச் சொற்கள் இவற்றையே சொற்கட்டு என்று அழைப்பர். இவை காற்தட்டுக்களால் ஏற்படும் ஒலிக்கேற்ப சொற்களைக் கொண்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | :- | பரதநாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 4.7 | :- | பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறையினையும், அணிசேர் இசைக்கருவிகளையும் விளக்கி வாக்கேயக்காரர்களின் வரலாற்றினையும் கலைத்தொண்டினையும் அறிந்து மதிப்பிடுவார். |
| செயற்பாடு **4.7.1** | :- | பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் அலாரிப்பின் இலட்சணத்தைக் கற்றுக் கொள்வோம். |
| நேரம் | :- | 40 நிமிடங்கள். (01 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • பரத நாட்டிய சம்பிரதாய உருப்படியில் அலாரிப்பு அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.<br>• செயற்பத்திரம் 4.7.1 - பின்னிணைப்புப் பத்திரம். |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 4.7.1

- பரத நாட்டிய சம்பிரதாய உருப்படியில் அலாரிப்பினை ஒலி, ஒளி நாடாக்கள் மூலம் பார்வையிடச் செய்தல்.
- காட்சிப்படுத்திய அலாரிப்பு என்னும் உருப்படி நிருத்த உருப்படியா? நிருத்திய உருப்படியா? என வகைகப்படுத்தல்.
- அலாரிப்பு செய்வதன் நோக்கம் பற்றியும் இதில், இடம் பெறும் பேதங்களைப் பற்றியும் கலந்துரையாடலை மேற்கொள்வதன் மூலமாகப் பல விடயங்களை வலியுறுத்தல்.

☞ பரத நாட்டிய சம்பிரதாய உருப்படியில் அலாரிப்பு முதலாவதாக இடம் பெறும்
☞ இது ஒரு நிருத்த உருப்படி
☞ இவ் உருப்படியின் சிறப்பம்சங்கள்.
☞ இவ்வுருப்படியின் தாளம்
☞ இவ்வுருப்படியின் இராகம்

(20 நிமிடங்கள்)

### படி 4.7.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 4.7.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ அலாரிப்பு பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளுள் ஒன்று
> ☞ அலாரிப்பு நிருத்த உருப்படி
> ☞ இது சொற்கட்டுக்களால் ஆன உருப்படி
> ☞ இது தாளக்கட்டுப்பாட்டுக்குள் அமைந்த உருப்படியாகும்.
>
> (10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பரத நாட்டிய உருப்படியில் முதலாவதாக இடம் பெறும் உருப்படியைக் குறிப்பிடுவார்.
- இவ்வுருப்படி நிருத்த வகையைச் சார்ந்தது என்பதைக் குறிப்பிடுவார்.
- இவ்வுருப்படியின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.
- இவ்வுருப்படியின் தாளத்தைக் கூறுவார்.
- இதன் முடிவில் இடம் பெறும் தீர்மானம் பற்றிக் கூறுவார்.
- அலாரிப்பின் இலட்சணத்தைக் கூறுவார்.

## செயற்பத்திரம் 4.7.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.)**

- அலாரிப்பு என்றால் என்ன?
- பரத நாட்டிய நிகழ்வில் அலாரிப்பு எத்தனையாவது உருப்படியாக இடம் பெறுகிறது?
- இவ்வுருப்படி நிருத்த வகையைச் சார்ந்ததா? நிருத்திய வகையைச் சார்ந்ததா?
- அலாரிப்பின் தாளம் யாது?
- சபை வணக்கமாக அமைவதற்கான காரணம் யாது?

## பின்னிணைப்பு

**அலாரிப்பு:**

''அலர்'' என்ற சொல் தமிழில் மலர்வது என்று பொருள்படும். தன் உடலை மலராக நினைத்து அதனைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது போல் அமைக்கப்பட்டுள்ளது. உருப்படிகளின் வரிசையால் இது ஆரம்ப நிகழ்ச்சியாக விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு, தெய்வம், சபையினருக்கு அஞ்சலி செலுத்தும் உருப்படியாகும். அபிநயங்கள் இன்றி ''தாம் திதா தெய் ததெய்'' என்னும் சொற்கட்டுக்கு விளம்ப, மத்திம, துரிதகாலங்களில் இடம் பெறுகின்றது. இவ்வுருப்படி நாட்டை இராகத்திலும் திஸ்ர ஏக தாளத்திலும் அமைந்துள்ளது. நாட்டியத்திற்குரிய அங்க, பிரத்தியாங்க, உபாங்கங்களால் தாளக் கட்டுக் கோப்புக்குள் அமைந்த உருப்படியாகும். அலாரிப்பு, திஸ்ர, சதுஸ்ர, கண்ட, மிஸ்ர, சங்கீர்ண நடைகளிலும் இடம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 4.0 :- பரதநாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.7 :- பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறையினையும் அணிச்சேர் இசைக் கருவிகளையும் விளக்கி வாக்கேயகாரர்களின் வரலாற்றினையும் அவர்தம் கலைத் தொண்டினையும் அறிந்து மதிப்பிடுவார்.

செயற்பாடு 4.7.2 :- தஞ்சைச் சகோதரர்களில் ஒருவரான சு. பொன்னையா அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் கலைத் தொண்டினையும் அறிவோம்.

நேரம் :- 40 நிமிடங்கள். (01 பாடவேளை)

தர உள்ளீடுகள் :-
- தஞ்சை சு. பொன்னையா அவர்களின் படம்
- செயற்பத்திரம் 4.7.2.2

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 4.7.1

- குறித்தற் செயலொழுங்கு
- குறித்த பொன்னையா, அவர்களின் படத்தினைக் காட்சிப்படுத்தல்.
- நாட்டியக் கலைக்காகவே வாழ்ந்து மறைந்த பெரியாரைப் பற்றிய பின்வரும் விடயங்கள் அடங்கலாகக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

☞ வாழ்ந்த காலம்
☞ பெற்றோர்
☞ பொன்னையா அவர்களின் சகோதரர்கள்.
☞ அவர்களின் குரு
☞ ஆதரவளித்த மன்னர்.
☞ நாட்டியத்த தொண்டு
☞ கிடைத்த பட்டம்
☞ இயற்றிய உருப்படிகள்

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 4.7.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயன் முறைப் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 4.7.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பேறுகளை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

☞ 19ம் நூற்றாண்டில் தஞ்சை சகோதரர்கள் வாழ்ந்தமை.
☞ தந்தையார் பெயர் - சுப்பராயர்.
☞ சின்னையா, சிவானந்தம், வடிவேலு, ஆகியோர் இவரின் சகோதரர்களாவார்.
☞ அவர்களின் குரு மும் மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதர்.
☞ தஞ்சை மன்னரான துள்ஜா மகாராஜா சங்கீதத்தில் பாண்டித்தியம் பெற உதவிகள் புரிந்தார்.
☞ இவரின் தொண்டுகள் நாட்டிய அடவு வகைகளை வகுத்தமை.
☞ கச்சேரி ரூபமாக நாட்டியத்தை அமைத்தமை.
☞ ''சங்கீத சாகித்திய பரத சிரேட்டர்'' இவர்களுக்கு கிடைத்த பட்டமாகும்.
☞ பல பதவர்ணங்கள், பதங்கள், தில்லானாக்கள், சப்தம், ஜதிஸ்வரம் போன்றவற்றை இயற்றினார்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- தஞ்சை சு. பொன்னையா அவர்கள் வாழ்ந்த காலத்தைக் கூறுவார்.
- அவரின் தந்தையார் பெயரைக் கூறுவார்.
- அவரின் சகோதரர்கள் பெயரைக் கூறுவார்.
- தஞ்சை சகோதரர்களின் குரு யாரென்பதைக் கூறுவார்.
- சு. பொன்னையா அவர்களுக்கு ஆதரவளித்த மன்னர் பெயரைக் கூறுவார்.
- அவர் நாட்டியத்திற்கு ஆற்றிய கலைத் தொண்டுகளைக் கூறுவார்.
- தஞ்சைச் சகோதரர்களிற்குக் கிடைத்த பட்டத்தின் பெயரைக் கூறுவார்.
- அவர் இயற்றிய உருப்படிகளின் பெயர்களைக் கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பத்திரம் 4.7.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.)**

- தஞ்சை சு. பொன்னையா அவர்கள் வாழ்ந்த காலம் எது?
- அவரின் தந்தையார் பெயர் என்ன?
- அவரின் சகோதரர்களின் பெயர் என்ன?
- தஞ்சை சகோதரர்களின் குருவின் பெயர் என்ன?
- சு. பொன்னையா அவர்களுக்கு ஆதரவளித்த மன்னன் யார்?
- அவர் நாட்டியத்திற்கு ஆற்றிய கலைத் தொண்டுகள் யாவை?
- தஞ்சைச் சகோதரர்களிற்குக் கிடைத்த பட்டம் யாது?
- அவர் இயற்றிய உருப்படிகள் சிலவற்றின் பெயர்களைத் தருக.

## பின்னிணைப்பு

### தஞ்சை சு. பொன்னையா அவர்கள்

காலத்தின் அழிவுக்கரங்களிலிருந்து அதிர்ஷ்டவசமாக நம் கலைச் செல்வமாகிய பரத நாட்டியக் கலை தப்பி வந்துள்ளது. பற்றும், பக்தியும், பரந்த திறமையும் படைத்த ஒரு சில நட்டுவாங்கப் பெரியோர்களின் புண்ணியத்தால் அக்கலை நலிவடையாது வளர்ந்துள்ளது.

அக்காலத்தில் வெறுங் கூத்து வடிவில் நிலவிய நாட்டியக்கலையை இன்றுள்ள பாணியில் உருவாக்கிய பெருமை பத்தொன்பதாம் நூற்றாண்டில் கலைக்காக வாழந்து மறைந்த மேதைகளான தஞ்சை பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய சகோதரர்களையே சாரும். இவர்களின் தந்தையார் பெயர் சுப்பராயன். சுப்பராய நட்டுவனாரும் அவரது நான்கு குமாரர்களும் செங்கணார் கோயிலில் பூமாலை தொடுத்தும், தேவாரம் பாடியும் சிவத்தொண்டு புரிந்து வந்தார்கள். ஒருநாள் தஞ்சை மன்னர் துளஜா மகாராஜா செங்கணார் கோயில் தரிசனத்திற்கு வந்தபோது சுப்பராய நட்டுவனார், பொன்னையா முதலியோரின் இசைப்பெருக்கில் மனம் பறி கொடுத்தவராய் இவர்கள் ஐவரையும் தஞ்சைக்கு அழைத்து வந்து பிருகதீஸ்வரர் கோவிலில் தேவாரப் பணியும், நட்டுவாங்கப் பணியும் செய்யுமாறு பணித்து ஆதரவு நல்கினார். இவர்கள் சங்கீதத்தில் மிகுந்த பாண்டித்தியம் பெற தஞ்சை மன்னர் வேண்டிய உதவிகளைச் செய்தார்.

சங்கீதமும் மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதரிடம் ஏழு ஆண்டுகள் குருகுல வாசம் செய்து சங்கீதத்திலும், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று அரங்கேற்றம் செய்தனர். பொன்னையா சகோதரர்கள் அரங்கேற்ற மண்டபத்தில் தம் குருநாதருக்கு நவரத்தின மாலா என்ற ஒன்பது கீர்த்தனைகளை ஒரு ஸ்துதியாகச் செய்து அதனைப் பாடிக் காணிக்கையாகச் செலுத்தினர்.

இவர்கள் பிருகதீஸ்வரர் ஆலயத்தில் இசைத்தொண்டும், நாட்டியப் பணியும் புரிந்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தியுடன் இவர்கள் வாழ்ந்து வருகையில் பொன்னையா அவர்களுக்கு நாட்டியத்தைக் கச்சேரி பாணியில் எந்த இடத்திலும் எப்போதும் நடத்தக் கூடிய முறையில் அமைக்க வேண்டும் என்ற கருத்துத் தோன்றியது. அதன் பிரகாரம் மிகவும் முயற்சி செய்து அதற்கான இலக்கணங்களையும் ஆரம்ப பாடங்களையும் தயாரித்தார். எப்படிச் சங்கீதத்திற்கு ஆரம்ப பாடமாக சரளி, ஜண்டை வரிசை, அலங்காரம் என்பன அமைந்தனவோ அதைப்போலவே நாட்டியத்திற்கு ஆரம்ப பாடமாக அடவுகளைப் பத்தாக வகுத்தார். அவை தட்டடவு, நாட்டடவு, குதித்துமெட்டடவு, ஜாதி அடவு, தட்டு மெட்டடவு, மெய்யடவு, அறுதி அடவு, மெட்டடவு, நடைஅடவு, முடிவடவு என்பனவாம்.

இந்தப்பத்து அடவுகளையும் ஒவ்வொன்றிலும் பன்னிரெண்டு பேதம் செய்து, மொத்தம் 120அடவுகளாக வகுத்தார். பின்பு அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், பதவர்ணம், சுரஜதி, பதம், இராகமாலிகை, சுலோகம், தில்லானா என அட்டவணைப்படுத்தினார். அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம் என்பனவற்றைப் பல தாளங்களிலும், இராகங்களிலும் இயற்றி, அனேக பதவர்ணங்களையும், சுரஜதிகளையும் நாயக, நாயகி பாவத்தோடு தமிழிலும், தெலுங்கிலும் அமைத்துப்பாடினார். அதற்கு வேண்டிய தீர்மானங்களையும் இயற்றியதோடு தில்லானா முதலிய பல உருப்படிகளையும் செய்து தாம் வகுத்த பாணியை முதலில் இருபெண்களுக்குக் கற்பித்து, தம் குருநாதர் முன்னிலையில் அரச சபையில் அரங்கேற்றினார். அன்றைய கச்சேரியைப் பார்த்து வியந்த தீட்சிதர், சங்கீதத்திற்குப் புரந்தரதாசர் வழிகாட்டி, நாட்டியத்திற்கு என் மாணவர்கள் வழிகாட்டி எனக் கூறியதோடு அரசரைக் கொண்டு ''சங்கீத சாகித்திய பரதசிரேட்டர்'' என்ற பட்டத்தை அளிக்கச் செய்தார்.

பொன்னையா சகோதரர்கள் வகுத்த பாணியிலேயே நாட்டியக் கச்சேரிகள் எல்லா ஆலயங்களிலும் நடைபெறுவதற்கான வழிவகைகளையும் செய்தார்.

பொன்னையா அவர்கள் சிறந்த சிவ பக்தர். ஒரு சமயம் தன் தம்பி நோய்வாய்ப்பட்டிருந்த போது பிருகன் நாயகி பெயரில் பிருகதம்பா என்ற பாடலைப்பாட தம்பியின் நோய் குணமானதாக ஒரு கதை உண்டு. கோயிற் கைங்கரியத்தில் தமக்குக் கிடைத்த ஊதியத்தை ''சிவ சொத்து ஆகாது'' என்று தண்ணீர்ப்பந்தல் கைங்கரியத்திற்கும், திருத்தேரன்று அன்னதானம் செய்யவும் செலவிட்டு வந்தார். இவர் பல மாணவர்களுக்கு தாமறிந்த வித்தைகளைக் கற்றுக்கொடுத்து ஆலயங்களில் கைங்கரியம் செய்ய உதவினார். ஆனந்தபைரவி இராகத்தில் அமைந்த ''சகியே நீ இந்த வேளையில் '', சங்கராபரண இராகத்தில் அமைந்த ''மோகமான'' ஆகிய பதவர்ணங்களும், மந்தாரி, காபி, கமாஸ், கானடா, ஹிந்தோளம் ஆகிய இராகங்களிலமைந்த தில்லானாக்களும் பொன்னையா அவர்களால் இயற்றப்பட்டு இன்றும் எம்மால் கையாளப்பட்டு வருபவையே. நாட்டியத்திற்காகவே வாழ்ந்த இவருக்குச் சந்ததி விருத்தி உண்டாகவில்லை.

தம் வாழ்நாள் முழுவதையும் நாட்டியக் கலைக்காகவும், மாணவர்களைத் தோற்றுவிப்பதற்காகவும் அர்ப்பணஞ் செய்த பொன்னையா அவர்கள் தமது அறுபதாவது வயதில் பிருகதீஸ்வரர் திருவடியை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | :- | பரதநாட்டியம் கிராமிய நடனம் என்பன பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார். |
| தேர்ச்சி மட்டம் 5.4 | :- | இலங்கையிலுள்ள பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளின் கலாசாரப் பின்னணியை விளக்குவார். |
| செயற்பாடு **5.4.1** | :- | யாழ்ப்பாண மரபில் தெருவெளி நாடகங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | :- | 80 நிமிடங்கள்.<br>(02 பாடவேளை) |
| தர உள்ளீடுகள் | :- | • தெருவெளி நாடகம் சம்பந்தமான ஒளிநாடாக்கள், இணைப்பு, படங்கள், தொலைக்காட்சிப் பெட்டி, ஒளி பதிவுக் கருவி<br>• செயற்பத்திரம் 5.4.2.1 |

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு

### படி 5.4.1

- தெருவெளி நாடகங்கள் அடங்கிய ஒளிநாடாக்கள், படங்கள் என்பவற்றைக் *காட்சிப்படுத்துங்கள்.*
- யாழ்ப்பாண மக்களின் கூத்து மரபுபற்றி மாணவர்களுடன் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாகக் கலந்துரையாடவும்.

> ☞ தெரு வெளி நாடகம் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கம்.
> ☞ அது பிற்காலத்தில் எவ்வாறு பெயர் பெற்றது?
> ☞ தோற்றம் அதற்கான வரலாற்றுக் காரணங்கள்.
> ☞ தெருவெளி நாடகத்தின் கதைக் கருக்கள்.
> ☞ பார்வையாளருடன் தொடர்புபடும் முறைமை
> ☞ அரங்கம்
> ☞ தெருவெளி நாடகம் 1980 களின் பின் முக்கியத்துவம் பெறுகின்றமை.
>
> (10 நிமிடங்கள்)

### படி 5.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினையும் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற் கேற்பச் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படி 5.2.3

- ஒவ்வொரு குழுவினரும் தமது பேறுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவும்.

> ☞ யாழ்ப்பாணத்தில் தெருவெளி நாடகத்தின் தோற்றத்திற்கான காரணங்கள்
>   - அரசியல்
>   - சமூகப் பிரச்சினைகள்
>
> ☞ இசை, ஆடை, ஒப்பனை, நடிப்பு முறைகள் மிகவும் சாதாரணதாயும் இயல்பாயும் அமைந்திருந்தன.
>
> ☞ கருப்பொருள் அரசியலை மையமாகக் கொண்டிருந்தன.
>
> ☞ காலப்போக்கில் இவற்றைத் தெருக்கூத்து என்றும் மக்கள் அழைத்தனர்.
>
> ☞ மக்கள் அதிகளவு கூடும் வீதியே இதன் அரங்கமாகும்.
>
> ☞ தெருவெளி நாடக மரபு யாழ்ப்பாண மக்களிடையே ஆரம்பந்தொட்டு நிலவி வந்துள்ளது.
>
> ☞ தேவைகள் மாறுபட்டிருந்ததால் கருப்பொருள்களும் மாறுபட்டிருந்தன.
>
> ☞ நாடகம் மக்களிருக்கும் இடம் நோக்கிப் போகும் பண்பு.
>
> (10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- யாழ்ப்பாணத்தில் தெருவெளி நாடகத்தின் தோற்றத்திற்கான காரணம் பற்றிக் கூறுவார்.
- தெருவெளி நாடகத்தின் கதைக்கரு பற்றிக் கூறுவார்.
- நாடகம் மக்களிருக்கும் இடம் நோக்கிப்போகும் பண்பு பற்றிக் கூறுவார்.

## செயற்பத்திரம் 5.4.2.1

**(சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.)**

> - தெருவெளி நாடகம் 1980 களின் பின் முக்கியத்துவம் பெற்றமைக்கான காரணங்கள் பற்றி விளக்குக.
> - இந் நாடகங்களின் கருப்பொருள் பற்றிக் கூறுக.
> - இந் நாடகத்தின் அரங்கு பற்றிக் கூறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

யாழ்ப்பாணக் கூத்து மரபில் வீதி நாடகம் அல்லது தெருவெளி நாடகம் என்னும் ஒரு அம்சமும் சிறப்புற்றுக் காணப்பட்டிருந்தது.இந் நாடக வடிவம் மக்களோடு நேரடியாக உறவாடுகின்ற வலிமை வாய்ந்தது. பாத்திரங்கள் பார்வையாளருடன் உரையாடுதல் மூலம் இப்பங்களிப்பினைப் பெற முடியும்.

ஆரம்பகாலம் தொட்டு இந் நாடக வழக்கு நிலவி வந்தபோதும் காலத்தின் தேவைக்கேற்ப அதன் கதைக்கருக்கள், களம், ஆட்ட முறைகள் என்பன சற்று மாறுபட்டுச் சென்றுள்ளன.

1984ம் ஆண்டு கலப்பகுதியில் இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையும் தொடர்ச்சியான அவசரகால நிலையும், ஊரடங்குச் சட்டங்களும் கலை நிகழ்வுகள், நாடகங்கள் எதுவும் இடம் பெறாமலாக்கின. இக்காலகட்டங்களில் சமகாலப் பிரச்சினைகளை ஊடுபாவாக வைத்துத் தமிழ் மக்களின் மத்தியில் வழங்கி வரும் பாரம்பரிய இசை, நடன வடிவங்களையும் கலந்து நவீன உத்திகளையும் இணைத்து சோடனைகளாலும் திரைச்சீலைகளாலும் மறைக்காது திறந்த வெளிகளில் பொதுவாக பெருந்தெருக்களின் சந்திகள் அல்லது மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் மத்தளத்தை முழக்கி மக்கள் கூடும் பொது இடங்களில் இந்நாடகத்தை நடத்தினார். நாடகம் இருக்கும் இடத்தை மக்கள் நோக்கி வராமல் மக்கள் இருக்குமிடத்தை நோக்கிப் போகும் பண்பு இதனால் உருவாகியது.

இந்நாடக வடிவங்களுக்கு முன்னோடி நாடகம் 1982 ம் ஆண்டுப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டது. அரசியலின் போலித் தன்மையை விளக்கி இடம் பெற்ற நாடகம் ‘‘திருவிழா’’ ஆகும். 1985இன் பின்னர் இவ்வீதி நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் முக்கிய இடம் பெறத் தொடங்கின.

அரசியல் இயக்கங்கள் தமது கருத்தினைக் கூற இந்நாடக வடிவத்தினை ஒரு சாதனமாகப் பயன்படுத்திய பண்பையும் காணலாம். ‘‘புது யுகம் மலர்கிறது’’ இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

ஈழத்து நாடக மரபில் தெருக்கூத்து எனும் அம்சம் இருக்கவில்லை. இது இந்திய நாடக மரபிற்குரிய ஒரு அம்சமாகும். எனினும், தெருக்களின் சந்திகளிலே இந் நாடகம் இடம் பெற்றதால் பிற்காலத்தில் இதனை மக்கள் தெருக் கூத்து எனவும் அழைக்கத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி III
# கணிப்பீடும் மதிப்பீடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. கணிப்பீடும் மதிப்பீடும்

## 6.1

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத் திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டு கொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சி களை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங் காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student-Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற் பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்ப தற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்துகொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டுகொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டுகொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்ளுங்கள்.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்யுங்கள். இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ப்பத்திரிகை (Wall News Papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- சமயோசிதப் பேச்சு (Impromptu Speeches)
- நடிபங்கு (Role Plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books / Nature Diaries)
- செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற் பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத் தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியுமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.2

- மாணவர் கற்றலில் உயர்மட்ட அடைவைப்பெற வேண்டுமாயின் தொடர்ச்சியான கணிப்பீட்டிற்கு உட்படுத்துவது அவசியமாகும்.

- கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போதும், பாட அலகுகளின் முடிவிலும், ஒவ்வொரு தவணை முடிவிலும், ஆண்டு இறுதியிலும் கணிப்பீடும் / மதிப்பீடும் செய்யப்படும்.

- பரத நாட்டிய கணிப்பீட்டில் அறிமுறை, செய்ம்முறை ஆகிய இரண்டும் இடம்பெற வேண்டும்.

- இரசித்தல், ஆக்கத்திறன் என்பவை தொடர்பான கணிப்பீட்டிற்கு வகுப்பறையில் கூடிய சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அவற்றை அவதானிப்பதன் மூலம் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

- மாணவர்களின் அறிதல் ஆட்சித்திறன், மனவெழுச்சிப் பண்புகள், உளவியக்கத் திறன்கள், கற்றவற்றை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தும் ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்வதற்கு உதவுவதோடு அவர்களின் பலம், பலவீனம் என்பவற்றை இனங்கண்டு அவர்களுக்கு உதவும் வகையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தைப் பாடசாலைகளில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக முன்னர் கூறப்பட்ட மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.3.3 கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

## கருவி - 01

01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : தவணை - 01

02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம் : 1

03. கருவிக்குரிய பாடப்பகுதிகள் : 9.3.3

04. கருவியின் தன்மை :
- செயன்முறை

05. கருவியின் நோக்கம் :
- 5வது தத்தெய்தாம் அடவினைக் கொலுப்பிப்பர்.
- மூன்று காலங்களிலும் இவ் அடவினை அங்க சுத்தத்துடன் ஆடுவார்.

06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்:

ஆசிரியருக்கு :
- மாணவரைத் தனித்தனியாக ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஆடும் போது மதிப்பீட்டிற்குரிய நியதிகளுக்கேற்பக் கணிப்பீடு செய்க.

மாணவருக்கு :
- 5வது தத்தெய்தாம் அடவினைத் தாளத்துடன் கொலுப்பித்துப் பயிற்சி செய்க.
- குறித்த அடவினைத் திரிகாலங்களிலும் ஆடிப் பயிற்சி செய்க.

07. புள்ளி வழங்கும் நியதிகள் :
- கொலுப்பித்தல்
- அரைமண்டி
- அங்கசுத்தம், லயம்
- மூன்று காலங்களிலும் ஆடுவார்.
- சமர்ப்பணம்

08 புள்ளித்திட்டம் (நியதிகளுக்கேற்ப) :
- மிகநன்று - 04 புள்ளிகள்
- நன்று - 04 புள்ளிகள்
- சாதாரணம் - 02 புள்ளிகள்
- விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி

மேற்படி நியதிகள் ஒவ்வொன்றிலும் அவதானிக்கப்பட வேண்டிய அம்சங்கள் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொலுப்பித்தல் : தெளிவான உச்சரிப்புடன் ஜதிகளைக் கூறுதல். தாளத்திற்கமைய, லயப் பிடிப்புடன் திரிகாலங்களிலும் கொலுப்பித்தல்.

- அரைமண்டி : ஆயத்த நிலையைச் சுத்தமாகக் கடைப்பிடித்தல். பாதங்களின் விரிந்த நிலை, கோடு போல் பாதங்கள் இருத்தல்.

- அங்க சுத்தம், லயம் : லயப்பிடிப்புடன் ஆடுதல், அங்கசுத்தம், அடவு சுத்தம் இவற்றைக் கவனித்தல்.

- திரி காலங்களிலும் ஆடுவர் : முதலாம் காலம், இரண்டாம் காலம், மூன்றாம் காலம் ஆகிய திரிகாலப் பிரமாணங்களில் ஆடுதல்.

- சமர்ப்பணம் : மேற்கூறிய நான்கு அம்சங்களும் பொருந்திய ஒரு முழுமையான வெளிப்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி - 02

| | | | |
|---|---|---|---|
| 01. | கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் | : | தவணை - 02 |
| 02. | உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம் | | 4.4 |
| 03. | கருவிக்குரிய பாடப்பகுதிகள் | : | தேவஹஸ்தங்கள் |
| 04. | கருவியின் தன்மை | : | • போட்டி |
| 05. | கருவியின் நோக்கம் | : | • மாணவர்கள் வினாக்களைத் தயாரித்தல்<br>• அவ்வினாக்களுக்குரிய விடைகளை அறிந்து கொள்ளல்.<br>• போட்டியில் பங்குபற்றுதல். |

06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்:

| | | |
|---|---|---|
| ஆசிரியருக்கு | : | • மாணவரை இரு குழுக்களாகப் பிரித்து வினாக்களைத் தயாரிக்கும்படி அறிவுறுத்துக.<br>• தயாரிக்கப்பட்ட வினாக்களுக்கு விடைகளை அறிந்து கொள்ளல்.<br>• போட்டியினை உரிய தினத்தில் நடாத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்க. |
| மாணவருக்கு | : | • வினாக்களைப் பட்டியற்படுத்துக.<br>• வினாக்களுக்குரிய விடைகளைக் குறிப்பிடுக.<br>• உரிய தினத்தில் போட்டியினை நடாத்துக. |

07. புள்ளி வழங்கும் நியதிகள் :
- தரமான வினாக்களைத் தயாரித்தல்
- குழுச்செயற்பாடு
- போட்டி நடாத்தும் முறை
- போட்டியில் வெற்றி பெறல்
- உடனடித் துலங்கல்

08 புள்ளித்திட்டம் (நியதிகளுக்கேற்ப)
- மிகநன்று - 04 புள்ளிகள்
- நன்று - 03 புள்ளிகள்
- சாதாரணம் - 02 புள்ளிகள்
- விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி - 03

01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : தவணை - 03

02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம் 4.6

03. கருவிக்குரிய பாடப்பகுதிகள் : அடவு, தீர்மானம், சொற்கட்டு, கோர்வை.

04. கருவியின் தன்மை : • வினாவிடைப் புத்தகம்

05. கருவியின் நோக்கம் : • அடவு, தீர்மானம், சொற்கட்டு, கோர்வையினை அறிவார்.

06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்:

ஆசிரியருக்கு :
- செயற்பாட்டை ஆரம்பிக்கும் முன்னர் இக்கருவி பற்றி வகுப்பிற்கு அறிமுகஞ் செய்க.
- வினாவிடைப் புத்தகம் தயாரிக்கும் முறை பற்றிய அறிவுறுத்தல்களை மேற்கொள்க.
- வினாக்களின் வகைகள் பற்றி மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குக.
  உதாரணம் : சுருக்கமான வினாவிடை
  இடைவெளி நிரப்புதல்
- அடவு, தீர்மானம், சொற்கட்டு, கோர்வைகள்.

மாணவருக்கு :
- கொடுக்கப்பட்ட பகுதிகளில் வினாக்களை விடைகளுடன் தயாரிக்குக.
- கொடுக்கப்பட்ட கால அளவினை ஆசிரியரிடம் கேட்டு அறிக.
- ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாகச் செயற்பாட்டில் ஈடுபடுக.

07. புள்ளி வழங்கும் நியதிகள் :
- தயாரிக்கப்பட்டுள்ள வினாக்களின் தன்மையும் தரமும்
- வினாக்கள் மாணவரின் சுய ஆக்கமாக இருத்தல்.
- விடைகளின் பொருத்தப்பாடு.
- உற்சாகத்துடன் செயற்படல்.
- குறித்த காலத்தில் சம்ர்ப்பித்தல்.

08 புள்ளித்திட்டம்
(நியதிகளுக்கேற்ப)
- மிகநன்று - 04 புள்ளிகள்
- நன்று - 03 புள்ளிகள்
- சாதாரணம் - 02 புள்ளிகள்
- விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය
භරත නාට්‍යය 9 (දෙ)

2010/T/09/TIM/2,500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org